# இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: சவால்களும் எதிர்பார்ப்புகளும்

**பேராசிரியர் கமலா லியனகே**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

தமிழில்:
இரா.ரமேஸ், பேராதனைப் பல்கலைக்கழகம்
சோபனாதேவி ராஜேந்திரன், பேராதனைப் பல்கலைக்கழகம்

**வெளியீடு**
**ப்ரெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங் (FES) - 2012**

ப்ரெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங் வெளியீட்டு இலக்கம் 96
கட்டுரையாளரின் அனுமதியின்றி பயன்படுத்துவது
தடைசெய்யப்பட்டுள்ளது.
லியனகே கமலா 2012
மின்னஞ்சல் : imiyakamala@yahoo.com

இலங்கை தேசிய வாசிகசாலை சம்மேளனம்

வெளியிடுவோர் விபரம்
லியனகே கமலா

லியனகே கமலா

- இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: சவால்களும் எதிர்பார்ப்புகளும்
- அரசறிவியல்
- பெண்கள் ஆய்வு

தமிழில்: இரா.ரமேஷ், சோபனாதேவி ராஜேந்திரன், பேராதனைப் பல்கலைக்கழகம்

ISBN 978-955-1282-04-2
வெளியீடு
ப்ரெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங்
இல. 4, எடம்ஸ் மாவத்தை, கொழும்பு – 04

தொலைபேசி : 011-2502710

பக்க வடிவமைப்பு மற்றும் அட்டைப்படம்
சசிக குணதிலக்க

அச்சிடல்
வரையறுக்கப்பட்ட கண்டி ஓப்செட் அச்சகம்
947. பேராதெனிய வீதி,
கண்டி.
081-2389889

**உள்ளடக்கம்**

**பக்க இலக்கம்**

அறிமுகம் iv

1. கோட்பாட்டு ரீதியான பிரவேசம்: பெண்களின் பிரதிநிதித்துவமும் உள்ளூராட்சி அரசாங்கமும் 1

2. இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 12

3. அரசியல் பிரதிநிதித்துவத்தில் பெண்களுக்கு உள்ள சவால்களை வெற்றிக் கொள்வதற்காக பயன்படுத்திய உபாய முறைகள் 22

4. உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவ வளர்ச்சி: சமாதானம் மற்றும் நல்லாட்சிக்கான பெண்களின் (WPGG) செயற்றிட்டம் 30

5. 2011 உள்ளூராட்சி தேர்தல்கள், மத்திய மாகாணம்: ஆண் - பெண் பிரதிநிதித்துவத்தில் செல்வாக்கு செலுத்திய விடயங்கள் தொடர்பிலான பகுப்பாய்வு 48

உசாத்துணை நூற்பட்டியல் 104

# அறிமுகம்

இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுவதோடு இதன் விகிதாசாரம் (பாராளுமன்றம்) 5.8% (மாகாண சபைகள்) 4.1% மற்றும் (உள்ளூராட்சி நிறுவனங்கள்) 1.9% ஆகும். இது ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை குறைந்த விகிதாசாரத்தையே பெற்றுள்ளது. மாறாக தென்னாசிய நாடுகளில் பெண்களின் கல்வி மற்றும் தொழில் போன்றனவற்றை இலங்கைப் பெண்களோடு ஒப்பிடும் போது குறைந்த வளர்ச்சியினையே பெற்றுள்ளனர். எனினும் உள்ளூராட்சி நிறுவனங்களில் அவர்கள் அதிகமாகப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இந்த இடைவெளியை குறைத்துக்கொள்வதற்கு தென்னாசிய நாடுகள் மற்றும் ஏனைய பல நாடுகளும் பல்வேறு உபாயமுறைகளைப் பின்பற்றின. 2007 – 2011 இடைப்பட்டக் காலத்தில் சமாதானம் மற்றும் நல்லாட்சிக்கான பெண்கள் அமைப்பு (WPGG) இலங்கையின் மத்திய மாகாணத்தில் உள்ளூ ராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை உயர்த்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டது.

இந்த செயற்பாடுகளின் முக்கிய நோக்கமாக மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை உயர்த்தல் என்ற எதிர்பார்ப்பு அதேவகையில் நிறைவேறாவிட்டாலும், 2011 வரை 6 ஆக இருந்த பெண் பிரதிநிதித்துவம் 10 ஆக வளர்ச்சியடைந்துள்ளது. 2011 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளில் 7 பேர் புதியவர்கள். சமாதானம் மற்றும் நல்லாட்சிக்கான பெண்களின் செயற்றிட்டத்தின் கீழ் சமூகத் தலைவர்கள் 52 பேர் அரசியல் தலைமைத்துவ பயிற்சிகளைப் பெற்றிருந்தாலும், பெரும்பாலானோருக்கு வேட்புமனுக்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. வேட்புமனுக்களை பெற்றவர்களிலும் தேர்தலில் வெற்றிப் பெற்றவர்கள் மிகவும் சொற்பமானவர்களே. அவ்வாறு பெண்கள் பெரும்பான்மையினர் தோல்வியடைவதற்கும், ஆண்கள் பெரும்பாலானவர்கள் வெற்றி பெறுவதற்குமான காரணங்களை ஆராய்ந்து, 2015 உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல்களில் அதிக பெண்களை வெற்றிபெறச் செய்ய கடைபிடிக்க வேண்டிய உபாயமுறைகள் என்னவென்பதை கண்டறிவது இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். 2015 உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்னதாக, இதில் போட்டியிட விரும்பும் பெண்களின் முன்னாயத்தத்திற்கு இந்த நூல் பயனுள்ளதாக அமையும். அத்தோடு அரசறிவியலிலும், பெண்கள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுபவர்களுக்கும், பெண்களின் பிரதிநிதித்துவத்தினை வளர்ப்பதில் ஈடுபாடுகாட்டும் அரசியல்வாதிகள்

மற்றும் செயற்பாட்டாளர்கள் குறித்த துறை தொடர்பில் செயற்படுகின்ற பயிற்றுவிப்பாளர்களுக்கும் இந் நூலினூடாக முக்கியமான தகவல்கள் பலவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் கருத்துக்கள், 2011 உள்ளூ ராட்சி தேர்தல்களில் வெற்றிபெற்ற ஆண் - பெண் இருசாராரும் இதற்காகப் பயன்படுத்திய உபாயமுறைகள், அதிகளவான பெண்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள், எதிர்காலத்தில் பெண்கள் தேர்தல்களில் வெற்றிபெற கடைப்பிடிக்க வேண்டிய உபாய முறைகள், பெண்களின் பிரதிநிதித்துவத்தினை அதிகரிக்கத் தேவையான பொது ஆலோசனைகள் என்பன இந்த நூலில், எளிமையாக விபரிக்கப்பட்டுள்ளது. இதனால் இது தொழிற்சங்கவாதிகளுக்கு மட்டுமன்றி பொது மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

இவ் ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும், பல்வேறு நபர்களிடமிருந்தும் போதுமான ஒத்துழைப்புகள் கிடைத்தன. இந்த ஒத்துழைப்புகள் கிடைக்காமல் போயிருப்பின் இந்த செயற்பாட்டினை ஒருவேளை செய்ய முடியாமல் போயிருக்கும்.

முதலில் இச் செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் FLICT, பெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங் (Fedrich Ebert Stiftung) மற்றும் Women Defining Peace போன்ற நிறுவனங்கள் பல்வேறு வகைகளில் வழங்கிய ஒத்துழைப்புகள் மற்றும் தூண்டுதல்களை கருணையுடன் நினைவூட்டுகின்றேன். அத்தோடு, இந்த ஆய்வுக்கு எங்களை தூண்டி இவ்வகையானதொரு கட்டுரையினை வெளியிடுவதற்கு பல்வேறு வகைகளில் ஒத்துழைப்புகளை வழங்கிய பெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங் நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி நோரா லன்டன்பர்கர் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் ரோகிணி பீரீஸ் உள்ளிட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் மேலான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் போதும், ஆய்வுகளின் போதும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கிய கண்டியின் முன்னாள் மாவட்ட செயலாளர் திரு கோதாபய ஜயரத்ன, நுவரெலியா மாவட்டச் செயலாளர் திரு டி.பி.ஜி. குமாரசிறி, மத்திய மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களினது செயலாளர்களுக்கும், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 4 ஆண்டுகளாக எம்மோடு ஒன்றிணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் பெண்கள் சங்கங்களின் தலைவிகள் மற்றும் ஏனைய சமூகத் தலைவிகளுக்கும் உளப்பூர்வமான நன்றியைக் கூறுகின்றேன். மேலும், இச் செயற்பாடுகளில் கூட்டங்கள்

மற்றும் கலந்துரையாடல்களில் பங்குபற்றி தமது உழைப்பையும் நேரத்தையும் தியாகம் செய்த உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், குறிப்பிட்ட புள்ளிவிபரங்களை வழங்கிய நவயாலதென்ன உள்ளூராட்சி நிறுவன பயிற்சிக்கான மத்திய நிலையத்தின் செல்வி பிரபா ஹேரத் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

விஷேடமாக இந்த செயற்பாடுகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் அதிக சிரத்தையுடன் ஒத்துழைப்பு நல்கிய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஷோபனா இராஜேந்திரன் (பொருளியல்), விரிவுரையாளர் மயுரி ஹேரத் மற்றும் ஆர். ரமேஷ், டி. உமாதேவி போன்ற சகோதர சகோதரிகளின் ஒத்துழைப்புகளையும் எந்நேரமும் பெறுமதியானதாகக் கருதுகின்றேன்.

சமாதானம் மற்றும் நல்லாட்சிக்கான பெண்களின் செயற்றிட்டத்தினை சாத்தியமாக்கிக் கொள்ள இரவு பகல் பாராமல் வில்கமுவ முதல் மினிபே வரையும், மத்திய மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் சென்று காலம் மற்றும் உழைப்பினை வழங்கிய ஷோபனா, நந்தா, ஹர்ஷி மற்றும் கார்த்தி போன்றோருக்கு எனது விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்த நூலில் காணப்படும் குறைபாடுகளை வாசித்து பல்வேறு கருத்துக்கள் வழங்கிய பேராசியர் சிறிமா கிரிபமுனே, பேராசிரியர் எஸ். டபிள்யு. ஆர். டி. ஏ. சமரசிங்ஹ மற்றும் காந்தி கமகேவுக்கும், கனணி எழுத்துருவாக்கத்தினை செய்த செல்வி ஹர்ஷனி ஹலியத்தவுக்கும் உண்மையான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆய்வு வாழ்வில் அநேகமாக பொறுப்புகளை அம்மாவாக சிறப்பாக விளங்கிக் கொண்டு, வேறுபட்ட வாழ்க்கைக்கு வழிகாட்டும் எனது மகளான ஜனேத்திக்கும், என்னால் ஒருதிசை வாழ்க்கைக்கு பயிற்றப்படுவதற்கு பல்வேறு தியாகங்களை செய்த அசோகவையும் உளமார வாழ்த்துகின்றேன்.

கமலா லியனகே.
சிரேஷ்ட பேராசிரியர்,
அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.
imiyakamala@yahoo.com

# 1

# கோட்பாட்டு ரீதியான பிரவேசம்: பெண்களின் பிரதிநிதித்துவமும் உள்ளூராட்சி அரசாங்கமும்

1978ம் ஆண்டு அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டதன்படி இலங்கையானது ஜனநாயக சோசலிஸ குடியரசாகும். ஜனநாயக அரசியல் முறைமையின் அடிப்படை குணாம்சங்கள் இறைமை மக்களிடம் இருத்தல், சமத்துவம், சுதந்திரம், அடிப்படை உரிமைகள், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல், சர்வஜன வாக்குரிமை, போட்டி கட்சி முறைமை, சட்டத்தின் ஆட்சியும் சுயாதீனமான நீதித்துறை மற்றும் சுதந்திர ஊடகத்துறை என்பனவாகும் (Garner; Johari, 1999). ஜனநாயக வரலாறு புராதான கிரேக்க நகர அரசு வரை நீண்டு செல்வதோடு, அக்காலத்தில் மக்கள் ஒன்றிணைந்து தமது அரசு தொடர்பிலான தீர்மானம் எடுக்கும் முறையில் நேரடி ஜனநாயக முறைமையை பின்பற்றினர். எனினும், நவீன உலகில் அதிகரித்த சனத்தொகை, அரசுகளின் பூகோள ரீதியான பரவல் போன்ற பல்வேறுபட்ட காரணங்களால் மக்கள் தமது பிரதிநிதிகள் ஊடாக நாட்டை ஆட்சிசெய்யும் முறைமை அல்லது பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமை செயற்படுகின்றது. இதனை மறைமுக ஜனநாயக முறை எனவும் அடையாளப்படுத்துவர். ஜனநாயக கோட்பாட்டிற்கு ஏற்ப, நாடொன்றில் சட்டப்பூர்வமாக பிரஜைகள் அனைவருக்கும் ஆண் - பெண் பாகுபாடு இல்லாமல் ஆட்சி நிறுவனங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் போன்றே தெரிவாவதற்குமான உரிமை, இல்லையேல் இறைமை உண்டு. இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளில் இறைமை மக்களிடம் உண்டு என அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, அரசியல் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகள் என்பன இலங்கை உட்பட பெரும்பாலான ஜனநாயக நாடுகளின் அரசியலமைப்புகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மனித உரிமைகளில் சர்வஜன வாக்குரிமை போலவே பிரதிநிதித்துவத்திற்கான உரிமையும் ஆண் - பெண் இருசாராருக்கும் சமமாகக் கிடைக்கும் உரிமையாகும். மேலும்,

நாடொன்றில் ஜனநாயக அரசியல் முறைமையை சாத்தியமாக்கிக் கொள்வதற்கு மக்கள் இவ்விரு உரிமைகளையும் பயன்படுத்தல் அத்தியாவசியமானதாகும். ஏதாவது நாட்டில் பிரஜைகளுக்கு அரசியல் அமைப்புகளில் இவ் உரிமைகளை உறுதிப்படுத்தி இருந்தாலும், பிரயோக ரீதியாக பெண்கள் அல்லது ஆண்கள் அல்லது வேறு இனக்குழுக்களுக்கு இவ் உரிமைகளை உண்மையான வகையில் அனுபவிக்க முடியாவிடின், அந்நாட்டில் ஜனநாயக ரீதியான அரசியலமைப்பொன்று உண்டௌன கருத முடியாது. மக்களின் இறைமையை நடைமுறைப்படுத்தும் சட்டத்துறை மற்றும் நிர்வாகத்துறை போன்ற நிறுவனங்களில் உதாரணமாக 95% பெண்கள் பிரதிநிதித்துவம் செய்து ஆண்கள் 5% மட்டும் பிரதிநிதித்துவம் செய்தால் அது உண்மையான பிரதிநிதித்துவம் அல்லது உண்மையான ஜனநாயகம் என்று கருத முடியாது.

ஜனநாயக அரசியலமைப்பொன்றினை தாங்கி நிற்கும் பிரதான மூன்று கற்றூண்களாக மனித உரிமைகள், சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்பன கருதப்படுகின்றன. ஆண் - பெண் வேறுபாடுகளின்றி நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கை, தனிநபர் அபிவிருத்தி, அடையாளம் மற்றும் கௌரவமாக வாழ்க்கையினை கொண்டு நடாத்துவதற்கான நிபந்தனைகள் சமமான வகையில் தேவையாகும். இந் நிபந்தனைகளை எளிமையான முறையில் விபரிக்கின்றபோது அதனை மனித உரிமைகள் என அடையாளப்படுத்துவர் (Cranston, 1973). சமூக, கலாசார, பொருளாதார உரிமைகளைப் போலவே, அரசியல் உரிமைகளில் மனித வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான நிபந்தனை அடிப்படை உரிமையாகும் என இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகள் அரசியலமைப்புகளில் உறுதிபடுத்தியுள்ளன. ஏனைய உரிமைகள் பொதுச் சட்டம், பாராளுமன்ற சட்டத்திட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டங்கள் மூலமும் பாதுகாக்கப்பட்டுள்ளன. அரசியல் உரிமைகள் பிரிவுக்குள் உள்ளடக்கப்படும் வாக்களித்தல், பிரதிநிதித்துவம், தேர்தல் நடவடிக்கைகளில் பங்குபற்றல், அரசியல் கட்சிகளை உருவாக்கிக் கொள்ளல் மற்றும் அதனோடிணைந்த செயற்பாடுகளில் பங்குபற்றல், அரசாங்கத்தை விமர்சித்தல் மற்றும் தீர்மானம் எடுப்பதில் நேரடியாக அல்லது மறைமுகமாக அமைதியான முறையில் பங்குபற்றல் என்பன ஆண் - பெண் அல்லது வேறெந்த பாகுபாடுகளும் இல்லாமல் ஒரு நாட்டின் அனைத்து குடிமக்களும் அனுபவிக்கும்போது, அது அரசின் அழுத்தம் இல்லாமல், வேறு நபர்களின் சுதந்திரத்திற்கு தடைகள்

ஏற்பாடாவண்ணம், சுயாதீனமாக அனுபவிக்கும் சுதந்திரம் அனைத்து மக்களுக்கும் சமமாக கிடைக்கின்றது.

சமத்துவம் என்பது நேர்கணிய மற்றும் எதிர்மறை சமத்துவம் என வகைப்படுத்தப்படுகின்றது. எதிர்மறை சமத்துவம் என்பதன் மூலம் பொருள் கொள்ளப்படுவது யாதெனில் “பால்நிலை, இனம், மனித வர்ணங்கள், மனித வர்க்கம், மொழி, குலம், வகுப்பு அல்லது வேறெந்த வேறுபாடுகளுக்கும் உட்படாமல், அனைவருக்கும் சமமான சுதந்திரம், சமமான கவனிப்பு, சமமான வாய்ப்பு மற்றும் சமமான வளங்களைப் பெற்றுக்கொடுத்தல்” என்பனவாகும் (Laski, 1951). நேர்கணிய சமத்துவத்தின்படி அறியப்படுவது “மனிதர்கள் ஒவ்வொருவருக்கிடையிலும் தனிப்பட்ட தேவைகள் மற்றும் அபிவிருத்திக்கு அவசியமான தேவைகள் மாறுபடக்கூடியது. இந்த வேறுபாடுகளுக்கு ஏற்றவகையிலான வாய்ப்புகளையும் வளங்களையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்” என்பதாகும் (Benn and Peters, 1965). உதாரணமாக ஆண்களின் உடலியல் மற்றும் சமூக தேவைகளைக் காட்டிலும் பெண்களின் சில தேவைகள் மாறுபடும் சந்தர்ப்பங்களில், இந்த மாற்றங்களைக் கருத்திற்கொண்டு குறித்த வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதாகும். இதில் முதலாம் எண்ணக்கருவுக்கு ஏற்ப, சமமான மனித உயிரிகளாக ஆண் - பெண் இருசாராருக்கும் பிரதிநிதித்துவத்திற்கான சமமான வாய்ப்புகள் கிடைக்கப்பட வேண்டும். இரண்டாவது எண்ணக்கருவுக்கு ஏற்ப, ஆண் - பெண் இருசாராரினதும் சில தேவைகள் மற்றும் அவசியப்பாடுகள் மாறுபடுவதால், அம் மாறுபட்ட தேவைகளைப் பிரதிநிதித்துவம் செய்ய இருசாராருக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும்.

இதனை விடுத்து நல்லாட்சியை வெற்றி கொள்ளவும் ஆண் - பெண் இருசாராரினதும் உண்மையான பங்குபற்றல், அரசு போலவே சிவில் செயற்பாடுகளிலும் அத்தியாவசியமாகும். ஏதாவது நாட்டில் அரசியல் உள்ளிட்ட பொது செயற்பாடுகளில் பெண்களை அல்லது ஆண்களை தூரப்படுத்தி, ஒரு சாராருக்கு மாத்திரம் இந்த செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படுமானால் இதன்போதும் பிரச்சினைகள் ஏற்படும் (Panandiker, 2000). நிலைத்தகு அபிவிருத்திக்காகவும் ஆண் - பெண் இருசாராரினதும் பங்குபற்றல் அத்தியாவசியமானதாகும். நாட்டின் அபிவிருத்தி வாய்ப்புகளை அடையாளங் காணும்போதும், அதற்கு

முன்னுரிமை அளிக்கும்போதும், குறித்த திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு மற்றும் பிரதிபலன்களை அனுபவிக்கும்போதும் ஆண் - பெண் இருசாராரினதும் தேவைகள் மற்றும் அனுபவங்கள் கட்டாயமாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் (Young, 1993). முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் சமாதானத்தை உருவாக்குதலிலும் ஆண் - பெண் இருசாராரினதும் பிரதிநிதித்துவம் அத்தியாவசியமானதாகும். அவ்வாறில்லையேல் நிலைத்தகு சமாதானத்தை வெற்றிகொள்வது கடினமானதாகும் (Skjelsbaek and Smith, 2001). இதன்படி உண்மையான ஜனநாயக அரசியல் முறையொன்றினுள் நல்லாட்சி, நிலைத்தகு அபிவிருத்தி மற்றும் நிலைத்தகு சமாதானம் என்பவற்றை வெற்றிகொள்ள கட்டாயமாக தீர்மானம் எடுக்கும் அனைத்து மட்டங்களிலும் ஆண்-பெண் இருசாராரும் பிரதிநிதித்துவம் செய்வது கட்டாயமானதாகும்.

## பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான தேவை: கோட்பாட்டு ரீதியான தர்க்கம்

பெண்கள் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டுமா எனும் வினா அண்மைக்கால பெண்கள் தொடர்பான ஆய்வுகளில் பெரிதும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் பெண்ணியல்வாத அரசியல் நிபுணர்களால் செய்யப்பட்ட பல்வேறு ஆய்வுகளில் இது தொடர்பான சட்டப்பூர்வமான கோட்பாடுகள் சில முன்வைக்கப்பட்டுள்ளன (Boutilier, 1970). அவையாவன,

i. சமத்துவம் தொடர்பான தர்க்கம்
ii. நியாயத்துவம் தொடர்பான தர்க்கம்
iii. அடையாளவாத தர்க்கம்
iv. விருப்பங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான தர்க்கம்
v. பிரயோக வாதம் / அனுபவம் தொடர்பான தர்க்கம்
vi. முன்மாதிரி அனுபவம் தொடர்பான தர்க்கம்

### I. சமத்துவம் தொடர்பான தர்க்கம்

ஜனநாயக அரசியல் முறையொன்றின் அடிப்படை குணாம்சமாக கருதப்படும் சமத்துவத்தை நடைமுறைப்படுத்தும் போது பால்நிலை வேறுபாடு அல்லது வேறெந்த

வேறுபாடுகளையும் கருதாமல், பல்வேறு இனக்குழுக்களின் பிரதிநிதித்துவதிற்கு அனைத்து பிரஜைகளுக்கும் சமமான உரிமை கிடைக்கின்றது. இந்த சமத்துவம் இலங்கை உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளில் அரசியல் அமைப்புகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆணோ பெண்ணோ ஒரு நாட்டின் குடிமகன். இதன்போது குடியுரிமை முதலாம் நிலை இரண்டாம் நிலை என பாகுபடுத்தப்படுவதில்லை. பெரும்பாலான நாடுகளில் சனத்தொகையில் அரைவாசியினர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பெண்களாவர். ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினரின் விருப்பம் என அர்த்தப்படுத்தப்படுகின்றமையால், சனத்தொகையில் அரைவாசியினர் அல்லது பெரும்பானமையினராக உள்ள பெண்கள் அல்லது ஆண்களை அரசியல் பிரதிநிதித்துவத்தில் இருந்து விலக்கிவைத்துவிட்டு ஜனநாயகத்தை வெற்றிகொள்ள முடியாது.

## II. நியாயத்துவம் தொடர்பான தர்க்கம்

மனித உரிமைகள் தொடர்பிலான சர்வதேச சட்டம் மற்றும் பிரகடனங்கள் மூலம் தீர்மானம் எடுக்கும் அனைத்து மட்டங்களிலும் ஆண் - பெண் இருசாராருக்கும் உள்ள உரிமைகள் மற்றும் நியாயம் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. என். பிலிப் அவர்களின் கருத்துப்படி பெண்களின் பிரதிநிதித்துவத்தினை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய சிறந்த தர்க்கம் இதுவாகும் (Philips, 1995). ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் (1966) 25ஆம் உறுப்புரையிலும், பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கும் சமவாயத்தின் (1981), 7ஆம் உறுப்புரையிலும் இந்த உரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. 1948ம் ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திற்கு ஏற்பவும், எல்லா மனிதர்களும் சமமாக பிறப்பதினால் சமமான வாய்ப்பு, சமமான கவனிப்பு மற்றும் சமமான கௌரவம் என்பன அனைவருக்கும் கிடைத்தல் வேண்டும். அவ்வாறு நடைபெறவில்லையாயின், ஒரு பிரிவினர் பாராபட்சங்களுக்கு உள்ளாவர். இது அரசியல் முறையமைவு தொடர்பில் சமூகம் மகிழ்ச்சியற்றதாக

அல்லது கீழ்நிலையான தன்மையாவதற்கும், பிரதிநிதித்துவ முறைமை தோல்வியடைவது போலவே ‘‘நிலமானிய முறைசார் ஜனநாயகம்’’ உருவாகுவதற்கும் காரணமாய் அமையும்.

## III. அடையாளத்துவ தர்க்கம்

அடையாளத்துவ தர்க்கத்தினை நியாயப்படுத்துவதற்காக நியாயபாட்டு தர்க்கத்தினை இரு வகையில் பயன்படுத்துகின்றனர். ஒன்றில் அவதானம் செலுத்தப்படுவது பெண்கள் அரசியல் நிறுவனங்களில் பிரதிநிதித்துவம் செய்வதில் பொதுவில் பெண்களின் தரங்களின் அபிவிருத்திக்காக பயன்பட முடியும் என்ற கருத்திலாகும். அத்தோடு, பெண்களின் அடையாளம், அவர்களுக்கு சமூகத்தில் கிடைக்கும் ஏற்புடைமை, கௌரவம் மற்றும் சமூக தரம் என்பன இதனால் வளர்ச்சியடையும். இரண்டாம் கருத்தின் மூலம் கருதப்படுவது பெண்களும் அரசியல் நிறுவனங்களில் பிரதிநிதித்துவம் செய்வதால் அதற்கு அதிக நேர்மைத்தன்மை கிடைக்கும் என்பதனாலாகும். சமூகத்தின் ஏதாவது சமூகக் குழுவொன்று அரசியல் தீர்மானம் எடுக்கும் நிறுவனங்களில் போதுமானளவு பிரதிநிதித்துவம் செய்யவில்லையாயின் அல்லது குறைந்தளவில் பிரதிநிதித்துவம் செய்தால், அந்த நிறுவனத்தின் சட்டப்பூர்வமான தன்மை அல்லது ஜனநாயகத் தன்மை தொடர்பில் உண்மையில் பிரச்சினையொன்று தோன்றும்.

இவ்வாறானதொரு நிலையில் அநீதிக்கு அல்லது பாரபட்சங்களுக்கு உள்ளாகும் மக்கள் குழு அதற்கு எதிராக எழுந்துநிற்கும் போக்கு ஏற்படவும் வாய்ப்புண்டு. அது நாடொன்றின் சமாதானத்திற்கு மட்டுமின்றி அரசியல் மற்றும் பொருளாதார நிலைப்பிற்கும் சவாலாக அமைய முடியும்.

## IV. விருப்பங்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான தர்க்கம்

ஆணும் பெண்ணும் சமமான மனித உயிரிகள் என்றாலும், பால்நிலை மற்றும் சமூகமயமாதல் மாறுபாடுகளால் அவர்களின் விருப்பங்கள், தேவைகள், ஒழுக்கங்கள் மற்றும் அவர்கள் ஒரு விடயம் தொடர்பாக பார்க்கும் கோணங்கள் போன்றனவும் மாறுபாடாக அமைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். உதாரணமாக பெண்களின் மகப்பேற்று

தேவைகளுக்கு அவசியமான வசதிகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதில் ஆண்களுக்கு மேலாக பெண்கள் அது தொடர்பில் உணர்வுபூர்வமான அக்கறை உடையவர்கள். அத்தோடு பெண்கள் மற்றும் பிள்ளைகளில் அதிகம் தாக்கம் செலுத்தும் வறுமை, மந்த போசனம், பிள்ளை பராமரிப்பு மத்தியநிலையம், பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பு போன்றன தொடர்பில் தீர்மானம் எடுக்கும்போது பெண்கள் கூடுதல் அவதானம் செலுத்தும் போக்கு உண்டு. ஆண்கள் தீர்மானம் எடுக்கும்போது தொழில்நுட்பம், கைத்தொழில், வெளிநாட்டு செயற்பாடு மற்றும் ஆயுதப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது வாங்குதல் தொடர்பில் அவதானம் செலுத்தும் போக்கு அதிகமாகும். ஆண் - பெண் இருசாராரும் பிரதிநிதித்துவம் செய்யும்போது, இக்குழுக்கள் இரண்டும் அதிக அக்கறை செலுத்தும் தேவைகளை தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பிரதிநிதித்துவம் செய்ய வழியேற்படும்.

மேலும், பெண்கள் சமூகமயப்படும் செயற்பாடு ஆண்களைவிட மாறுபட்ட முறையில் நடைபெறுவதால் அவர்கள் தீர்மானம் எடுக்கும் முறை, ஒரு பிரச்சினை தொடர்பில் பார்க்கும் கோணம் என்பன மாறுபடுவதற்கான வாய்ப்பும் அதிகமாகும். அதனால் போதுமானளவில் பெண்களையும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்குள் பங்குபற்றச் செய்து, இந் நிறுவனங்களைப் போலவே அரசியல் செயற்பாடுகளின் இயல்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகமாகும். இது சுவீடன், நோர்வே மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளில் அரசியல் நிறுவனங்கள் அதிக பெண்நேய நிறுவனங்களாக மாறுவதற்கும், இவற்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் 30 – 40% அளவில் வளர்ச்சியடையவும் நேரடியாக பங்களித்துள்ளது. அத்தோடு, இந்த பிரதிநிதித்துவ நிறுவனங்களில் தீர்மானங்கள் முன்னரைவிட சமூகநேயமானதால், போட்டித்தன்மை மற்றும் ஊழல் நிறைந்த அரசியல், நலன்புரி அரசியலாக மாறியுள்ள வாய்ப்புகள் தொடர்பில் அண்மைக்கால ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன (Dahlerup, 1988).

அவுஸ்திரேலியாவின் பாராளுமன்றப் பெண்கள் தொடர்பில் செய்யப்பட்ட சில ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன்படி அவர்கள் தீர்மானம் எடுக்கும்போது கலந்துரையாடல் மூலம் ஒன்றுபட்ட முடிவுகளுக்கு வரும் போக்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். அவுஸ்திரேலியாவின் செனட் சபை பெண் பிரதிநிதிகள், ஆண் உறுப்பினர்களையும் விட ஐந்து மடங்கு வீட்டு வன்முறைக்கும், சமமான ஊதியம் மற்றும் பிரசவகால விடுமுறை போன்ற விடயங்கள் தொடர்பில் மற்றும் சட்டங்களை முன்வைக்க தூண்டப்பட்டுள்ளனர் என்றும் அவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது (Sawer, 2000).

## V. பயனுடைமை / அனுபவம் தொடர்பான தர்க்கம்

அரசியல் பிரதிநிதித்துவ நிறுவனங்களில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த பெண்கள் போதுமானளவு இதற்குள் உள்வாங்கப்பட வேண்டும் என இவ்வாதம் அவதானம் செலுத்துகிறது. உலகில் பெரும்பாலான பிரதிநிதித்துவ நிறுவனங்கள் ஆண் தலைமை கட்டமைப்புடன் கூடியதாக இருப்பதோடு, பெண்களின் பிரதிநிதித்துவத்தின் மூலம் இந்த இயல்புகளை மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும் எனவும் தர்க்கிக்கப்படுகின்றது. பெண்களின் சில அனுபவங்கள் ஆண்களை காட்டிலும் மாறுபட்டதாகும். ஒருபுறம் பெண்களுக்கு ஆண்களுக்கு இணையான திறமைகள் உண்டு. மறுபுறம் மாறுபட்ட திறமைகளும் உண்டு. இக் கருத்தின் அடிப்படையில் அமைந்த பயனுடைமைவாத தர்க்கத்தில் இரு விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகின்றது. ஒன்று, பெண்களுக்கும் ஆண்களுக்கும் இணையான திறமைகள் உள்ளதால் தீர்மானம் எடுக்கும் அனைத்து மட்டங்களிலும் உண்மையாக பங்குபற்றும் திறன் உண்டு. அவ்வாறில்லையேல், நாட்டின் சனத்தொகையில் அரைவாசி திறமைகள் மற்றும் இயலுமைகள் வீணாக்கப்படும். இரண்டாவது கருத்துக்கு ஏற்ப, பெண்களின் சில திறமைகள் மற்றும் அனுபவங்கள் ஆண்களை காட்டிலும் மாறுபட்டுள்ளதால் சமமான வகையில் தீர்மானம் எடுப்பதற்காக கட்டாயமாக ஆண் - பெண் இருசாராரும் பங்குபற்ற வேண்டும். பெண்களின் பிரதிநிதித்துவத்தை எண்ணிக்கை அடிப்படையில் போதுமானளவு

அதிகரித்து அரசியல் பிரதிநிதித்துவ நிறுவனங்களில் புதிய பார்வை மற்றும் புதிய குறிக்கோள்களை பெற்றுக்கொடுக்க முடியும் என்பது இந்த தர்க்கத்தினால் வெளியிடப்படுகின்றது.

### VI. முன்மாதிரி அனுபவம் தொடர்பான தர்க்கம்

பெரும்பாலான சமூகங்களில் பல பரம்பரைகளாக அரசியல் போன்ற பொது செயற்பாடுகளில் பெண்கள் பங்குபற்றுவது மிக குறைவான வகையிலேயே ஆகும். இவ்வாறானதொரு நிலையில் அரசியல் தொடர்பில் ஈடுபாடு காட்டும் பெண்களுக்குமே சிரேஷ்ட பெண் தலைமைகளின் ஆலோசனை மற்றும் கற்றலை பெற்றுக்கொள்ள இருக்கும் வாய்ப்பு குறைவாகும். சிரேஷ்ட பெண் தலைமைகள் பொதுத் துறைகளில் ஈடுபாடு காட்டுவதால், இளைஞர் சந்ததியினரான பெண்களினுள்ளும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பிலான ஈடுபாடு அல்லது தூ ண்டுதல்களும் ஏற்படும் என்பதாகும். அமெரிக்காவின் காங்கிரஸ் சபை பெண் பிரதிநிதிகள் தொடர்பில் செய்த ஆய்வொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, அவர்களால் செய்யப்படும் முக்கிய செயற்பாடென்றால் ‘‘பெண் பிள்ளைகளுக்கும் எல்லாவற்றையும் செய்ய முடியும்’’ என்ற கருத்து சமூகத்தினுள் உருவாக்குதல் மற்றும் பொது செயற்பாடுகளில் ஈடுபடுதல் தொடர்பில் பெண்களிடம் எதிர்ப்பார்ப்புகளை வளர்ச்சியடைய செய்வதற்கு பங்களிக்கும் என்பதாகும் (Burrell, 1994).

## உள்ளூராட்சி அரசாங்கம் : அதிகார பகிர்வு கோட்பாடு

அரசியல் அதிகாரம் மையப்படுத்தப்படுவதால் பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார இடைவெளிக்கு வழிகாட்டுகின்றது. வளங்கள் வீணாதல், நிர்வாகம் செயற்றிறன் குன்றல் மற்றும் நாட்டில் வாழும் பல்வேறு இனக்குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் உருவாகுதல் போன்றன இவற்றில் முக்கியமானவையாகும். அதனால் இன்று சர்வதேச ரீதியிலும் தேசிய மக்களுக்கும் அதிகாரம் பகிரப்பட வேண்டும், இல்லையேல் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அதிகமாக முன்வைத்துள்ளனர். அதிகாரத்தைப் பகிர்தல் அரசியலமைப்பின் மூலம், பாராளுமன்ற விசேட சட்டத்தின் மூலம்

செய்ய முடியும். இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ளூராட்சி அரசாங்கங்களுக்கு அதிகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பது அரசியலமைப்பின் மூலமாகும். எனினும், அமெரிக்கா, சுவீடன் மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி அரசாங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி அரசாங்கங்களுக்கு அதிகாரங்களை பகிர்வதனால் பல்வேறு நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றில் பிரதேச மக்களை தமது பிரதேசம் தொடர்பிலான தீர்மானம் எடுத்தலில் நேரடியாக பங்குபற்றச் செய்தல், பிரதேச பௌதீக மற்றும் மனித வளங்களை உச்சமட்டத்தில் அப்பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்திக் கொள்ளல், அபிவிருத்தியை விரைவுபடுத்தல், செயற்றிறன்மிக்க நிர்வாகம், தமது பிரதேச செயற்பாடுகள் தங்களின் தலைமையில் நடைபெறவேண்டும் என்ற உணர்வு மக்களிடையே ஏற்படுவதால் திருப்திகரமான சமூகமொன்றை உருவாக்குதல், பிரதேச அரசியல்வாதிகளுக்கு தலைமைத்துவ பயிற்சிக்காக சிறந்த பயிற்சியொன்றினை வழங்குதல் மற்றும் கிராமிய மற்றும் நகர பிரதேசங்களுக்கிடையில் சமமானதொரு அபிவிருத்தியை ஏற்படுத்தல் என்பன முக்கியமானவைகள்.

இதற்கு மேலாக, இனப்பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கு இருக்கின்ற மிகவும் சிறப்பான தீர்வாகவும், சுயாட்சி அதிகாரத்துடன் கூடிய உள்ளூராட்சி அரசாங்கத்தை உருவாக்கும் முறையாகவும் கருதப்படுகின்றது. பெரும்பான்மை மக்கள் ஆட்சி செலுத்தும் அரசாங்கம், நாட்டின் தலைநகரத்தை மையப்படுத்தி ஒட்டுமொத்த குடிமக்களுக்காக தீர்மானம் எடுக்குமாயின், பிரதேசவாழ் சிறுபான்மை மக்கள் குழுக்களின் தேவைகள் இதன்போது உண்மையாக பிரதிநிதித்துவம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட முடியாது. அத்தோடு, வளம் மற்றும் வாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்படும் போது முரண்பாடு ஏற்படவும் வாய்ப்பு உண்டு. மேலும், பிரதேசத்தில் வாழும் அவ்வாறான இனக்குழுக்களின் மதம், மொழி மற்றும் வேறு கலாசார விடயங்களைப் பாதுகாப்பது போலவே, மறுசீரமைப்பிற்கும் இவ்வாறான நிலையில் போதுமான வாய்ப்புகள் கிடைக்காது. ஏதாவது நாட்டில் இனவர்க்க அல்லது பிரதேச சிறுபான்மை இனக்குழுக்களுக்கும் பெரும்பான்மையான மக்கள் குழுவுக்கும் இடையில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வதற்கு பொருத்தமான

உபாய முறையாக உள்ளூராட்சி அரசாங்கம் கருதப்படுகின்றது.

மேலும், பிரதேசங்களில் உருவாக்கப்பட்டுள்ள உள்ளூ ராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளில் அந்தந்த பிரதேசத்தில் வாழும் பெண்களுக்கு மிக இலகுவாக பங்குபற்ற முடியும். ஒருபுறம் அவர்களின் குடும்பங்களின் பொறுப்புகளை நிறைவேற்றி, அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபட முடியும். மறுபுறம் கிராமங்களில் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், அவர்களின் அனுபவங்களில் மிகவும் பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கமுடியும். அத்தோடு, உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளில் பங்குபற்றுவதன் மூலமும், ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கு உள்ள குறைந்த அரசியல் அனுபவத்தினால் அவர்களுக்கு ஏற்படும் சாதகமற்ற நிலைமைகளை இல்லாது செய்து கொள்வதற்கும் வாய்ப்பொன்றினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். உள்ளூ ராட்சி அரசியல் ஊடாக விசேடமாக, அரசியல் கட்சி தலைமைகள் மற்றும் தொடர்புகளை கட்டியெழுப்பவும், தேர்தல் செயற்பாடுகளில் பங்குபற்றல், பிரதேசத்திற்கு தேவையான அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வரவுசெலவுகளை தயாரித்தல் போன்றன தொடர்பில் பயிற்சியொன்றினை பெற்றுக்கொள்வதற்காக பெண்களுக்கு உள்ளூ ராட்சி நிறுவனங்களை பயன்படுத்த முடியும்.

# 2

# இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம்

இலங்கையில் உள்ளூராட்சி அரசாங்கத்தை அமைத்தல் தொடர்பான வரலாறு 1865 வரை நீண்டு செல்கின்றது. 1865ம் ஆண்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் கொழும்பு மாநகரம் உருவாக்கப்பட்டதோடு, இங்கு வாக்குகளால் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் முறையும் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் இந்த சட்டத்திற்கு ஏற்ப குறித்த மக்கள் பிரிவினருக்கே வாக்குரிமை கிடைத்தது. 21 வயதுக்கு மேற்பட்ட, ரூபா 100க்கு அதிகமான சொத்துடைய ஆண்களுக்கு மட்டுமே வாக்குரிமை கிடைத்தது. தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பு குறைந்தபட்சம் ரூபா 5000 பெறுமதியான சொத்துடைய ஆண்களுக்கு மட்டுமே கிடைத்தது.

1871ம் ஆண்டு கிராமசபை கட்டளைச் சட்டத்தின் கீழ் கிராம சபைகள் உருவாக்கப்பட்டதோடு, இதன் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கும் ஆண்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட வாக்குரிமை உரித்தாகியது. குறித்த எல்லையில் வாழ்கின்ற, பாரிய குற்றங்களுக்காக கடந்த 5 ஆண்டு காலத்தினுள் குற்றவாளியாக்கப்படாதவர்களுக்கு, கிராமசபை பிரிதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் விசேட கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

1920ம் ஆண்டு உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப நகரசபைகள் உருவாக்கப்பட்டதோடு, இதற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கான வரையறுக்கப்பட்ட வாக்குரிமை ஆண்களுக்கு மட்டுமே உரித்தாகியது. 1925ம் ஆண்டு உள்ளூராட்சி நிர்வாகம் தொடர்பிலான திணைக்களம் உருவாக்கப்பட்டு உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை சிறப்பாக ஒழுங்குபடுத்தினாலும், பிரதிநிதித்துவ முறைமை மாற்றப்படவில்லை (Kanesalingam, 1971). 1931இல் இலங்கையின் ஆண் - பெண் இருசாராருக்கும் சர்வஜன

வாக்குரிமை கிடைத்ததன் பின்னர் தேசிய மட்டத்தைப் போலவே, உள்ளூராட்சி தேர்தல்களிலும் வாக்களிக்கவும் மற்றும் வேட்பாளராக போட்டியிடுவதற்குமான வாய்ப்பு பெண்களுக்கும் கிடைத்தது.

1987ம் ஆண்டு 13வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் இலங்கையில் மாகாண சபைகள் தாபிக்கப்பட்டன. காணப்பட்ட மாநகரசபை மற்றும் நகரசபைகள் விசேட மாற்றங்களுக்கு உட்படாததோடு, 1987ம் ஆண்டு பிரதேசசபை சட்டத்தினால் கிராம மட்டங்களில் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. தற்போதைய நிலையில் இலங்கையில் 8 மாகாண சபைகள் (வடக்கு தவிர்த்து), 12 மாநகர சபைகள், 38 நகரசபைகள் மற்றும் 257 பிரதேச சபைகளும் தொழிற்படுகின்றன.

இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களினுள் பெண்களின் பிரதிநிதித்துவம் தேசிய சட்டசபையின் பெண்களின் பிரதிநிதித்துவத்திலும் பார்க்க மிகவும் குறைவாகும். பிரித்தானிய காலணித்துவத்தின் கீழ் இருந்த நாடுகளில் முதலில் சர்வஜன வாக்குரிமையை இலங்கைப் பெண்களே பெற்றுக்கொண்டனர். 1931 அரசுக் கழகத் தேர்தலில் இலங்கைப் பெண்கள் வாக்கினைப் பயன்படுத்தினாலும், வேட்பாளர்களாக போட்டியிடவில்லை. எனினும் 1931 நவம்பர் 14 ருவன்வெல்ல இடைத்தேர்தலுக்கு முகங்கொடுத்த எட்லின் மொலமுரே அதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். 1936 தேர்தலில் நேசம் சரவணமுத்து வெற்றி பெற்று அரசுக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழ் பிரதிநிதியாவார் (Mettananda, 1981).

1931 முதல் இதுவரையாகும் போது 80 வருட நீண்ட காலத்தில், இலங்கைப் பெண்கள் சர்வஜன வாக்குரிமையினை பயன்படுத்தியுள்ள போதும், அண்மைக்கால தேர்தல்களில் பெண்களின் வாக்களிக்கும் விகிதாசாரம் 55 – 56% வரை வளர்ச்சியடைந்துள்ளது (Liyanage, 1999). இலங்கை 1960இல் உலகின் முதல் பெண் பிரதமரை உருவாக்கியது. 1994இல் ஒரே சந்தர்ப்பத்தில் இலங்கையில் பெண்கள் இருவர் ஜனாதிபதி (சந்திரிக்கா குமாரதுங்க) மற்றும் பிரதமர் (சிறிமாவோ பண்டாரநாயக்க) பதவி வகித்தனர். இவ்வாறான வெற்றிகளைப் பெற்றாலும், இன்று வரை இலங்கை பாராளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.8%

ஆகும் (இணைப்பு: 1). மாகாண சபைகளில் இந்த விகிதாசாரம் 4.8% (இணைப்பு: 2), மாநகரசபை மற்றும் நகர சபைகளில் 3.2% மற்றும் பிரதேச சபைகளில் 1.9% ஆகும் (இணைப்பு: 3).

புராதன இலங்கையில் கிராம சபைகள் மற்றும் பட்டின சபைகள் போன்ற உள்ளூராட்சி அரசாங்கங்கள் காணப்பட்டபோதும் அதில் பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்பட்டதாக குறிப்புகள் இல்லை (Leitan, 1979). டொனமூர் கமிசன் இலங்கையின் உள்ளூ ராட்சி நிறுவனங்களின் மறுசீரமைப்பின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொண்டமையால் உள்ளூர் நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருக்க நிர்வாக செயற்குழு ஒன்றினை உருவாக்கினர். 1931இல் சர்வஜன வாக்குரிமையினை அறிமுகப்படுத்தி 7 வருடங்களின் பின்னர் 1938 உள்ளூராட்சி கட்டளை சட்டத்தினால் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டன. இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு (1938) தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண் பிரதிநிதி வைத்தியர் மேரி ரட்ணம் ஆவார். இவர் கொழும்பு மாநகரசபையின் பிரதிநிதியானார். 1949இல் ஆய்ஷா ரவுப் அவர்கள் கொழும்பு மாநகர சபைக்கு தெரிவு செய்ப்பட்டதோடு இவர் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட்டதோடு, பின்னர் பதில் மேயராகவும் பதவி வகித்தார்.

1979இல் கண்டி மாநகர சபையின் பதில் மேயராக சந்திரா ரணராஜா தெரிவு செய்யப்பட்டதோடு, பின்னர் இவர் நகர மேயராகவும் தெரிவு செய்யப்பட்டார். நலின் திலக்கா ஹேரத் நுவரெலியா மாநகரசபையின் மேயராக (1996) பதவி வகித்தார். ஆர்.ஈ ஜயதிலக்க மற்றும் நிருபா கருணாரத்ன நாவலபிட்டிய நகரசபையின் தலைவராக பதவி வகித்தனர். காந்தி கொடிகார (கண்டி மாநகர சபை), அசோகா லங்காதிலக்க (கொட்டிகாவத்தை பிரதேச சபை), மற்றும் விமாலி கருணாரத்ன (அம்பகமுவ பிரதேச சபை) போன்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் நகராதிபதிகளாக அல்லது பிரதேச சபை தலைவர்களாக சேவை செய்துள்ளனர். மத்திய மாகாணத்தில் முதலாவது பிரதேச தலைவியாக சுனேத்ரா ஜயரத்ன 2011இல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அசோகா லங்காதிலக்க (மேல்) மற்றும் விமாலி கருணாரத்ன (மத்திய) 2004ம் ஆண்டு முதல் மாகாணசபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய இலங்கையில் மாகாண சபைகளுக்கிடையில் அதிகளவான பெண்கள் (6) பிரதிநிதித்துவம் செய்வது மேல் மாகாணத்திலாகும். மத்திய மாகாண சபையினுள் 5 பெண்கள் (9.41%) பிரதிநிதித்துவம் செய்வதோடு 2011இல் ஒருவர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். மத்திய மாகாணப் பெண் பிரதிநிதிகளில் ஓர் அமைச்சர் (அனுஷியா சிவராஜா) ஆவார். வடமத்திய மாகாண சபையில் மூன்று பெண்கள் பிரதிநிதித்துவம் செய்தாலும் 2010இல் ஒருவர் திடீர் மரணத்தை தழுவியதால் தற்போது இரண்டு பிரதிநிதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து மாகாண சபைகளிலும் (தென் மாகாணசபையில் இருவர்) பெண்களின் பிரதிநிதித்துவம் ஒருவருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2012ம் ஆண்டு செப்டெம்பரில் நடைபெற்ற மாகாண சபை தேர்தல்கள் மூன்றிலும் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கு ஒருவர் வீதமும் சப்பிரகமுவவிற்கு இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாகாணசபை பெண் பிரதிநிதிகளில் சிலர் பிரதேச சபை மட்டங்களில் அரசியல் வாழ்க்கையை தொடங்கி, மாகாண சபைக்கு பிரவேசித்தவர்களாவர். அசோக்கா லங்காதிலக்க மற்றும் விமாலி கருணாரத்ன போன்ற அரசியல் பின்புலம் இல்லாத, மக்கள் செயற்பாடுகளால் அரசியலுக்கு வந்த பெண்களில் விசேடமானவர்கள். ஒரு காலத்தில் பாராளுமன்றப் பெண் பிரதிநிதியொருவராக இருந்து தற்போது மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் செய்யும் பெண் பிரதிநிதிகளாக (ஹேமா ரத்னாயக மற்றும் சித்ரா மந்திலக்க) போன்றோர் உள்ளனர். தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபைகளில் ஒரு பெண் ஆளுனரும் (தென்மாகாணம்) அமைச்சர்கள் இருவரும் மற்றும் ஒரு எதிர்கட்சி தலைவியும் (சப்பிரகமுவ) உள்ளார்கள்.

2011 உள்ளூராட்சி தேர்தல்களில் மாநகர சபைகளுக்கு பெண்கள் இருவரும், நகர சபைகளுக்கு இருவரும், பிரதேச சபைகளுக்கு 86 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் கிராம மட்டங்களில் அடிப்படை தேவைகள் மற்றும் வசதிகளை வழங்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கும் பிரதேச சபைகளின் செயற்பாடுகள் பெண்களின் வாழ்க்கைக்கு மிகவும் நெருங்கியவகையில் தொடர்புபடுகின்றது. இச்செயற்பாடுகளின் முக்கியத்துவத்தினை நன்கு உணரக்கூடியதாகவிருப்பது விசேடமாக குறித்த வசதிகள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் அதனால் வாழ்க்கைக்கு ஏற்படும் எதிர்மறை அழுத்தங்கள் தொடர்பில் ஆண்களை காட்டிலும் கூடுதலான

அனுபவங்கள் பெண்களுக்கே உண்டு. அத்தோடு, கிராமமட்ட அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு, தேசிய அல்லது மாகாண மட்டங்களோடு ஒப்பிடுகையில், இலகுவில் பெண்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு அதிகமாகும். கிராம மட்டங்களின் சமூக மற்றும் நலன்புரி சங்கங்களிலும் அந்த செயற்பாடுகளில் கூடுதலான பங்களிப்பினைச் செய்வதும் பெண்களே. ஆனால் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரையில் இதனுள் 2% ஏனும் பெண்கள் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. இவ் விகிதாசாரம் 1991 – 1.7%, 1997 – 1.9%, 2006 – 1.87% மற்றும் 2011 – 1.93% ஆகும்.

2006 மற்றும் 2011 உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை ஒப்பிடும்போது தெளிவாவது பெண்களின் பிரதிநிதித்துவம் 0.05% அல்லது 74 ஆக இருந்த பெண் பிரதிநிதித்துவம் 86 என்ற குறைவான வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதாகும். 2006 (15) போல் 2011 (14) கொழும்பு மாவட்டத்தில் அதிக பெண்கள் தேர்தெடுக்கப்பட்டனர். 2006இல் கம்பஹா, களுத்துறை, கண்டி, பதுளை மற்றும் கேகாலை மாவட்டங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5 தொடக்கம் 6 க்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2011இல் கம்பஹா – 11, யாழ்பாணம் - 8, கண்டி – 7, பதுளை -5 என்ற வகையில் விஷேடமாக பெண்களின் தொகை சிறிதளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. ஏனைய மாவட்டங்களில் களுத்துறை, பொலனறுவை, மட்டகளப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பெண்கள் நால்வர் வீதம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் 2011இல் 3-1 வரையான பெண்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மொனராகலை, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் பெண் ஒருவர் கூட பிரதிநிதித்துவம் செய்யவில்லை (இணைப்பு-4).

இவ்வாறு இலங்கையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதோடு தென் ஆசியாவில் ஏனைய அனைத்து நாடுகளிலும் (மாலை தீவு தவிர்த்து) இவ் விகிதாசாரம் 35 – 30% அளவில் காணப்படுகிறது. இலங்கையில் பெண்களின் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக தராதரங்கள் தென் ஆசியாவில் ஏனைய நாடுகளை விட உயர்வான மட்டத்தில் காணப்பட்டாலும் அரசியல் பிரதிநிதித்துவத்தில்

இவ்வாறான குறைந்த பிரிதிநிதித்துவம் காணப்படுவது உண்மையில் பாரியதொரு பிரச்சினையாகும். இப்பிரச்சினை ஆய்வுகள் சிலவற்றின் ஊடாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது (De Silva ,1979, 1985, 1995 : De Alwis ,1995: CENWOR, 1994: Kamalawathie, 1987: Kearney, 1981 :Kodikara, 2009: Kiribamune, 1994, 1999: Liyanage, 1992, 1998, 1999, 2004 and 2005 : Leitan, 2000: Leitan and Gunesekara, 1998: Thambiah, 2002: Thiruchandran, 1997 and Samarasinghe, 2000).

அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவடைவதில் தாக்கம் செலுத்துகின்ற தடைகள் தொடர்பாக இவ் ஆய்வுகள் அனைத்திலும் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இதற்கு மேலாக 2000 – 2002 இற்கு இடைப்பட்ட காலத்தில் 11 மாவட்டங்களில் நடைபெற்ற அரசியல் தலைமைத்துவம் தொடர்பான செயலமர்வுகளில் பங்குபற்றிய 352 (74% - பெண்கள், 26%- ஆண்கள்) அரசியல் பிரதிநிதிகளிடம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் அழுத்தம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன[1].

மேலும், 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் 10 இல் உள்ள சிவில் தலைவர்கள், தலைவிகள் 211 (பெண்கள் 79%, ஆண்கள் 21%) உடன் நடத்தப்பட்ட இலக்கு குழுக்கள் 10இல் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன[2].

1 இந்த செயலமர்வுகள், தேர்தல்களில் போட்டியிட எதிர்பார்க்கின்ற சமூக தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின், பிரதேச மற்றும் கிராம மட்ட பெண் செயற்பாட்டாளர்களின் (ஆண்கள் 24% பங்குபற்றினர்) தலைமைத்துவத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நூலின் கட்டுரையாளர் இச்செயலமர்வுக்கு வளவாளராக இருந்ததோடு கொழும்பு, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, அம்பாறை, காலி, மாத்தறை, குருநாகல், பதுளை, மாத்தளை, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் இச்செயலமர்வுகள் நடைபெற்றன.

2 2007-08 காலப்பகுதியில் தொழுவ, அக்குறனை, தெல்தோட்ட, கங்கவட்ட கோரளை, உடுநுவர, யட்டிநுவர, உடபலாத்த, பாத்ததும்பற, குண்டசாலை மற்றும் தெல்தெனிய போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் சமூக தலைவர், தலைவிகள் 211 பேருடன் இந்த இலக்கு குழு கலந்துரையாடல்கள் நடைபெற்றது. இதன் பிரதான நோக்கம் உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவடைவதில் செல்வாக்கு செலுத்தும் சவால்கள் மற்றும் அவற்றை வெற்றிகொள்ளும் வழிமுறைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டிக்கொள்வதாகும்.

இந்த ஆய்வுகளில் இலங்கைப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்தும் தடைகள் பல சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சமூக மற்றும் கலாசார, அரசியல், பொருளாதார தனிப்பட்ட மற்றும் உளவியல் ரீதியாக அவற்றை வகைப்படுத்தி காட்டமுடியும். ஆண்மைய சமூக முறைமை அதனோடிணைந்த சம்பிரதாய மனப்பாங்கு, ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்கள், ஆண் - பெண் சமூக பிரதிநிதித்துவ செயற்பாடுகளின் மாற்றம், பெண்களுக்கு பொது செயற்பாடுகள் தொடர்பில் காணப்படும் குறைவான அனுபவம் மற்றும் பயிற்சி, மகப்பேற்று பொறுப்பு மற்றும் சம்பிரதாயமாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப பொறுப்புகள், குறைவான சுதந்திரம், குறைவான வாய்ப்புகள் மற்றும் சமூக மற்றும் கலாசார தடைகள் என்பன இதில் முக்கியமானவை.

அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற பெண்கள் காட்டும் குறைவான ஆர்வம், இலங்கையின் தற்போதைய அரசியல் முறைமையில் காணப்படும் வன்முறை மற்றும் ஊழல் போன்ற எதிர்மறையான குணாம்சங்கள், அரசியல் கலாசாரத்தின் மாற்றங்கள், விசேடமாக மக்கள் மத்தியில் அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் மீது காணப்படும் நம்பிக்கையின்மை, சமூக உணர்வு மற்றும் ஒழுக்கங்களின் சீரழிவுகள், விகிதாசார பிரதிநிதித்துவ முறையால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் (பெரிய தேர்தல் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்வதிலுள்ள சிக்கல்கள் மற்றும் ஒரே கட்சிக்குள் விருப்பு வாக்குகளை பெற்றுகொள்வதற்கான போட்டிகள் போன்றன), அரசியல் கட்சிக்குள் காணப்படும் குறைவான உள்ளக ஜனநாயகம், பொதுவாக அனைத்து கட்சிகளும் பெண்களுக்கு வேட்பு மனுக்களை பெற்றுகொடுப்பதில் காட்டும் குறைவான ஆர்வம், தேர்தல் மோசடிகள் தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸ் போன்ற குறித்த துறைகள் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் சுயாதீனமாகவும் நீதியான முறையிலும் செயற்படாமை காரணமாக அவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்ற சேவை சரியாக கிடைக்காமை போன்றன அடிப்படை அரசியல் தடைகளாக எல்லா ஆய்வுகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. தற்போதைய இலங்கையின் நிலைமையின் கீழ் அரசியல் பிரதிநிதியாதல் என்பது விரைவாக பணக்காரர் ஆவதற்கான கவர்ச்சிகரமான பதவியாக பலர் கருதுகின்றனர். இதனால், இதற்காக விஷேடமாக ஆண்களுக்கிடையில் காணப்படும் அதிகரித்த போட்டி பெண்களின் பிரதிநிதித்துவத்தில் காணப்படும் மற்றுமொரு தடையாக உள்ளது.

எந்தவொரு முறையான கல்வி தகைமைகளுமற்ற, ஒழுக்கத்திற்கு உடன்பாடற்ற, எந்தவொரு முறையிலும் வருமானம் ஈட்டிக் கொள்ளும், நல்ல அல்லது தீய செயற்பாடுகளால் சமூகத்தின் முன்னிலைக்கு வரும் சில நபர்கள் பொதுத் தேர்தல்களில் அதிகூடிய பணத்தினை கட்சிக்காக செலவழித்து கட்சி தலைமையின் மனதை வென்றெடுக்க தூண்டப்படுதல் தற்போதைய அரசியலின் போக்காக உள்ளது. பணத்தினால் மட்டுமின்றி ஏனைய பௌதிக வளங்கள், வாகனங்கள் மற்றும் பாதுகாப்பாளர்கள் கூட இவ்வாறான நபர்களால் கட்சியின் தேசிய மட்டத்தினைப் போலவே பிரதேச மட்ட தலைவர்களுக்கும் வழங்கப்படுகிறது. இதற்கு பிரதியுபகாரமாக உதவி வழங்குவோர் எதிர்பார்ப்பது உள்ளூராட்சி தேர்தல்களில் வேட்பு மனுக்களை பெற்றுகொள்வதாகும். இந்த உதவி ஒத்தாசை முறைமையில் இலங்கைப் போன்ற ஆண் தலைமை சமூகத்தில் நன்மை அடைவது ஆண்களாவர். இவர்கள் பாடசாலை, குடும்பம், உறவு, வியாபாரம் மற்றும் வேறு தொடர்புகளை பயன்படுத்தி பல்வேறு முறைகளில் வலையமைப்பாகி வேட்புமனுக்களை பெற்றுகொள்ளும்போது பெண்களைத் தாண்டி முன்னோக்கிச் செல்லல் தற்போதைய இலங்கைப் பெண்கள் முகம் கொடுக்கின்ற மிகப் பெரிய அரசியல் சவாலாக உள்ளது.

பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவதற்கு பொருளாதார சாதனங்களும் தாக்கம் செலுத்துகின்றன. தொழிலின்மை, வறுமை மற்றும் பெறுகின்ற வருமானம் குடும்பத்தை கொண்டு செல்வதற்கு போதாமையால் ஆண்களை விட கூடுதலாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான நிலைமையில் அரசியல் போன்ற பொது செயற்பாடுகளில் ஈடுபடுவதிலும் பார்க்க பெரும்பாலான பெண்களுக்கு குடும்பத்தைக் கொண்டு செல்வதற்காக வாழ்கையை தியாகம் செய்ய வேண்டியுள்ளது. ஏதேனும் சொத்துக்கள் உள்ள பெண்கள் கூட ஆண்களைப் போல் அச் சொத்துக்கள் தொடர்பில் சுயாதீனமான தீர்மானங்களை எடுத்து அதனை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவு செய்வதற்குள்ள வாய்ப்பு மிகவும் குறைவாகும். பொதுவாக பெண்கள் சமூகமயப்படுத்தப்படுவது குறைவாகவும் மற்றும் முறையாகவும், வீட்டு முகாமைத்துவத்தை செய்யக்கூடிய வீட்டு பணியாளராகவாகும். இதனால் பெரும்பாலான பெண்கள் இருக்கின்ற வளங்களைக் கூட பதாதை மற்றும் வேறு பிரச்சார செயற்பாடுகளுக்கு பயன்படுத்த தயங்குகின்றனர். இதனை வளத்தை

வீணடிக்கும் விடயமாக பெரும்பாலான பெண்கள் சிந்திக்கின்றனர். எனினும் இலங்கை அரசியல் முறையினுள் வாக்காளர்களை கவர்ந்து கொள்ள வேண்டுமாயின் இவ்வாறான தேவையற்ற செலவுகளை செய்தல் கட்டாயமானதாகும். அதிகமான ஆண்கள் இவற்றுக்காக எவ்வித வரையறையுமின்றி வளங்களை விரயமாக்குகின்றனர். தேர்தலுக்கான ஒதுக்கீட்டுகளை ஒழுங்குபடுத்தும்போது ஆண்கள் பெண்களை விடவும் சாதகமான நிலையினை அடைகின்றனர். ஆண்கள் பல்வேறு சமூக தொடர்பாடல்களை கட்டியெழுப்பிக் கொண்டு, ஆதரவாளர்களுக்கு பல்வேறு உறுதி மொழிகளை வழங்கி வளங்களை ஒன்று திரட்டுகின்றனர். எனினும் ஒப்பீட்டளவில் இவ்வாறான அனுபவங்கள் மற்றும் சமூக தொடர்புகள் குறைந்த பெண்களுக்கு இவ்வாறான ஆண்களுடன் அரசியல் தளத்திலே சமமான முறையில் போட்டியிடுதல் கடினமானதாகும். பெண்களில் மகப்பேற்று செயற்பாடு மற்றும் சம்பிரதாய பூர்வமாக அவர்களை சமூகமயப்படுத்துவதால் அரசியல் தலைமைத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு பெரும்பாலான பெண்களில் விருப்பமின்மை காணப்படுகிறது.

அரசியல் துறையினுள் உள்வருவதற்காக பெண்களுக்கு போதுமான தலைமைத்துவ ஆற்றல்கள் இல்லையென அவர்களே நினைப்பதோடு, இது தொடர்பில் காணப்படும் தன்னம்பிக்கை மற்றும் முன்வருதலும் குறைவாகும். வன்முறை, நடத்தை தொடர்பான தாக்குதல்கள், குடும்ப மற்றும் சமூகத்தினால் முன்வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் இழிவுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பெரும்பாலான பெண்கள் பயப்படுகின்றனர். இதனால் அரசியலுக்கு மிகவும் பொருத்தமானவர்களாக ஆண்கள் இருக்கின்றார்கள் என்ற கருத்து சில பெண்களின் மனதில் நிலைகொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்டதன்படி பெண்களின் அரசியல் பங்குபற்றல் தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வுகள் எல்லாவற்றிலும் இலங்கை பெண்களின் பிரதிநிதித்துவ வளர்ச்சிக்காக பல்வேறு ஆலோசனைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்காக தேர்தல் வேட்புமனுக்களில் அல்லது அரசியல் நிறுவனங்களின் ஆசனங்களில் ஏதாவது ஒதுக்கீடு பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தல், இதற்காக மக்கள், அரசியல்வாதிகள் மற்றும் நிர்வாகிகள் போன்றோரை தெளிவுபடுத்தல், பெண் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம் பற்றி

வாக்காளர்களுக்கு போதுமானளவு தெளிவினைப் பெற்றுக்கொடுத்தல், தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள் மற்றும் வாக்குகளால் தெரிவான பெண் பிரதிநிதிகளுக்கு முறையான பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல், அரசியலுக்கு வருகின்ற பெண்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான விசேட நிறுவனங்களை உருவாக்குதல், சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவினை உருவாக்குதல், விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் மாற்றங்களை கொண்டுவருதல் மற்றும் அரசியல் கட்சிகளின் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் உள்ள பதவிகளுக்கு பெண்களை நியமித்தல் போன்ற ஆலோசனைகள் இதில் முக்கியமானவை.

# 3

# அரசியல் பிரதிநிதித்துவத்தில் பெண்கள் முகங்கொடுக்கின்ற சவால்களும் வெற்றிக் கொள்வதற்காக பயன்படுத்திய உபாயங்களும்

விசேடமாக 1970 களில் இருந்து இலங்கை அரசும் சில அரசசார்பற்ற நிறுவனங்களும் பொதுவாக பெண்களின் தரத்தினை உயர்த்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளை கடைபிடிக்கத் தொடங்கின. பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பெண்கள் பணியகம், பெண்கள் விவகார அமைச்சு மற்றும் தேசிய பெண்கள் குழு போன்ற நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. பெண்கள் விவகாரங்களுக்கான அமைச்சரவை அமைச்சு பதவியை ஒதுக்குதல், அரசினால் பெண்ணியல் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறைபடுத்தல் என்பன எடுக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளாக கருதமுடியும். எனினும் இந்த அரச பொறிமுறைகள் எவற்றாலும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ வளர்ச்சிக்காக குறிப்பிடத்தக்களவு நேரடி பங்களிப்பு எதுவும் காட்டப்படவில்லை. எனினும் இந் நிறுவனங்களும் இலங்கையின் பிரதான பெண்கள் அமைப்புகளும் ஒன்றிணைந்து பெண்களின் வளர்ச்சிக்கான தேசிய செயற்றிட்டம் (1995/1996) ஒன்றை தயாரித்தமை மற்றும் அதில் அடிப்படை விடயமாக “அரசியல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் பெண்களின் பங்குபற்றல்” என்ற விடயம் உள்ளடக்கப்பட்டமை, 1993 பெண்கள் கொள்கை, பெண்கள் உரிமை சட்டமூலமாக தயாரிக்கப்பட்டு, சட்டமாக்கி கொள்வதற்கு மூன்று முறை முன்வைக்கப்பட்டமை மற்றும் சர்வதேச சிடோ குழு அனுப்பும் அறிக்கைகளின் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை முன்னேற்ற செய்வதன் அவசியத்தை கருத்திற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் முன்னிலை வகித்து செயற்பட்டன. மேலும், இந்நிறுவனங்களின் தலைமையிலும், பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெண்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வுகளை நடத்தல், சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில்

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை வளர்ச்சியடைய செய்ய வேண்டிய தேவை தொடர்பில் பகிரங்க போதனைகள் மற்றும் கலந்துரையாடல்கள் போன்றவற்றை நடத்தல், அரசசார்பற்ற பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து பெண்களுக்காக பங்கொன்றை கேட்கின்றமை, இது தொடர்பில் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்தல் மற்றும் இலங்கை பெண் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தல் போன்ற செயற்பாடுகளை ஏற்பாடு செய்தன.

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைவடையும் பிரச்சினை தொடர்பில் மிகச்சிறந்த செயற்திட்டம் ஒன்றை பெண்கள் விவகார அமைச்சு, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்துடன் (UNDP) இணைந்து 2008 ஆம் ஆண்டு நடைமுறைபடுத்தியது. இதன் கீழ் அரசியல் தலைமைத்துவத்திற்காக பெண்களை பயிற்றுவித்தல், ஊடகங்கள் மூலம் இப்பிரச்சினைகள் தொடர்பில் மக்களை தெளிவூட்டல் மற்றும் இலங்கையின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான ஆய்வு அறிக்கையொன்றினை தயாரித்தல் போன்ற விடயங்கள் செய்யப்பட்டன. இவ்வறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பன்முக செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. பங்கு முறையொன்றினை பெற்றுக் கொள்ளல், இது தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகளோடு கருத்துக்களை பகிர்ந்துக்கொள்ளல், தென்னாசிய நாடுகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை முன்னேற்றம் செய்தல் தொடர்பான கருத்துகளை விளங்கிக் கொள்வதற்கு அரசியல் கட்சி தலைமைகளுக்கு வாய்ப்புகளைக் கொடுத்தல், பெண்களுக்கான தலைமைத்துவ செயலமர்வுகளை நடத்தல், தேர்தல் வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல், பெண் ஒருவருக்கு வாக்களிக்கும்படி பெண் வாக்காளர்களைத் தூண்டுதல், பெண்களின் உரிமை தொடர்பான சட்டமூலத்தை மீண்டும் அரசுக்கு முன்வைத்தல் மற்றும் இதன் கீழ் தேசிய பெண்கள் ஆணைக்குழு ஒன்றினை தாபித்தல், ஆண் - பெண் வேறுபாட்டு புள்ளிவிபரங்களை தயாரிப்பதற்காகத் தேர்தல் திணைக்களத்தினை தூண்டுதல், இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்காக அரசியல்வாதிகளையும் இது தொடர்பில் ஈடுபாடு காட்டுகின்ற ஆண்களுடனும் இணைந்து வேலை செய்தல் மற்றும் அதனோடிணைந்த கட்டுரை நூல்களை தேசிய மொழிகளில் மொழி பெயர்த்தல் போன்ற விடயங்கள் இந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. (சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.)

இச்செயற்திட்டத்தின் கீழ், பாராளுமன்றப் பெண் பிரதிநிதிகளான பெண்கள் செயற்பாட்டுக் குழு (பிரிவு) உருவாக்கி அதன் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பிலான கலந்துரையாடல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களைத் தெளிவுபடுத்தினர். உத்தேச உள்ளூராட்சி நிறுவனக் கட்டளை சட்டம் மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான சட்டமூலத்தை உருவாக்கும் செயற்பாடு ஒப்படைக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவுக்கு பெண்களுக்கான ஆசனங்களை ஒதுக்குதல் மற்றும் வேட்புமனுக்களின் பங்கொன்றை ஒதுக்கிக் கொள்ளும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது. பாராளுமன்றப் பெண் பிரதிநிதிகள் ஊடாக அரசியல் கட்சிகளுக்கு ஓரளவு அழுத்தம் கொடுக்கப்பட்டது. சில பாராளுமன்றப் பெண் பிரதிநிதிகளை பங்கு முறைமை பயன்படுத்தப்படும் நாடுகளுக்கு அனுப்பி இது தொடர்பான மேலதிக தெளிவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. தேசிய பெண்கள் குழுவின் தலைமையில் பெண் அரசியல் தலைமைத்துவ பயிற்சிக்கான டிப்ளோமா பாடநெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இந்த செயற்திட்டத்தை நடைமுறைபடுத்தும் போது முன்னிலையெடுத்த தேசிய பெண்கள் குழு குறித்த செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பு அல்லது மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை இதுவரை வெளியிடவில்லை.

மூன்று தசாப்த காலங்களாக குறித்த அரச நிறுவனங்கள், பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து இவ்வாறான பிரயத்தனங்களை எடுத்தாலும், இதுவரை இது தொடர்பில் எந்தவிதமான சாதகமான பெறுபேறுகளும் கிடைக்கவில்லை. இதற்கான பிரதான காரணம் இலங்கை அரசும், பிரதான அரசியல் கட்சிகளும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை முன்னேற்ற செய்வதன் முக்கியத்துவத்தை சரிவர விளங்கிக் கொள்ளாமையும், இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்தவொரு அரசியல் விருப்பங்களும் காட்டாமையுமாகும். இலங்கையில் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளில் பெண்கள் இருவர் இருந்த போதும் பெண்கள் விவகார அமைச்சு பதவியில் பெண்கள் பலமுறை இருந்த போதும் இப்பெண்கள் எவரும் இப்பிரச்சினைத் தொடர்பில் போதுமான அவதானத்தை செலுத்தாமை கவலைக்குரிய விடயமாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் முயற்சி செய்யாமை ஏன் என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இதன் போது அவர்

குறிப்பிட்டதாவது, என்னை சூழவிருந்த நபர்கள் இது தொடர்பில் தனக்கு வாய்ப்புகளை வழங்கவில்லை என்பதாகும். இவர்கள் பெண்களாக இருப்பதால் இது தொடர்பில் சட்ட முறையான அல்லது கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் போது அவர்களை சூழவிருந்த பெரும்பாலான ஆண்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுவது கடினமான விடயமாக இருந்தது. அத்தோடு இப் பெண் தலைவிகள், அனைவருமே அரசியல் குடும்பங்களில், ஆண்களின் ஒத்துழைப்பால் அரசியலுக்கு வந்திருந்தமையால், வேறு பெண்களை அரசியலுக்கு ஈர்த்துக் கொள்வதற்கான உண்மையான விருப்பம் அல்லது ஈடுபாடு காணப்பட்டதா என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகும். இப்பிரச்சினை தொடர்பில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற தேசியமட்ட கலந்துரையாடல்கள் மற்றும் ஊடக வேலைத்திட்டங்களில், சில தேசியமட்ட அரசியல் தலைவிகள் பங்குமுறைமைக்கு எதிராக நேரடியான கருத்துகளை கூறிய சந்தர்ப்பங்களும் உண்டு. அரசியல் குடும்பங்களோடு தொடர்பு இல்லாத, அரசியல் அடித்தளம் அல்லது நிறுவனங்களை உருவாக்கி கொள்ளாத, நீண்ட காலம் இந்த அனுபவங்களை பெறாத பெண்களை இருந்தாற்போல் அரசியலுக்கு தள்ளுவதற்காக பங்கு முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கு சில தலைவிகள் உடன்படவில்லை என குறிப்பிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. மேலும் சில அரசியல் தலைவிகள் இந்நிலைமைக்கு வந்தமை தந்தை அல்லது கணவனின் அவசர விருப்பமேயாகும் என்றும் குறிப்பிட்டு நேரடி கூட்டங்களில், வேறு பெண்களை தைரியமிலக்க செய்த சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் ஆண் தலைமை அரசில் மட்டுமின்றி இதனுள் செயற்படும் ஆண்மைய மனோநிலை மற்றும் ஒழுக்கங்களை பின்பற்றும் சில அரசியல் தலைவிகளும் பிரச்சினையைத் தீர்த்து கொள்வதற்கு உண்மையான ஈடுபாட்டினை இதுவரை காட்டவில்லை என்பது தெளிவாகும்.

எனினும் அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களின் விளைவால் இலங்கையில் பிரதான கட்சிகள் அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வளர்ப்பதற்கான உறுதிகளை உள்ளடக்கி உள்ளன. தற்போது அரசாங்க அதிகாரத்திலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, மஹிந்த சிந்தனை வேலைதிட்டத்தின் மூலம் ‘‘உள்ளூராட்சி நிறுவனத்திற்காக முன்வைக்கப்படும் வேட்பு மனுக்களில் குறைந்த பட்சம் 25 வீதம்

பெண்களுக்காக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என குறிப்பிட்டுள்ளது. எனினும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான திருத்த கட்டளைச் சட்டம் (2012 October) உள்ளூராட்சி தேர்தல் முறை திருத்தப்பட்டாலும் இதன் போதும் இந்த அரசாங்கத்தால் பெண்கள் பிரதிநிதித்துவத்தை முன்னேற்ற செய்தல் தொடர்பில் கூறப்பட்ட உறுதி மொழி கருத்திற் கொள்ளப்படவில்லை. இவ்வாறு எந்தவொரு உறுதிமொழியும் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை.

இந்த பிரயத்தனங்களுக்கு மேலாக அரசின் பயிற்சி நிறுவனங்கள் சிலவும் தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான பெண்கள் அமைப்புகள் பலவும் பெண்களின் பிரதிநிதித்துவ வளர்ச்சிக்கான பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைபடுத்தின. எம்பிலிபிட்டிய கிராம தலைவர்களை பயிற்றுவிக்கும் மத்திய நிலையம், 1980 களின் நடுப்பகுதியிலிருந்து இளம் தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆண் - பெண் இருசாராருக்குமாக ஏற்பாடு செய்தது. மேலும் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பயிற்சி மத்திய நிலையம், உள்ளூராட்சி பயிற்சி மத்திய நிலையம், உள்ளூராட்சி நிறுவனம் தொடர்பான இலங்கை நிலையம் மற்றும் இலங்கை மன்றக் கல்லூரி என்பன பல்வேறு சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட ஆர்வமுடைய பெண்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறிகளை நடத்தின.

இலங்கையின் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல இவ்வாறான குறுங்கால பயிற்சி வேலைதிட்டங்களை நடத்தல், குறித்த ஊடக கலந்துரையாடல்களுக்கு பங்குபற்றல், ஆர்பாட்டங்கள், சுவரொட்டிகள் செயற்பாடுகள் மற்றும் சித்திர கண்காட்சி என்பனவற்றை ஏற்பாடு செய்தல், ஆய்வு அறிக்கைகள், நூல்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் என்பனவற்றை தயாரித்து வெளியிடுதல்), வீடியோக்களை (காணொளி) தயாரித்தல், திறந்த விரிவுரைகள் மற்றும் கூட்டங்கள் மூலம் மக்களை தெளிவுபடுத்தல் தேர்தல்களில் போட்டியிட பெண்களை தூண்டுதல், தனிப்பட்ட அல்லது குழுவாக போட்டியிடும் பெண் வேட்பாளர்களுக்கு பல்வேறு வகையில் ஒத்துழைப்பு வழங்கல், பங்குமுறைமையினை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுத்தல் மற்றும் அதற்காக பெண்கள் கொள்கை பிரகடனம் போன்ற துண்டுபிரசுரங்களை உருவாக்கி மக்கள் மத்தியில்

பகிர்தல் போன்ற செயற்பாடுகள் பலவற்றை நடைமுறைபடுத்தியுள்ளனர். இவ் அரசசார்பற்ற நிறுவனங்களில் விசேடமாக தேசிய மட்டங்களில் செயற்படுகின்ற பெண்கள் ஆய்வு மையம், பெண்கள் மற்றும் ஊடக ஒன்றியம், இலங்கை தென்னாசிய ஒத்துழைப்பு நிறுவனம், இனவர்க்க ஆய்வு தொடர்பான சர்வதேச மையம், தேசிய சமாதான பேரவை, வர்க்கவாத மற்றும் அனைத்து விதமான பாரபட்சங்களுக்கும் எதிரான சர்வதேச மையம் (IMDAR), சமூக விஞ்ஞானிகளின் சங்கம், சர்வோதய பெண்கள் இயக்கம், எக்ரோமாட் நிறுவனம், ஆய்வு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான முஸ்லிம் பெண்களின் ஒன்றியம், பெண்கள் ஆய்வு மற்றும் பரிசோதனை மையம், சிங்கள பெண்கள் மேம்பாட்டு நிறுவனம், லக்பிமே மவ்வரு மற்றும் தியனியே (தாய்நாட்டு தாய்மார்கள் மற்றும் பெண்கள்) மற்றும் தேசிய ஜனநாயக நிறுவனம் என்பவை முக்கியமானவையாகும்.

இரண்டாயிரமாம் தசாப்தத்தின் மத்திய காலத்திலிருந்து இவ்வாறான செயற்பாடுகள் பிரதேச மட்டத்தில் பரவலடைந்தன. கிராம மட்டங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக தெளிவூட்டல் மற்றும் பெண்களுக்கு அரசியல் தலைமைத்துவ பயிற்சி வழங்கும் வேலைதிட்டத்தை நடைமுறைபடுத்தல், போதனை மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் போலவே கிராமிய மக்கள் பெண் தலைவர்களை பிரதேச சபை தேர்தல்களில் போட்டியிட தூ ண்டுதல் மற்றும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்றவற்றை பிரதேச சார் பெண்கள் அமைப்புகள் நடைமுறைபடுத்தத் தொடங்கின. நுவரெலியா சிங்கள தமிழ் கிராமிய பெண்கள் அமைப்பு, பதுளை பெண்கள் மத்திய நிலையம், மொனராகலை சமூக பொருளாதார மற்றும் சூழல் அபிவிருத்தி நிறுவனம் (SEEDO), புத்தளம் ஊவா வெள்ளச விவசாய பெண்கள் நிறுவனம், குருணாகலை பெண்கள் வள மத்திய நிலையம், திருகோணமலை விழுது நிறுவனம், காலி திரியட்ட சவிய பெண்கள் அமைப்பு, கண்டி சமாதான மற்றும் நல்லாட்சிக்கான பெண்கள், மாற்று அபிவிருத்திக்கான மையம் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் அமைப்பு போன்றன இவ்வாறு பிரதேச மட்டத்தில் சிறப்பாக செயற்பட்டன. அரசசார்பற்ற நிறுவனங்களின் பெரும்பாலான செயற்திட்டங்கள் 2 - 3 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு இவை ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு செயற்றிட்டங்கள், உலக வங்கியின் நிதிச் செயற்திட்டங்கள், ஐரோப்பிய சங்கம், ஸ்கென்டினேவிய

சர்வதேச நிதிக்கான முகவராண்மை, சர்வதேச ரிபப்ளிகன் நிறுவனம், சுவீடன் சர்வதேச நிதிக்கான முகவராண்மை, ப்ரெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங், கொன்ரட் எடிநியுவர் ஸ்டிப்டுங், ஜேர்மன் தொழிற்நுட்ப உதவி (GTZ), ஆசிய மன்றம், நோர்வே போட்ஸ் மன்றம் (NORAD) போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் பெற்றுக் கொடுத்த நிதி உதவியின் கீழ் செயற்பட்டன.

இச் செயற்பாடுகளால் எதிர்பார்த்த பெறுபேறுகள் அவ்வாறே கிடைக்காவிட்டாலும் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் தேவை தொடர்பில் இலங்கை சமூகத்தில் முன்னரை காட்டிலும் ஓரளவு தெளிவினை ஏற்படுத்த இவை பயன்பட்டன என்பது தெரிகிறது. இப்பிரச்சினை தொடர்பிலான ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளைப் பிரசுரித்துள்ளன. அரசியல்வாதிகளின் தேர்தல் உறுதி மொழிகளை நிறைவேற்றாவிட்டால் பெண்களுக்காக பங்கொன்றை ஒதுக்குதல் தொடர்பில் கட்சி தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஓரளவேனும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. விசேடமாக தென்னாசிய நாடுகளில் நடைமுறையிலுள்ள பங்கு முறைமை தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற சமூக குழுக்களுக்கு சிறிதளவேனும் தெளிவொன்று ஏற்பட்டுள்ளது. சம்பிரதாயப்பூர்வமாக அரசியல் கட்சிகளின் வேட்பு மனுக்கள் கிடைக்காத பெண்கள் அதற்கு எதிராக சுயாதீன குழுவாக போட்டியிடும் போக்கு காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு சவால் விடுத்த பெண்களுக்கு 1990 களில் நடைபெற்ற தேர்தல்களில் பெண்கள் பெற்றுக் கொடுத்த மொத்த வாக்குகளின் ஒப்பீட்டளவில் கூடுதலான வாக்குகளை பெற்றுக் கொள்ளுவதற்கு தற்கால தேர்தல்களில் முடியுமாக இருந்தது. இந்த மாற்றங்கள் இலங்கையின் ஒட்டு மொத்த பெண்கள் பிரதிநிதித்துவத்தின் தொகை மற்றும் பண்பு ரீதியான பாரிய அழுத்தங்களை கொடுக்காவிட்டாலும் இப்பிரச்சினை தொடர்பில் சமூக குழுக்களுக்கிடையில் கருத்தியல் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு ஓரளவிற்கேனும் அழுத்தம் கொடுத்துள்ளது.

இந்த பிரச்சினை தொடர்பில் ஈடுபாடு காட்டும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தேர்தல் காலங்களில் மட்டுமின்றி தொடர்ந்தும் செயற்பட்டு கொண்டிருக்குமாயின் இன்றிலும் பார்க்க சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு என்பது அண்மைய கால ஆய்வுகள் மூலம் தெளிவாகிறது. எனினும் இந்த செயற்பாடுகளுக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும் முறை அதன் செயற்றிட்டத்தின் தன்மையின்

அடிப்படையில் அநேகமான வேளைகளில் நடைமுறைப்படுத்தப்படும். இதனால் பெண்கள் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றினைந்து பெண் பிரிதிநிதித்துவத்தை வளர்ச்சியடைய செய்ய உறுதியான அமைப்பாக செயற்படுவது இன்றைய இலங்கையிள் காலத்தின் தேவையாக உள்ளது.

# 4

# உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண் பிரதிநிதித்துவ வளர்ச்சி: சமாதான மற்றும் நல்லாட்சிக்கான பெண்களின் (WPGG) செயற்றிட்டம்

சமாதான மற்றும் நல்லாட்சிக்கான பெண்கள் அமைப்பு 2007 இல் (கண்டி) ஆரம்பிக்கப்பட அடிப்படையாக அமைந்தவர்கள், பெண்களின் பிரதிநிதித்துவ அபிவிருத்தி தொடர்பில் ஆய்வுகளைச் செய்து நீண்ட காலமாக இது தொடர்பில் விசேட ஈடுபாட்டுடன் செயற்படும் குழுவினர் ஆவர். அரசியல் தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்தல், பயிற்சி கைநூல்களை தயாரித்தல் மற்றும் இத்துறை சார்ந்த செயற்பாட்டாளர்களாகவும் இக்குழுவின் உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். சமாதானம் மற்றும் நல்லாட்சிக்கான பெண்கள் (WPGG) அமைப்பு விசேடமாக மத்திய மாகாணத்தில் (கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை போன்ற மாவட்டங்களில்) உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அபிவிருத்தி செய்வதனை பிரதான நோக்காகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு செயற்றிட்டம் ஒன்றினை ஆரம்பித்தது. இந்த செயற்றிட்டதோடு தொடர்புடைய செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முன், WPGG நிறுவனம் கண்டி மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகள் 10 இல் (கங்க வட்ட கோரளை, யட்டிநுவர, உடநுவர, உடபலாத்த, தொலுவ, தெல்தொட்ட, பாத்ததும்புர, பன்வில, அக்குரனை மற்றும் ஹரிஸ்பத்துவ) சமூக தலைவர்களுடன் அவர்கள் செய்கின்ற சமூக சேவைகள், தலைமைத்துவம் மற்றும் சமூகமயப்படுத்தல் என்பனவற்றை வழங்கும் சமூக நிறுவனங்கள், கட்சி அரசியல் மற்றும் பெண்கள் தொடர்பில் அவர்களிடமுள்ள கருத்துகள் அரசியல் நிறுவனங்கள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்திற்காக அவர்களிடமுள்ள ஈடுபாடு மற்றும் அவர்கள் முகம் கொடுக்கும் தடைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் 10 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இந்த கலந்துரையாடல்களில்

பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு WPGG அமைப்பு புள்ளிவிபரம் ஒன்றைத் தயாரித்தது. இதில் தெளிவாகிய விடயம் இந்த சமூக தலைவிகள் கிராம மட்டத்தில் சமூக, பொருளாதார மற்றும் சமய செயற்பாடுகளில் சிறப்பாக ஈடுபடுவதோடு, விசேடமாக பெண்கள் சங்கங்கள், மரண சங்கம், நலன்புரி சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெண்களின் சங்கம், சமுர்த்தி சங்கம் மற்றும் டெங்கு ஒழிப்பு சங்கம் என்பனவற்றில் தலைமை வகித்தனர் என்பதாகும். எனினும் கலந்துரையாடல்களில் பங்குபற்றிய சமூக பெண் தலைவியர் 268 பேரில் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்கள் ஆறு பேர் மட்டுமேயாகும். இவர்கள் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் ஈடுபாடு காட்டாமையில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பில் இக் கலந்துரையாடலில் ஆய்வுச் செய்யப்பட்டது. பங்குபற்றியவர்களின் கருத்துக்கு ஏற்ப இவர்களுக்கு பொதுவாக தாக்கம் செலுத்தும் அடிப்படை காரணங்களாக அமைந்தவை, இலங்கையில் ஒழுங்கான அரசியல் முறை மற்றும் தேர்தல்களில் போட்டியிடுதல் தொடர்பில் இவர்களிடம் காணப்படும் குறைந்த அறிவு, அரசியல் தலைமைத்துவத்திற்காக தேவைப்படும் என இவர்கள் கருதும் குணாம்சங்கள், திறன்கள் மற்றும் அனுபவங்கள் பெண்களிடம் இல்லாமை, தேர்தல் பிரச்சாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கான திறமை மற்றும் வளங்கள் இல்லாமை, மக்கள் அல்லது வாக்காளர்கள் பெண் வேட்பாளர்களுக்கு காட்டும் குறைவான ஒத்துழைப்பு, அரசியல் வன்முறை மற்றும் அரசியல் கட்சிகளில் வேட்பு மனுக்களை பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்கள் போன்றனவாகும்.

இந்த சமூக தலைவியர்களுக்கு இது தொடர்பில் அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களை அரசியலுக்கு தூண்டும் நோக்கோடு, WPGG அமைப்பினால் 2007 இல் கண்டி மாவட்ட பிரதேச செயலக பிரிவுகள் 8 இல் (கங்கவட்ட கோரளை, உட நுவர, யட்டிநுவர, தெல்தோட்டை, தொலுவை, அக்குரனை, ஹரிஸ்பத்துவ மற்றும் உடபலாத்த) சமூக தலைவிகளுக்காக வேலைத்திட்டங்கள் 5 வீதம் 40 ஏற்பாடு செய்யப்பட்டது. 2009 இறுதிபகுதியில் மாத்தளை மற்றும் நுவரெலியா பிரதேச செயலக பிரிவுகளில் அதற்குச் சமனான வேலைத்திட்டங்கள் 10 நடைபெற்றன. இந்த தெளிவுபடுத்தும் வேலைத்திட்டத்தில் ஆண் - பெண் சமத்துவம், மனித உரிமைகளும் பெண்களும், இலங்கையில் அடிப்படை உரிமைகள், பெண்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்துவதற்கான

பெண் அரசியல் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம், பெண்களின் பிரதிநிதித்துவத்தின் சர்வதேச மற்றும் தேசிய நிலைமைகள், அரசியல் பிரதிநிதித்துவத்தில் பெண்கள் முகங் கொடுக்கும் சவால்கள் அவற்றை தீர்த்துக் கொள்ளுவதற்காக வெளிநாடுகள் பயன்படுத்தும் உபாய முறைகள், பங்கு முறைமை, அதன் குறை நிறைகள், உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண் பிரதிநிதித்துவத்தை அபிவிருத்தி செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் போன்ற தலைப்புகளில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இந்த காலத்தில் மலையக FM வானொலி சேவையோடு 18 கலந்துரையாடல்களும் தமிழ் மற்றும் சிங்கள பத்திரிகை சிலவற்றில் (லங்காதீப, திவயின, லக்பிம, வீரகேசரி மற்றும் தினகரன்) வெளியிடப்பட்ட 9 விசேட கட்டுரைகள் மூலமும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் மக்கள் மத்தியில் ஓரளவு தெளிவினை ஏற்படுத்தவும் WPGG நிறுவனம் முயற்சி செய்தது.

ஒரு வருட காலத்தினுள் செய்யப்பட்ட இந்த தெளிவுப்படுத்தல் மற்றும் தூண்டுதல்களின் பெறுபேறாக மத்திய மாகாண சமூக தலைவிகள் 52 பேர் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட விருப்பம் தெரிவித்தனர்[3]. எனினும் இதற்கு தேவையான அரசியல் தெளிவு மற்றும் திறன்களை ஏற்படுத்தி தரும்படி இவர்கள் WPGG நிறுவனத்தை கேட்டிருந்தனர். தலைமைத்துவப் பயிற்சி, ஜனநாயக அரசியல் முறைகளின் விசேட பண்புகள், அரசியல் கட்சிகளுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல், சமூகத்தின் பல்வேறு தரப்பினருடனும் வலையமைப்பாதல், நல்லாட்சி, இலங்கையில் அரசியலமைப்பு கட்டமைப்பு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள், விகிதசம பிரதிநிதித்துவ முறைமை செயற்படும் விதம், தேர்தல்களில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும்முறை, தேர்தல் சட்டங்கள், அவை மீறப்படும்போது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள், மத்திய அரசாங்கம், மகாணசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் அதிகாரப் பங்கீடு, அரசியலமைப்புக்கான 17ம் திருத்தம் (இதுவரையில் 18ம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை), மக்கள் பிரதிநிதியொருவரின் பொறுப்புகளும் உரிமைகளும், தேர்தல் பிரச்சார

3 இந்த சமூகத் தலைவியர்கள், 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் விருப்பத்தை வெளியிட்ட முதல் சந்தர்ப்பம் இதுவல்ல. 2007-2009 காலப்பகுதியில் அரசியல் கட்சிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவரினதும் விருப்பங்கள் அவ்வப்போது வெளிப்பட்டன.

செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல், நிதியினை திரட்டிக் கொள்ளல், நேரடி விரிவுரைகளை நடத்தல், ஊடகங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளல், அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் உபாய முறைகள், பாதாதைகள் மற்றும் துண்டுபிரசுரங்களை தயாரித்தல், மக்களின் தேவைகளை அறிந்துகொள்ளல், அபிவிருத்தி செயற்றிட்டங்களை திட்டமிடல், வரவு செலவு திட்டம் தயாரித்தல் மற்றும் பங்குமுறைமையும் அவற்றை பயன்படுத்தும் நாடுகளின் அனுபவங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இத் தலைவிகள் WPGG நிறுவனத்திற்கு முன்வைத்தனர். இச் சமூகத் தலைவிகள் 2011 உள்ளூ ராட்சி தேர்தல்களில் போட்டியிடும் நோக்கில் இவர்களை பயிற்றுவிக்க 2 ஆண்டுகால செயற்றிட்டம் ஒன்றினை WPGG நிறுவனம் 2009 இல் ஆரம்பித்தது.

இச்செயற்றிட்டத்தில் அடிப்படை விடயங்கள் 5 உள்ளடக்கப்பட்டிருந்தன. அவையாவன.

i. 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட எதிர்பார்க்கின்ற பெண்களுக்கு முறையான அரசியல் தலைமைத்துவ பயிற்சிகளை வழங்குதல்[4].

ii. பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வதற்காக இந்த உத்தியோகத்தர்களுக்கு பெண் அரசியல் பிரதிநிதிகளுக்கு ஏற்ற எண்ணக்கரு தொடர்பிலான தெளிவொன்றினை பெற்றுக் கொடுத்தலும் இவ் இருசாராருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பொன்றினை ஏற்படுத்தும் நோக்கில் வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்.

---

4 WPGG செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் மத்திய மாகாணத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. எனினும் WPGG நிறுவனத்திற்கு பெண்கள் தொடர்பான அரசியல் தலைமைத்துவ பயிற்சிக்காக, பெண்களும் ஊடக ஒருங்கமைப்பு, காலி - சர்வோதய பெண்கள் இயக்கம், தேசிய சமாதானப் பேரவை, தேசிய ஜனநாயக நிறுவனம், சிங்கள - தமிழ் கிராமிய பெண்கள் அமைப்பு, பதுளை - பெண்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், மொனராகலை - சீடோ நிறுவனம், குருணாகலை - பெண்கள் வள மத்தியநிலையம், கண்டி - மாற்று அபிவிருத்திக்கான மையம் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்புகளால் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களிலும் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாகவிருந்தது.

iii. பெண்களுக்கு கூடுதலான வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களை தெளிவுப்படுத்தல் மற்றும் தூண்டுதல் வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தலும்
iv. 2011 உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் பெண்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சிறு கூட்டங்களை நடத்தல்
v. பல்கலைக்கழக மாணவர்களை இது தொடர்பில் தெளிவுபடுத்தி பெண்களின் உள்ளூராட்சி பிரதிநிதித்துவத்தினை வளர்ச்சியடைய செய்வதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களின் மூலம் அவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல்.

**முதலாவது செயற்பாட்டின்** கீழ் சமூக தலைவிகளுக்காக ஒருநாள் செயலமர்வு 15 ஏற்பாடு செய்யப்பட்டதோடு, வளவாளர்களாக நிர்வாக உத்தியோகத்தர்கள், நிபுணர்கள், தேர்தல் உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், கணக்காய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், (வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் மற்றும் பத்திரிகை கலைஞர்கள்) போலவே ஆண் - பெண் இருசாராருமான அரசியல்வாதிகளினதும் சேவைகளைப் பெற்றுக்கொண்டனர். மாகாண சபையொன்றிலும் பிரதேச சபையொன்றிலும் நிர்வாக செயற்பாடுகள் நடைபெறும் முறைகள் தொடர்பில் தெளிவினைப் பெற்றுக்கொள்வதற்காக மத்தியமாகாண சபை, பாத்ததும்பர மற்றும் அக்குறணை போன்ற பிரதேச சபைகளுக்கு சென்று அதன் தினந்தோறான பிரயோக செயற்பாடுகளை ஆராயும் வாய்ப்பும் இத் தலைவிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. மேலும், தற்போது மாகாண சபைகளிலும் உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகளின் பெண்பிரதிநிதிகள் எட்டு பேருடன் மற்றும் பிரதிநிதிகள் ஐவரினதும் எதிர்மறை மற்றும் நேர்கணிய அனுபவங்களையும் இத் தலைவிகளுடன் பகிர்ந்து கொள்ளும் வாயப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. கடந்த தேர்தல்களில் தோல்வியடைந்த பெண்வேட்பாளர்கள் நான்கு பேரினது அனுபவங்கள் பற்றியும் தெளிவடைவதற்கான வாய்ப்புகளும் இவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இப் பெண் பிரதிநிதிகளினதும் வேட்பாளர்களினதும் தொடர்புகள் கட்டியெழுப்பப்பட்டு, அரசியல் செயற்பாடுகளுக்கு தேவையான போதனைகளை சிரேஸ்ட தலைவிகளிடமிருந்து

பெற்றுக்கொள்வதற்கு இவ்வாறான வாய்ப்புகள் வழங்கப்பட்டன. 2009 இல் ஆரம்பமான இம் முறையான பயிற்சி வேலைத்திட்டங்கள் 1½ வருடங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு தேவையான கைநூல்கள், வேறு தேவையான பத்திரங்கள் மற்றும் காகிதாகிகள் என்பன பங்குபற்றுனர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**இரண்டாவது செயற்பாடுகளின்** கீழ் மத்திய மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் சேவையாற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் WPGG நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டன. பெண்களின் அரசியல் பங்குபற்றல் மற்றும் பெண்களின் வாழ்க்கை நிலையினை அபிவிருத்தி செய்வதற்காக இப் பயிற்சி வேலைத்திட்டம் மாவட்டத்திற்கு 5 எனும் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இச் செயற்பாடுகளின் முக்கிய நோக்காக அமைந்தது சமூக தலைவிகளின் தலைமைத்துவத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள பொருத்தமான சூழலை ஏற்படுத்துவதாகும். அத்தோடு பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் சேவை செய்யும் சமூக செயற்பாடுகளோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள், இச் சமூகத் தலைவிகளுடன் காணப்படும் தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கமும் இதன் பின்னால் இருந்தது. மேலும், பிரதேசத்தில் உள்ள பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தும் பொறுப்புள்ள பெண் உத்தியோகத்தர்களின் மூலம் விரைவான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவகையில் திறன்களை அபிவிருத்தி செய்தல் இதன்மூலம் எதிர்பார்க்கப்பட்டது. 2011ம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் போது, சமூக தலைவிகளுக்கு மிக சிறந்த சூழல் ஒன்றை உருவாக்கி கொடுப்பதற்கு பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் ஏதேனும் எதிர்கால உதவிகளை பெற்றுக்கொடுத்தலும் இந்த வேலைத்திட்டத்தில் பொதுவில் எதிர்பார்க்கப்பட்ட விடயமாகும். ஆண் - பெண் சமத்துவம், பெண் உரிமைகள், இலங்கையில் அவற்றை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள பொறிமுறைகளும் அவற்றின் செயற்பாடுகளும், சமூகசார் நிறுவனங்கள் மற்றும் தொடர்புகளை கட்டியெழுப்பல், இலங்கைப் பெண்கள் முகங்கொடுக்கின்ற பிரதான பிரச்சினைகள்,

அவற்றை அறிந்து கொள்ளல், தீர்த்துக்கொள்வதற்கு பின்பற்றக்கூடிய உபாயமுறைகள், இதற்காக பொலிஸ், சட்டத்தரணிகளின் ஆலோசனை உதவிகளைப் பெற்றுகொள்ளல், அரசியல் மற்றும் பெண்கள் வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பு, பெண் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம், பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் வீட்டு வன்முறை, அவற்றை குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள், பெண்களுக்கு அவசியமான சட்டங்களை உருவாக்குவதற்கு அழுத்தம் கொடுத்தலும் குறித்த செயற்றிட்டங்களை தயாரித்தலும், கண்காணிப்பு மற்றும் அவற்றை மதிப்பீடு செய்தல் போன்ற பல தலைப்புகள் தொடர்பில் ஒருநாள் செயலமர்வுகள் 5 இல் இந்த பெண் உத்தியோகத்தர்கள் தெளிவுப்படுத்தப்பட்டனர்.

**மூன்றாம் செயற்பாட்டின்** கீழ் பெண் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பில் மத்திய மாகாண மக்களை தெளிவுபடுத்தும் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன. 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் பெண்களுக்கு மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல் இதன் பிரதான நோக்கமாகும். இதற்காக சிறு குழு கூட்டம் அல்லது கலந்துரையாடல்கள் / கருத்தாடல்கள் 36 இணை மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் (கண்டி – பிரதேச செயலாளர் பிரிவுகள் - 20, மாத்தளை -11, நுவரெலியா -05) ஏற்பாடு செய்யப்பட்டன. இதற்காக பிரதேச மத தலைவர்கள், சமூக நிறுவன உறுப்பினர்கள், பிரதேச கட்சி செயற்பாட்டு உறுப்பினர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் குழுக்கள் போன்றவற்றை ஆண் பெண் வேறுபாடின்றி பங்கு கொள்ளச் செய்யப்பட்டன[5]. இந்த கூட்டங்களினூடாக மத்திய மாகாணத்தின் பெண்கள் சங்கங்கள் 238 உடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு WPGG அமைப்புக்கு கிடைத்தது. கூட்ட ஏற்பாடுகளின் போது பெண்கள் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் தலைமை வகித்ததோடு அவர்கள் காட்டிய ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது. அரசியல் மற்றும் பெண்களின் வாழ்க்கைக்கிடையில் உள்ள தொடர்பு, ‘‘அரசியல்’’ என்பதற்கான புதிய வரைவிலக்கணம், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்கு

5 சிறுகுழு கூட்டங்கள் அந்தந்த பிரதேசங்களில் உள்ள பெண்கள் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் மற்றும் சமூக தலைவிகளால் ஏற்பாடு செய்யப்பட்டன. குறித்த பிரதேசங்களில் பல்வேறு நபர்களுக்கும் இதற்காக திறந்த அழைப்பு விடுக்கப்பட்டதோடு பெண்களின் பங்குபற்றல் அதிகரித்திருந்தமையையும் கண்டு கொள்ள கிடைத்தது.

பெண் பிரதிநிதித்துவத்தின் அவசியம் மற்றும் பெண் பிரதிநிதித்துவ அபிவிருத்திக்கான பங்கு முறைமையின் அவசியம் தொடர்பில் இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன. 2013 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட எதிர்பார்த்திருந்த பெண்கள் இக்கூட்டங்களில் முன்னிலை வகித்ததோடு இதன் மூலம் இவர்களுக்கு மக்களுடன் காணப்பட்ட தொடர்புகளில் அபிவிருத்தி ஏற்பட்டது. மேலும் இந்த சமூக தலைவிகள் மற்றும் பெண்கள் சங்கங்கள் 238 இடையில் ஏற்பட்ட தொடர்புகள் கட்சி பேதம் அல்லது பிரதேச பேதங்களை பார்க்காது வலுவடைந்தன. இதன் பெறுபேறாக பெண்கள் சங்கங்கள் மற்றும் தலைவிகள் "மத்திய மாகாண பெண்கள் ஒன்றியம்" என்ற பெயரில் சுயாதீனமாக ஒன்றிணைந்தனர். 2011 இல் பெண்களுக்கு வேட்பு மனுக்களை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுப்பதற்கு இவர்கள் பொதுவாக செயற்பட்டனர். சர்வதேச பெண்கள் தினத்தினை கொண்டாடும் நிகழ்வுகளில் ஒன்றிணைந்த அறிக்கைகளை வெளியிடல், ஊடக கலந்துரையாடல்களை நடத்தல், கண்டியில் ஆர்பாட்ட ஊர்வலங்களை நடத்தல், ஜனாதிபதி மற்றும் பிரதான கட்சிகளில் பொது செயலாளர்களுக்கு மனுக்கள் மற்றும் கடிதங்களை முன்வைத்து 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் பெண்களுக்கு அதிகமான வேட்புமனுக்களை பெற்றுக் கொடுக்கும் படி கேட்டல், பிரதேச அரசியல் தலைவிகளை சந்தித்தல், பங்கு முறைமையினை அறிமுகப்படுத்த கோரி ஜனாதிபதிக்கு ஒரே தினத்தில் 1000 தபால் அட்டைகளை அனுப்புதல், கண்டி பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் திறந்த கூட்டம் மற்றும் ஊடக சந்திப்பொன்றினை நடத்தி பெண்களுக்கு 2011 இல் போதுமானளவு பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுக்காவிட்டால் மத்திய மாகாணத்தின் பெண்கள், உள்ளூராட்சி தேர்தல்களில் வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதாக அறிவித்தமை போன்றன இப்பெண்கள் அமைப்புகள் செய்த செயற்பாடுகளில் மிக முக்கியமானவையாகும். இக்காலத்தில் WPGG அமைப்பு ஊடக கலந்துரையாடல்கள் 3, வானொலி நிகழ்ச்சிகள் 4, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 2, பத்திரிகை செய்திகள் 18 (சிங்கள மற்றும் தமிழ்) போன்றனவற்றினூடாக பெண் பிரதிநிதித்துவத்தோடு தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமாக மக்களை தெளிவுபடுத்தியது.

மக்கள் கூட்டங்களை நடத்தும் காலங்களில் வேறு மக்கள் தலைவிகள் 35 பேர் 2011 உள்ளூராட்சி தேர்தல்களில்

போட்டியிடுவதற்கான விருப்பினை தெரிவித்ததோடு, WPGG அமைப்பின் ஒத்துழைப்பை வேண்டி நின்றனர். 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் WPGG செயற்றிட்டத்தினூடாக நேரடியாக பயிற்சி பெற்ற பெண்கள் மற்றும் சிறு குழு கூட்டங்களில் இக்குழுவோடு தொடர்புடைய பெண்கள் என 79 பேர் 2011 உள்ளூராட்சி தேர்தலுக்கு வேட்பு மனுக்களை சமர்பித்தனர். இதில் 16 பேருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் (சிறி லங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட சிறு குழுக்கள்) 12 நபர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியிலும் இருவருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ஒரு பெண்ணுக்கு மலைய மக்கள் முன்னணியும் வேட்புமனுக்களைப் பெற்றுக் கொடுத்தன. வேட்பு மனுக்களில் 48 வீதமானவை நிராகரிக்கப்பட்டன. இதில் ஒரு பெண் வேட்பாளர் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து வேட்பு மனுவினை பெற்றுக் கொண்டார். மேலும் 31 பெண்கள் ஒரிரு நாட்களில் ஆண்களுடன் இணைந்து சுயாதீன குழுக்களாக தேர்தல்களில் வேட்புமனுக்களை சமர்பித்தனர். சிறு குழு கூட்டங்களில் பங்குபற்றிய இளைஞர்களில் சிறிய பிரிவினரை பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர் சங்கங்கள் ஐந்தும் இச்செயற்பாடுகளில் பங்குபற்றியமை இச்செயற்றிட்டத்தால் எதிர்பார்க்கப்படாத பெறுபேறாகியது. இதற்கிடையில் 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட இளைஞர்கள் மூவர் WPGG அமைப்பின் ஒத்துழைப்பை பெற்றுதரும்படி வேண்டி நின்றனர்.

இதன்படி மத்திய மாகாண பெண்கள் 30 பேர் அவர்கள் தொடர்புபட்ட அரசியல் கட்சிகளை விட்டு வெளியேறி அக்கட்சிகளுக்கு சவால் விடுத்து வேறு குழுக்களோடு இணைந்து 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் வேட்புமனுக்களை முன்வைத்தமை பெண்களுக்கான சிறியதோர் அரசியல் வலுவூட்டலாக கருதமுடியும். இதற்கு முன்னரான தேர்தல்களிலும் இதற்கு சமனான அனுபவங்களைப் பெற்றிருப்பினும், அவர்கள் அவற்றை அமைதியாக ஏற்றுக் கொண்டு ஆண்களைப் போல் சம்பிரதாயபூர்வமாக கட்சிகளுக்கு சவால் விட தூண்டப்படவில்லை. வேட்புமனுக்களை சமர்பிக்கும் தினத்திற்கு முன்னரான தினத்தின் இரவில், பெரும்பாலான பெண்களுக்கு வேட்புமனுக்கள் கிடைக்கவில்லை என்ற செய்தி கிடைத்தவுடன் அவர்கள் அவசரமாக இந்த சவாலை வெற்றிக் கொள்வதற்காக மாற்று வழிகளை தேடியமை ‘‘இலங்கை அரசியல் கலையினை’’ ஒரு பாடமாக பெண்கள் தெரிந்துகொண்டனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

பிரதான அரசியல் கட்சிகளில் இவ்வாறு விலகிய மத்திய மாகாண பெண்கள் சிலருக்கு, கட்சி தலைமைத்துவம் எச்சரிக்கை கடிதங்களை அனுப்பி, மீண்டும் கட்சியுடன் சேவை செய்யும் படி கேட்டுக்கொண்டிருந்தாலும் இவர்கள் இதற்கு பிரதிபலிப்புகளை காட்டாமையானது பெண்கள் சிறியளவில் அரசியல் ரீதியாக வலுவூட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான மற்றுமொரு சாட்சியமாகும்.

WPGG செயற்றிட்டத்தின் **நான்காவது செயற்பாட்டின்** கீழ் 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட 43 வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக WPGG அமைப்பினால் கிராம மட்டங்களில் பிரச்சார கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. WPGG அமைப்பினால் தயாரிக்கப்பட்ட 6 பொது பதாகைகள் மற்றும் பிரசுரங்கள் 2 (சிங்கள - தமிழ் மொழிகளில்) இக்கூட்டங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டன. பெண் வேட்பாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் துண்டு பிரசுரங்களை தயாரித்துக் கொள்ளவதற்கு WPGG அமைப்பு ஒத்துழைப்பு நல்கியது. WPGG குழுவிலுள்ள பெண்கள் பல்வேறு கட்சிகளில் உறுப்பினர்களாக இருந்தாலும்[6], பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்தாலும் அவர்களில் கட்சி பேதம் அல்லது பிரதேச பேதம் பாராமல் அந்தந்த பெண் வேட்பாளர்களின் கூட்டங்களுக்கு ஆதரவு வழங்கியமை இலங்கை அரசியல் கலாசாரத்தில் புதியதோர் போக்காக சுட்டிக்காட்ட முடியும் எனினும் மாகாணமட்ட அரசியல் தலைவிகள் இவ்வாறு வேறு கட்சி வேட்பாளர்களுக்கு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது ஒத்துழைப்பு வழங்கியமையால் கட்சி தலைமைத்துவ மட்டத்தில் கேள்விகளுக்கு உட்படும் நிலைமை ஏற்பட்டு முரண்பாடுகள் உருவாகும் சூழ்நிலையும் காணப்பட்டன. WPGG செயற்றிட்டத்துடன் இணைந்து செயற்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்கள் சில பெண் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கினர். இந்த கூட்டங்களில் பெண்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவம் மற்றும் அரசியல் பெண்களின் தினந்தோறான வாழ்க்கையில் நேரடியாக தொடர்புபடும் விதம் தொடர்பாகவும் WPGG வளவாளர்களால் அவதானம் செலுத்தப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் இவ் விடயம் தொடர்பில் வெளியிட்ட பதாகை (போஸ்டர்), கண்காட்சி, வீதி நாடகம் மற்றும் குறுநாடக

6 WPGG செயற்றிட்டத்தின் ஆதரவு வழங்கிய பெண்கள் இலங்கை சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய ஜனநாயக கட்சி போன்ற கட்சிகளையும் பல சுயாதீன குழுக்களையும் சார்ந்தவர்களாக இருந்தனர்.

நிகழ்வுகள் இக்கூட்டங்களில் பயன்படுத்தப்பட்டன. மேலும், சில பெண் வேட்பாளர்களுடனான சில கலந்துரையாடல்கள் மலையக எப். எம் வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது. லங்காதீப, லக்பிம, திவயின, தினமின, வீரகேசரி, தினகரன் மற்றும் மலையக (பிரதேச பத்திரிகைகள்) பத்திரிகைகள் போன்றவற்றின் பிரதேச செய்தியாளர்கள் இக்கூட்டங்களின் தகவல்கள் மற்றும் நிழற்படங்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்டு ஆதரவு வழங்கினர்.

WPGG செயற்றிட்டத்தின் **ஐந்தாவது செயற்பாடாக** அமைந்தது, பெண்களின் உரிமைகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் பேராதெனிய பல்கலைக்கழகத்தின், (விசேட கலைப்பீடத்தில்) மாணவர்களை தெளிவுப்படுத்தல் மற்றும் இவர்களுக்கும் சமூக தலைவிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துவதாகும்.

2007ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீனமாக முன் வந்த சிங்கள மொழி மூல மாணவமாணவிகள் 349 பேருக்கும் தமிழ் மொழி மூல மாணவமாணவிகள் 157 பேருக்கும் ஒருநாள் தெளிவுபடுத்தல் செயலமர்வுகள் 7 நடத்தப்பட்டன. 2007 இல் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக சர்வதேச பெண்கள் தின கொண்டாட்டமொன்றை ஏற்பாடு செய்வதற்கு மாணவர்களை தூண்டியதோடு இதற்கு தேவையான நிதி உதவிகள் மற்றும் ஏனைய உதவிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இவ்வாறான கொண்டாட்ட நிகழ்வுகள் 4, சர்வதேச மனித உரிமைகள் தின கொண்டாட்டங்கள் இரண்டும், சித்திர மற்றும் பதாகை (போஸ்டர்) கண்காட்சி ஒன்றும், சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களின் மேடை நாடகங்கள் 3 மற்றும் வீதி நாடகவிழா ஒன்றினை ஏற்பாடு செய்ய மாணவர்களை தூண்டியதுடன், தேவையான ஒத்துழைப்புகளும் வழங்கப்பட்டன. மிகவும் கவர்ச்சிகரமான பதாகைகளுக்கு (போஸ்டர்) பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் அனைத்து செயற்பாடுகளும், பெண்களின் உரிமைகள் என அனைத்து தீர்மானம் எடுக்கும் மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம், பங்குமுறைமை தொடர்பான கருத்தியலுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளதோடு, அனைத்து செயற்பாடுகளிலும் இந்த

கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட விசேட போதனைகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பன நடத்தப்பட்டன. இந்த சமூக தலைவிகள், ஏற்பாடு செய்த செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றும் வாய்ப்புகளையும் WPGG நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்தது. விசேடமாக உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட சில பெண் வேட்பாளர்களுக்கு பதாகைகள் (போஸ்டர்) மற்றும் துண்டு பிரசுரங்கள் தயாரிக்கும்போதும் சில மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்கினர்.

2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட மத்திய மாகாணத்தின், பெண் வேட்பாளர்களுக்கிடையில் 10 பேர் வெற்றிபெற்றனர் (இணைப்பு: 1). இவர்களில் 7 வேட்பாளர்கள் முதன் முறையாக பிரதேச சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களாவர். இந்த ஏழு பேரில் ஐவர் WPGG செயற்றிட்டத்தின் கீழ் உதவி பெற்றவர்கள். இதற்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தல்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி மீண்டும் 2011 இல் தெரிவாகிய பெண் வேட்பாளர் ஒருவருக்கும் WPGG நிறுவனத்தின் ஆதரவு கிடைத்தது. தேர்தலில் வெற்றிப் பெற்ற ஏனைய ஐவருக்கும் நேரடியாக ஆதரவு வழங்க WPGG நிறுவனத்திற்கு முடியாமல் போனாலும் சமூக மட்டத்தில் செய்யப்பட்ட தெளிவூட்டல்களும், தூண்டுதல்களுமே இவர்கள் அதிக வாக்குகளை பெற்றுக்கொள்ளவும், விசேடமாக செயற்பாட்டாளர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளவும் காரணமாகின. 2011 இல் முதன்முறையாக மத்திய மாகாணத்தில் பிரதேசசபை தலைவியாக ஒருவர் தெரிவானார். இவர் மெததும்பர பிரதேச சபைக்கு தெரிவான பெண் பிரதிநிதியாவார். முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் யட்டிநுவரவில் தெரிவு செய்யப்பட்ட பெண் பிரதிநிதி, 2011ம் ஆண்டுக்கு முதல் நீண்டகாலமாக பிரதான அரசியல் கட்சியொன்றின் செயற்பாட்டு உறுப்பினராக செயற்பட்டாலும், இவரின் வேட்புமனு கோரல் பத்திரம் கட்சியினால் நிராகரிக்கப்பட்டது. இவர் விரைவான தீர்மானத்தின் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து வேட்புமனுவை தாக்கல் செய்து வெற்றி பெற்றதோடு, அந்த கட்சியில் பிரதிநிதித்துவம் செய்யும் முதல் சிங்கள பெண்மணியாகவும் உள்ளார். கலகெதர - ஹதரலியத்த பிரதேச சபைக்கு தெரிவாகியுள்ள பெண் பிரதிநிதியும் 35 வயதுக்கு குறைந்த இளைஞர் கோட்டாவில் போட்டியிட்ட பெண் வேட்பாளருமாவார். WPGG ஆதரவு வழங்கிய பெண் வேட்பாளர்கள் பெரும்பாலானோர் தேர்தலில் தோல்வி

அடைந்திருந்தாலும், தோல்வியாளர்களில் பெரும்பாலானவர்கள் 300 – 400 வரையான வாக்குகளைப் பெற்றிருந்தமை விசேடமானதாகும். இந்த பிரதேச சபை பெண் பிரதிநிதிகளில் 7 பேர் சிங்கள இனத்தை சார்ந்த பெண்களும், 2 தமிழ் இனத்தை சார்ந்த பெண்களும் மற்றும் 1 முஸ்லிம் இனத்தை சார்ந்த பெண் இடம்பெற்றுள்ளனர். அதேபோல் நுவரெலியாவில் சுயாதீன குழுவில் போட்டியிட்ட வேட்பாளர்கள் இருவரும் வெற்றிபெறுவதற்கு முறையே 6 மற்றும் 4 வாக்குகள் போதாமல் போனமை குறிப்பிடத்தக்கதாகும். நுவரெலியாவில் போட்டியிட்ட மற்றுமொரு பெண் வேட்பாளர் (மலையக மக்கள் முன்னணி) ஒருவர் முதலில் வெற்றிபெற்றதாக அறிவித்தும், இரண்டாவதாக இவருக்கு இரண்டு வாக்குகள் போதவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். 2006 உள்ளூராட்சி தேர்தல்களில் மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 6 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். மத்திய மாகாணத்தில் பிரதேச சபைகளுக்கு 2011 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 633 இருந்ததோடு, பெண்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரம் 1.5% ஆகும்.

WPGG செயற்றிட்டத்தின் 2008 – 2009 மாகாண சபை தேர்தல்கள் நேரடியாக இலக்கு வைக்கப்படாவிட்டாலும், அதன் செயற்பாடுகள் மூலம் சமூக தலைவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட தலைமைத்துவ பயிற்சி மற்றும் மக்களை தெளிவுப்படுத்தும் செயற்பாடுகள் என்பன மாகாண சபைகளில் பெண் பிரதிநிதித்துவம் வளர்ச்சி அடைவதில் ஓரளவேனும் அழுத்தத்தை கொடுத்தது. நுவரெலியாவில் மாகாண சபைக்கு போட்டியிட்ட பெண் வேட்பாளர்களின் வேட்புமனுக்களை பிரதான கட்சிகள் நிராகரித்தமையால், இந்த தீர்மானத்திற்கு எதிராக, WPGG பயிற்சி பெற்ற சமூக தலைவிகளின் குழுவொன்றால் ஆர்பாட்ட இயக்கமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்கள் செயலமர்வுகளில் கற்றுக்கொண்ட உபாய முறைகளை பயன்படுத்தி நுவரெலியா நகர மையத்தில் ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்து குறித்த கட்சிகளை அச்சுறுத்தி, கட்சியின் முடிவை மாற்ற இவர்களால் முடிந்தது. 2008/2009 மத்திய மாகாண சபைக்கு பெண் வேட்பாளர்கள் 6 பேர் போட்டியிட்டதோடு இவர்கள் அனைவருக்கும் WPGG சமூக தலைவிகள் பெரும்பாலானோர் அந்தந்த தேர்தல் தொகுதிகளில் ஆதரவு வழங்கினர். சிறு கூட்டங்களை ஏற்பாடு செய்தல், வீடுவீடாக செல்லுதல், பதாகைகள் மற்றும் துண்டு பிரசுரங்களை பகிர்தல், மத மற்றும் வேறு நிகழ்வுகளை

ஏற்பாடு செய்து கொடுத்தல், உணவு மற்றும் ஏனைய வளங்களைப் பெற்று கொடுக்கும் செயற்பாடுகளில் WPGG சமூக தலைவிகள் முன்னிலை வகித்தனர். இந்த பெண் வேட்பாளர்கள் 6 பேரில் 5 பேர் தெரிவானமை WPGG சமூக தலைவிகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றியாக கருதமுடியும். 2006 இல் மத்திய மாகாணத்தில் பெண் பிரதிநிதித்துவம் 3 ஆக மட்டுபடுத்தப்பட்டிருந்தது.

WPGG செயற்றிட்டத்தில் எதிர்பார்த்த பெறுபேறு ஒன்றினை பெற்றுக் கொள்ள முடிந்தது. அதாவது சமூக செயற்பாடுகளில் தொடர்பு கொண்டிருந்த வேட்பாளர்கள் மூவர் உடநுவர, ஹரிபத்து மற்றும் ஹேவாஹெட்ட பிரதேச சபைகளுக்கு தெரிவாகியமையாகும். இதில் 2 பெண் பிரதிநிதிகள் (சிங்களம்) ஐக்கிய தேசிய கட்சியிலும் இன்னொருவர் (முஸ்லிம்) சுயாதீன குழுவிலும் போட்டியிட்டனர். இருவர் அரசியல் பயிலுனர்களாவர்.

மத்திய மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் பெண்களின் பிரதிநிதித்துவம், WPGG செயற்றிட்டம் எதிர்பார்த்த வகையில் சாத்தியமாக்கிக் கொள்ள முடியாவிட்டாலும் அது முன்னர் இருந்த தொகையிலும் பார்க்க சிறிதளவேனும் (ஐவரினால்) வளர்ச்சியடைந்தது. இதற்கு மேலாக பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பிலும், பெண்கள் பொது செயற்பாடுகளில் தலைமையேற்பது தொடர்பிலான ஈடுபாடொன்று இப்பெண்களுக்கிடையே அபிவிருத்தி அடைந்தது. WPGG செயற்றிட்டத்தோடு தொடர்புபட்டு செயற்பட்ட பெரும்பாலான பெண்கள் சமூக மற்றும் அரசியல் நிறுவனங்கள் பலவற்றில் தீர்மானம் எடுக்கும் மட்டத்திலான பதவிகளுக்கு (தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர்) 2007- 2011 இடையில் தெரிவு செய்யப்பட்டனர். (இணைப்பு -2)

உள்ளூராட்சி தேர்தல்களில் (2011) மத்திய மாகாணத்தில் போட்டியிட்ட ஆண்களில் 546 பேர் வெற்றியடைந்ததோடு பெண்களில் வெற்றியடைந்தோர் 10 பேர் மட்டுமே ஆவர். பெண்கள் தேர்தல்களில் முகம் கொடுக்கின்ற சிற்சில பிரச்சினைகளை முன்னிறுத்துவதற்கு WPGG செயற்றிட்டம் முயற்சி செய்தபோதும் 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் எதிர்பார்த்த பெறுபேறுகளில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. சம்பிரதாய முறையில் ஆண்கள் அதிகூடிய வகையில்

வெற்றி பெற்றனர். இவ்வாறு ஆண்கள் பெரும்பான்மையாக வெற்றி பெறுவதற்கும் பெண்கள் பெரும்பான்மையாக தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் தொடர்பில் சரியான தெளிவினை பெற்றுக் கொள்வது, இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பெரிதும் பங்களிக்கும். அத்தோடு 2015 இல் நடைபெற உத்தேசிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களில் இதை விட அதிகமான பெண் வேட்பாளர்களுக்கு பிரதான அரசியல் கட்சிகளில் வேட்பு மனுக்களை பெற்றுக் கொடுக்கவும், தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு கடைபிடிக்க வேண்டிய உபாய முறைகள் என்னவென்பது பற்றி தேடிப்பார்த்தலும் பெண் பிரதிநிதித்துவத்தை அபிவிருத்தி செய்வதில் மிகவும் முக்கியமானதாகும்.

இது தொடர்பில் செய்யப்பட்ட பண்பு ரீதியான ஆய்வு தகவல்களுக்கான பகுப்பாய்வு அடுத்த அத்தியாயத்தில் செய்யப்படும்.

இணைப்பு – 1

## 2011 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவான பெண்கள் (மத்திய மாகாணம்)

| மாவட்டம் | தேர்தல் தொகுதி | உள்ளூராட்சி நிறுவனம் | கட்சி | பெண் பிரதிநிதியின் பெயர் | தெரிவான தடவைகள் | இனக்குழு |
|---|---|---|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | பிரதேச சபை | முஸ்லிம் காங்கிரஸ் | புஸ்பா கொடிதுவக்கு | முதலாம் தடவை | சிங்களம் |
| | யட்டிநுவர | பிரதேச சபை | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | அமரா குமாரி சிறிவர்த்தன | முதலாம் | சிங்களம் |
| | கட்டுகஸ் தொட்டை | நகர சபை | ஐக்கிய தேசிய கட்சி | எம். பௌயினா | மூன்று தடவை | முஸ்லிம் |
| | ஹரிஸ்பத்துவ | பிரதேச சபை | ஐக்கிய தேசிய கட்சி | பத்மா விஜேசிங்க | முதலாம் | சிங்களம் |
| | கலகெதர | பிரதேச சபை | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | சியாமா ஹேனே கம | முதலாம் | சிங்களம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மெததும்புர | பிரதேச சபை | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | சுனேத்திரா ஜயரட்ண | இரண்டாம் தடவை | சிங்களம் |
| | உடபலாத்த | பிரதேச சபை | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | ஜானகி ஏக்க நாயக்க | முதலாம் | சிங்களம் |
| மாத்தளை | அம்பன் கங்க கோரளை | பிரதேச சபை | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | U.G.பாலமெனிக்கே | மூன்றாம் | சிங்களம் |
| நுவரெலியா | நுவரெலியா | பிரதேச சபை | மலைய மக்கள் முன்னணி | லோகேஸ்வரி | முதலாம் | தமிழ் |
| | நுவரெலியா மஸ்கெலியா (ஹட்டன்) | பிரதேச சபை | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | அருள் நாயகி மேத்தீயூஸ் | முதலாம் | தமிழ் |

இணைப்பு -2

## சமூக நிறுவனங்களில் பதவியிலுள்ள WPGG அமைப்பின் அங்கத்தவர்கள்

| **உத்தியோக பதவி அல்லது பதவி வகிக்கும் சங்கம்** | **பெண்களின் எண்ணிக்கை** |
|---|---|
| கூட்டுறவு பணிப்பாளர் சபை (அங்கத்தவர்) | 03 |
| சமாதான நீதிவான்கள் | 08 |
| கிராமிய அபிவிருத்தி குழு உத்தியோகஸ்தர்கள் | 32 |
| சிவில் பாதுகாப்பு குழு – பெரகர குழு | 23 |
| மரண சங்கம் | 51 |
| பெண்களின் சங்கங்கள் | 57 |
| இணக்கசபை உறுப்பினர்கள் | 12 |
| பெரகர பாதுகாப்பு குழு | 06 |
| கிராமிய நலன்புரி சங்கம் | 24 |
| சர்வோதய சங்கம் | 23 |
| டெங்கு ஒழிப்பு குழு | 52 |
| சமுர்த்தி சங்கம் | 46 |
| பாடசாலை அபிவிருத்தி சங்கம் | 27 |
| பெண்கள் சங்கம் | 61 |

# 5

# 2011 உள்ளூராட்சி தேர்தல்கள் (மத்திய மாகாணம்): ஆண் - பெண் பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்திய காரணங்கள் தொடர்பிலான பகுப்பாய்வு

2011 உள்ளூராட்சி தேர்தல்களில் மத்திய மாகாணத்தில் ஆண் - பெண் பிரதிநிதித்துவம் தொடர்பில் தாக்கம் செலுத்திய எதிர்மறை மற்றும் நேர்கணிய சாதனங்களை பகுப்பாய்வு ரீதியில் ஆய்வு செய்வதற்காக 2011 மே மாதம் முதல் 2012 ஜுலை மாதம் வரை குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வின் முக்கிய நோக்கங்கள் இரண்டு காணப்பட்டன.

i. 2011 தேர்தல்களில் வெற்றிபெற்ற மற்றும் தோல்வியடைந்த ஆண் - பெண் வேட்பாளர்கள் இருசாராரும் பயன்படுத்திய உபாய முறைகளை பகுப்பாய்வு செய்தல்.
ii. 2015 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு எதிர்பார்த்திருக்கும் பெண்களுக்கு இதற்கான எதிர்கால உபாயமுறைகளை திட்டமிடுவதற்கு பகுப்பாய்வு ரீதியில் தகவல்களை வழங்கல்.

ஆய்வு முறை 3 வகையில் இருந்தது[7].

i. நேரடி கலந்துரையாடல்கள்
பங்குபற்றுனர்கள் 91 (பெண்கள் 44 மற்றும் ஆண்கள் 47) (இணைப்பு: 5)
ii. இலக்கு குழு கலந்துரையாடல்
பிரதேச சபை அதிகார பிரதேசங்கள் 18 – பங்குப்பற்றியோர் தொகை 362 (பெண்கள் 214 மற்றும் ஆண்கள் 148) (இணைப்பு: 6)

---

7 நேரடி கலந்துரையாடல்கள், விடய ஆய்வு மற்றும் குழு கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்யும் போது சிரேஸ்ட்ட விரிவுரையாளர் சோபனா ராஜேந்திரன் மற்றும் 2011ம் ஆண்டு பெண் - ஆண் சமத்துவம் மற்றும் அரசியலை கற்ற பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பெருவாரியாக ஒத்துழைப்பு வழங்கினர்.

iii. விடய ஆய்வு

விடய ஆய்வுகள் 13 – 2011 தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர்கள் (வெற்றிப்பெற்ற 8, தோல்வியடைந்த 5) என்ற வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நேரடி கலந்துரையாடல்களுக்காக மாகாண சபை பிரதிநிதிகள், 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர்கள், ஏனைய அரசியல்வாதிகள், அரசியலில் ஈடுபாடு காட்டுகின்ற சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் குறித்த நிருவாக உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இலக்கு குழு கலந்துரையாடல்களுக்கு மதத் தலைவர்கள், சமூக அமைப்பு தலைவர்கள், பிரதேச சபை தலைவர்கள், பிரதிநிதிகள், பிரதேசசார் நிர்வாக உத்தியோகத்தர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், WPGG செயற்றிட்டதோடு இணைந்து செயற்பட்ட அரசியல் தலைவிகள் மற்றும் வாக்காளர்கள் போன்றோரையும் பங்குபற்றச் செய்தனர். இக்கலந்துரையாடல் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், WPGG சமூக தலைவிகள், சில பிரதேச சபை தலைவர்களினதும் பிரதிநிதிகளினதும் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது. பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆலோசனையின் படி பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் ஈடுபாடு காட்டும் நபர்களும் இக்கலந்துரையாடலில் அழைக்கப்பட்டனர். நேரடி கலந்துரையாடல்கள் மற்றும் இலக்கு குழு கலந்துரையாடல்கள் அடிப்படை கேள்விகள் 5 இனை அடிப்படையாகக் கொண்டிருந்தது (வினா கொத்திற்காக இணைப்பு: 1ஐ பார்க்கவும்).

### (i). அரசியல் பிரதிநிதித்துவ நிறுவனங்களில் பெண் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம்.

நேரடி கலந்துரையாடல்கள் மற்றும் இலக்கு குழு கலந்துரையாடல்களில் பங்குபற்றியவர்களில் 91.4%, பெண் பிரதிநிதித்துவத்தில் பெரிதும் அவதானம் செலுத்தினர். நேரடி கலந்துரையாடலுக்கு முகங்கொடுத்த ஆண்களில் மூவரைத் தவிர ஏனைய அனைவரும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமானதென்றும், பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவடைதல் சமூக பிரச்சினை அல்லது அரசியல் பிரச்சினை என்றும் சுட்டிக் காட்டினர். பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியமானதா என்ற வினாவுக்கு, ஆண் - பெண் இருசாராரினதும் பிரதிபலிப்புகளாக

முன்வைத்த விடயங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அடிப்படை விடயங்கள் என்ற வகையில் ஒழுங்குபடுத்தப்பட முடியும்.

- ஆண் - பெண் இருசாராரும் சமமான மனித உயிர்கள் என்பதாலும், மக்கள் தொகையில் அரைவாசியினை பிரதிநிதித்துவம் செய்வதாலும், இவர்களுக்கு சமமான உரிமைகள் கிடைப்பதாலும், இருசாராருக்கும் தமது தேவைகளை பிரதிநிதித்துவம் செய்ய வாய்ப்பிருக்க வேண்டும் என்பது இக்கருத்துக்களிலேயே முதன்மையானது.

பிரதிபலிப்பாளர்கள் பெரும்பாலானோரால் இது தொடர்பில் சமமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஒரு பிரதேசசபை தலைவர் ஒருவர் குறிப்பிட்டதாவது ‘‘இருபத்து மூன்று பேர் இருக்கும் எமது பிரதேச சபையின் பிரதிநிதிகளில், பெண் ஒருவரே உள்ளார். இவர் இப் பிரதேசப் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள், விசேடமாக தண்ணீர் தட்டுப்பாடு, கழிவு முகாமைத்துவ குறைபாடுகள், சட்டவிரோத கட்டிடங்கள், பொது மலசலக் கூடங்களை துப்பரவு செய்யாமை, சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் குறைபாடு, மதுபாவனையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் வீட்டு வன்முறை போன்றவற்றை கலந்துரையாடி சபையினூடாக தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கு பெரிதும் முயற்சி செய்கின்றார். இவர் சபைக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர், நாங்கள் இப்பிரச்சினை தொடர்பில் கூடுதல் அவதானத்தை செலுத்தவில்லை’’ என்றார்.

- இலங்கைப் பெண்கள் பல்வேறு துறைகளில் வெற்றிகளைப் பெற்றுள்ளனர். இதனால் இவர்கள் தீர்மானம் எடுக்கும் அனைத்து மட்டங்களிலும் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இவர்கள் உயிரியல் மற்றும் சமூக விஞ்ஞான ரீதியாகவும் ஆண்களை விடவும் மாறுபட்டவர்கள், இதனால் இம்மாற்றங்கள் தீர்மானம் எடுக்கும் மட்டங்களிலும் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

இன்னுமொரு பிரதேசசபை தலைவர் குறிப்பிட்டதாவது ‘‘தற்போதைய பெண்கள் கல்வி மற்றும் தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முன்னணிக்கு வந்துள்ளனர். இதனால் அரசியல் துறையில் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பெண்களைப் பங்குபற்றச் செய்வது காலத்தின் தேவையாகும்’’ என்றார்.

இந்த கருந்து பெரும்பாலானவர்களின் பிரதிபலிப்பாக காணப்பட்டதோடு, மத்திய மாகாண சபையின் பெண் அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டதாவது "பெண்களுக்கு ஆண்களை பார்க்கிலும் மாறுபட்ட உயிரியல் மற்றும் சமூக பங்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் பெண்கள் மற்றும் பிள்ளைகள் தொடர்பிலான விடயங்களில் கூடுதல் அக்கறையுடன் செயற்படுகின்றனர். ….. அரசியல் பிரதிநிதித்துவம் பெண்களின் உரிமை மட்டுமல்ல. பெண்களின் தேவைகளின் பிரதிநிதித்துவம் இவர்களின் பொறுப்பாகும் ….. பெண்கள் மற்றும் பிள்ளைகளின் வாழ்க்கை தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பிரதிநிதித்துவ நிறுவனங்களில் கட்டாயமாக பெண்கள் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்" என்றார்.

- இலங்கை அரசியலில் காணப்படும் ஊழல், போட்டித்தன்மை மற்றும் வன்முறையான இயல்புகளை மாற்றுவதற்கு பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியமாகும். ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் நிலையான அபிவிருத்தி என்பவற்றை வெற்றிகொள்ள பெண்கள் தீர்மானம் எடுக்கும் மட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பதிலளிப்போரில் பெரும்பாலானோர் குறிப்பிட்ட மற்றுமொரு கருத்தானது, பெண்களின் பிரதிநிதித்துவத்தினால் உள்ளூராட்சி நிறுவன அரசியலின் எதிர்மறை இயல்பினை மாற்றமுடியும் என்பதாகும். பிரதேசசபை தலைவி ஒருவர் குறிப்பிட்ட கருத்தொன்றினை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது முக்கியமானதாகும். "பிரதேச சபையில் ஒரு பெண்ணாவது இருக்கும் போது, ஆண்கள் நடந்துக்கொள்வது முன்னரை விட மாறுபட்ட விதத்திலாகும். அவர்கள் பெண்களின் முன்னிலையில் ஒழுக்கமாக நடந்துக்கொள்ள முயற்சி செய்வர்…… இலங்கையின் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் உள்ள பெரும்பாலான பெண்கள், ஆண்களுகடன் ஒப்பிட்டு பார்த்தால் ஊழல் மற்றும் வன்முறைகளை பயன்படுத்துவது குறைவாகும். இவர்கள் கூடுதல் ஜனநாயகத் தன்மையோடும் வெளிப்படைத் தன்மையுடனும் செயற்படுகின்றனர்".

இன்னும் சில பிரதேசசபை உறுப்பினர்கள், பெண் பிரதிநிதிகள் இருவர் மற்றும் வேட்பாளர்கள் 11 பேர் குறிப்பிட்டது, தற்போதைய

பாராளுமன்றத்தில் சில ஆண்கள் நடந்துகொள்ளும் முறை மிகவும் மோசமானது என்றும், பெரும்பாலான பெண்கள் அவர்களைவிட ஒழுக்கமாக நடந்துகொள்கிறார்கள் என்பதாகும். இதனால் அரசியல் நிறுவனங்களை சமூகம், பார்க்கும் விதத்தினை மாற்றியமைக்க வேண்டியது அத்தியவசியமானதாகும் என்பதில் அவதானம் செலுத்தினர். அதனை செய்யக்கூடியதாக இருப்பது அந்தந்த நிறுவனங்களினுடைய பிரதிநிதிகளின் சிறந்த நடத்தையே ஆகும். கூடுதல் பெண்களின் பிரதிநிதித்துவத்தினால் இந்த மாற்றத்தை செய்ய முடியும் என இவர்கள் சுட்டிக்காட்டினர். பெரும்பாலான பெண்கள் கிராமிய மட்டங்களின் சமூக செயற்பாடுகளில் உண்மையாக ஈடுபடுவதால் இவர்களுக்கு சமூகம் தொடர்பான அனுபவம் அதிகம் என்பதோடு, இவர்களின் ஒத்துழைப்பை பிரதேசசபைகளுக்கு பெற்றுக்கொடுப்பதன் மூலம் பிரதேச அபிவிருத்தியை சமநிலை அபிவிருத்தியாக மாற்றிக்கொள்ள முடியும் எனவும் இவர்கள் சுட்டிக்காட்டினர்.

- பிரதேச சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காரியங்களில் பெரும்பாலானவை பெண்கள் மற்றும் பிள்ளைகளின் வாழ்க்கையோடு தொடர்புபட்டதாகும். இதனால் இது தொடர்பில் செயற்படும்போது போதுமான பெண்களின் பங்குபற்றல் கட்டாயமானதாகும்.

இந்த விடயமும், பெரும்பாலான பங்குபற்றுனர்களால் முன்வைக்கப்பட்டதோடு, ஒரு பிரதேச சபையின் தலைவர் குறிப்பிட்டதாவது "பிரதேசசபை சட்டத்திற்கு ஏற்ப இதன் செயற்பாடுகளில் அதிகமானவை பெண்கள் மற்றும் பிள்ளைகளின் வாழ்க்கையோடு தொடர்புபட்டதாகும். இந்த செயற்பாடுகளின் முக்கியத்துவம் மற்றும் அவர்கள் முகங் கொடுக்கின்ற பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்த்துக்கொள்ளும் முறை தொடர்பில் ஆண்களை விட பெண்களிடம் காணப்படும் தெளிவும், அனுபவமும் அதிகமாகும். இதனால் தீர்மானம் எடுக்கும்போது பெண்களின் பங்குபற்றல் கட்டாயமானதாகும்" என்றார்.

- பெண்கள் அரசியல் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்வது, இளம் சந்ததியினரான பெண்களினுள் இதற்கான ஈடுபாடு அல்லது தூண்டுதல் ஒன்றை ஏற்படுத்தும். நீண்டகாலமாக "பெண்களுக்கு பொருத்தமற்றது அல்லது பொருத்தமில்லை"

என கருதப்பட்ட பொது செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்காக இளம் பெண்களுக்கு தைரியம் ஒன்றை வழங்கும்.

இக் கருத்து புதிய பிரதேச சபை பெண் உறுப்பினரால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

‘‘என்னை சமூக செயற்பாடுகளில் தூண்டி, போதனைகளை வழங்கி அரசியலுக்கு அனுப்பியது மாகாணசபை பெண் உறுப்பினரொருவர் ஆவார். அரசியல் பயிற்சி செயலமர்வுகளுக்காக, இவர் என்னை அனுப்பியதோடு, அரசியல் கூட்டங்களுக்கும் அழைத்துச் சென்றார். இச் சந்தர்ப்பங்களில் அரசியல் தலைவர்களை அறிந்துகொள்ளவும், பல்வேறு அனுபவங்களை பெற்றுகொள்ளவும் என்னால் முடிந்தது……. 2011 தேர்தலில், எனது கட்சி எனக்கு வேட்புமனுவை பெற்றுக்கொடுக்கவில்லை. எனினும் மாற்றுவழிமுறையின் மூலம் தேர்தலில் போட்டியிட அவர் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினார். எங்களுக்கு பெண்களாக, இவ்வாறான சிரேஸ்ட தலைவிகளின் ஒத்துழைப்பு அத்தியவசியமாகும். நாங்கள் இன்று முன்னேறி வந்தால் எங்கள் பிள்ளைகளுக்கும் இது முன்மாதிரியாகும்… எனது அதிகார பிரதேசத்தில் குறைந்தபட்சம் இன்னும் 4 பெண்களையாவது, அடுத்த தேர்தல்களில் முன்னோக்கி தள்ளுவதற்கு நான் எதிர்பார்த்திருக்கின்றேன்’’.

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை நியாயப்படுத்துவதற்காக இந்த பிரதான கருத்துகளுக்கு மேலாக பலகருத்துக்களையும் பங்குபற்றியோர் முன்வைத்திருந்தனர். பெண்கள் சமூகமயப்படுத்தல் வேறுபட்டவகையில் நடைபெறுவதால் இவர்கள் மிகவும் தியாகத்துடனும் நிதானமாகவும் செயற்படுவதால் இவ்வாறான நடத்தை அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு இன்று அதிகமான தேவையாக உள்ளது என்றும் தெரிவித்தனர். மேலும், பெண்கள் குடும்பங்களில், சமூகத்தில் மற்றும் தேசிய இருப்பிற்கும் மற்றும் பாதுகாப்பிற்கும் பாரிய பங்களிப்பினை வழங்குவதால் இவர்கள் அரசியல் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என அதிகமான பங்குபற்றுனர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

## (ii). 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட பெரும்பாலான பெண்கள் தோல்வியடைய காரணம்

- வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ளும் போது பெண்கள் முகங்கொடுக்க நேர்ந்த பிரச்சினைகள்.

ஆய்வில் பங்குபற்றியவர்களில் 92.4% ஆனவர்கள் குறிப்பிட்டிருந்ததாவது, உள்ளூராட்சி தேர்தல்களில் பெண்கள் தோல்வியடைந்தார்களில்லை, இவர்களுக்கு குறைந்தபட்சம் வேட்டுமனுக்களையேனும் பெற்றுக் கொடுக்காமை பாரிய அசாதாரணம் மற்றும் பிரச்சினையாகும். தற்போதைய அரசியல் முறைமையினுள் ஆண்களுக்கு வேட்புமனுக்களை பெற்றுக்கொள்வதே மிகவும் கடினமானது என்றும், உறவினர், நெருக்கமானவர்கள், கூட்டமைப்பு தரப்பினர் மற்றும் தனிப்பட்ட வகையில் வேட்புமனுக்களை பெற்றுக்கொடுப்பது இலங்கை அரசியலில் சம்பிரதாயமாகியுள்ளது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டனர். அனைத்து கட்சிகளிலும் பால்நிலையின் காரணமாக பெண்கள் இன்னும் பாரபட்சங்களுக்கு உட்படுகின்றார்கள் என பதிலளிப்பவர்கள் சுட்டிக்காட்டினர். இந்த பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவித்த ஒரு பெண் வேட்பாளர் குறிப்பிட்ட ஆழமான கருத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

“நான் இலங்கை சுதந்திரக் கட்சியின் (இ.சு.க) செயற்பாட்டு உறுப்பினராக (ஹட்டன் - மஸ்கெலியா) 3 தசாப்தங்களாக செயற்பட்டிருக்கின்றேன். கட்சி மிகவும் கீழ்நிலையில் இருந்த காலத்தில் நானும், எனது குடும்பத்தினரும் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் அனுர பண்டாரநாயக்க அவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி செய்தோம். 1978, எனது கட்சி செயற்பாடுகளால் என்னை சிறையில் அடைத்தார்கள். எனினும் நான் கட்சியினை கைவிடவில்லை…… நான் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்களில், 6 முறை வேட்புமனுவுக்காக விண்ணப்பித்திருந்தேன்….. இந்த முறை (2011) எனது பெயர் வேட்புமனுவில் இருந்தது. நான் இதனை கைச்சாத்திட ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றேன். எனினும் இறுதி தருணத்தில் தொகுதி அமைப்பாளர் எனது பெயரை வெட்டிவிட்டது…. எனக்கு தெரியும் அவர் எனக்கு பயமென்று. நான் நீண்டகாலம், ஹட்டன் - மஸ்கெலியா பிரதேசங்களில் சமூக, கலாசார மற்றும் அரசியல்

செயற்பாடுகளை செய்கின்றேன். எனினும் அவர்கள் இதனை செய்வதில்லை…… அண்மையில் இவர் எமது நகரத்தில் மதுபான கடையொன்றினை திறக்க திட்டமிட்டார். நாங்கள் அதற்கு எதிராக ஊர்வலம் சென்றோம். ஜனாதிபதிக்கு அறிவித்தோம். இதனால் இவருக்கு இதனை செய்துகொள்ள முடியாமல் போனது. நான் தெரிவு செய்யப்பட்டால் இவ்வாறானவற்றை செய்ய முடியாது என்பது அவருக்குத் தெரியும்''.

இவ்வாறான கருத்துக்கள் பல எங்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டதோடு, ஐக்கிய தேசிய கட்சியின் (யடிநுவர) நீண்டகால பெண் செயற்பாட்டாளர், தனது அனுபவத்தை பின்வருமாறு விபரிக்கின்றார்.
''எனது சேவையை ஐக்கிய தேசிய கட்சிக்கு (ஐ.தே.க), 18 வருடங்களாக பெற்றுக்கொடுத்தேன். எமது பிரதேசத்தின் இலங்கை பெண்கள் அமைப்பின் தலைவியும் நானே. வேட்புமனுவுக்காக நான் நேர்முகத் தேர்வுக்கு செல்லும்போது அங்கிருந்த தலைவர்கள் நான் செய்த சேவைகளை பாராட்டி சொன்னார்கள் ''மாவட்ட அரசியல் வாதிகளைவிடவும் நான் அதிக சேவை செய்துள்ளமையாகும்'' எனினும் எனது தொகுதி அமைப்பாளர் அவரின் மச்சானின் மனைவிக்கும் தனது மனைவிக்கும் வேட்புமனுவினை வழங்கினார். என்னை வெட்டிவிட்டார். கட்சிதலைவர், பிரதி தலைவர் மற்றும் இப்பிரதேசத்தில் உள்ள கட்சி தலைவியொருவரும் எனக்கு வேட்புமனுவை பெற்றுக்கொடுக்க பல்வேறு வகையிலும் அழுத்தம் கொடுத்தாலும், தொகுதி அமைப்பாளர் கட்சியில் இருந்து விலக்கி விடுவதாக அச்சுறுத்தி அவரின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தினார்''.

இதற்கு சமமானதொரு பிரச்சினைக்கு முகங்கொடுத்த இ.சு.க (உடபலாத - ஹம்பன்கம்பொல) பெண் உறுப்பினர்கள் இருவர் அவர்களின் அனுபவங்களை இவ்வாறு எங்களோடு பகிர்ந்து கொண்டனர். ''சிறுவயது காலத்திலிருந்தே, நாங்கள் இருவரும், குடும்ப உறுப்பினர்களுடன் இ.சு.க பாரத்தை இழுத்தோம். நாங்கள் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் விருப்பத்தை தெரிவித்தபோது, எமது பிரதேச கட்சி தலைவரும், அவரின் மனைவியும் எங்களை உற்சாகப்படுத்தினார்கள். வேட்பு மனுக்களை தருவதாக தொடர்ந்தும் குறிப்பிட்டனர். எனினும் வேட்புமனுவினை கைச்சாத்திடும் வேட்பாளர்கள் கொழும்புக்கு செல்லவிருக்கிறார்கள் என்பதை அறிந்து நாங்களும்

தலைவரின் வீட்டுக்கு ஓடினோம். துரதிஸ்டவசமாக காவலாளர்கள் எங்களை நுழைவாயிலுக்குள்ளும் எடுக்க முடியாது என்றார்கள். எங்களுக்கு இதற்கு முன்னர் இவ்வாறான தடைகள் இருக்கவில்லை. இன்றுமட்டும் ஏனென்று நாங்கள் உடைத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றவுடன் கொழும்புக்கு செல்ல வேட்பாளர்கள் தயாராக இருப்பதை கண்டோம். எங்களுடைய பெயர் பட்டியலில் இல்லை என்பது தெரிந்ததும் நாங்கள் சண்டையிட்டோம், வாதம் செய்தோம். தலைவர் அங்கிருந்தவர்களிடம் கேட்டார், யாராவது விலகிக் கொண்டால் ஒருவருக்கெனும் வேட்புமனுவை கொடுக்க விருப்பம் என்று. ஒருவர்கூட இதற்கு முன்வரவில்லை...... நாங்கள் அடுத்தநாளே சுயாதீன குழுவுடன் இணைந்து வேட்புமனுவினை ஒப்படைத்தோம். எங்களுக்கு தெரியும், சுயாதீன உறுப்பினர் வெற்றி பெறுவது கடினம் என்று. எனினும் கட்சி மற்றும் கட்சி தலைவரால் எங்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராக செயற்பட வேண்டிய தேவை எங்களுக்கு இருந்தது''.

இ.சு.க கட்சிக்கு 17 வருடங்கள் சேவை செய்த, மாத்தளை பெண்வேட்பாளர் ஒருவர் வேட்புமனுவை பெற்றுக் கொள்ளும் போது அவர் முகம் கொடுத்த பிரச்சினைகள் தொடர்பில் இவ்வாறு விபரித்தார். ''நான் தேர்தல் தொகுதியில் பெண்கள் அதிகாரச் சபையின் செயலாளர் ஜனாதிபதி, பாராளுமன்ற மற்றும் மாகாண சபை போன்ற அனைத்து தேர்தல்களிலும் நான் விசேட வகிபாகம் ஒன்றினை மேற்கொண்டேன். இந்த பிரதேசத்தில் பெண்கள் சங்கங்களை நூற்று கணக்கில் உருவாக்கி விசேடமாக பெண்களின் வாக்குகளை கட்சிக்கு பெற்றுக் கொடுக்க செயற்பட்டேன். எனினும், நான் 2008/ 2009 மாகாண சபை தேர்தல்களில் வேட்புமனுவை கேட்டபோது எமது அமைப்பாளர் சொன்னார் தமது தம்பி ஜப்பானிலிருந்து வருகின்றார். அவருக்கு இம்முறை வேட்புமனு கொடுக்க வேண்டும். என்னை உள்ளூ ராட்சி தேர்தலுக்கு தயாராக சொன்னார்....... எனது சேவைகளை நான் தொடர்ந்தும் கட்சிக்கு அவ்வாறே பெற்றுக்கொடுத்தேன். 2011 இல் வேட்புமனு கேட்டதும் அவர் சொன்னார் அவரின் அடுத்த சகோதரர் இத்தாலியில் இருந்து வருவதால் அவருக்கு வேட்புமனு கொடுக்க வேண்டும் என்றார். இவ்வாறு எங்களை எந்நாளும் தொகுதி அமைப்பாளர் முட்டாள்களுக்கு சொல்வது போல......... இதனால் நான் சுயாதீன குழுவொன்றில் இணைந்தேன். எனினும் இவரின் பல்வேறு அச்சுறுத்தல்கள், வன்முறை செயற்பாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு

மத்தியில் எவ்வித பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

விசேடமாக தேர்தலில் பெண் வேட்பாளர்கள் பெரும்பாலானோர் அவர்கள் முகம் கொடுத்த வேட்பு மனுவை பெற்றுக் கொள்ளுவதிலுள்ள கஸ்டங்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள், அவர்களை ஏமாற்றியமை அல்லது தவறாக வழிகாட்டப்பட்ட விதங்கள் குறித்து விபரித்தனர். மேலும் இ.சு.க உறுப்பினரான (கங்கவட்ட கோரளை) அவரின் அனுபவத்தை இவ்வாறு விபரித்தார்.

“நான் 1996 இருந்து கட்சியின் செயற்பாட்டு உறுப்பினராக செயற்படுகின்றேன். தேர்தல் காலங்களில் நான் கிராம மட்டங்களில் பெண்கள் சங்கங்களை உருவாக்கி, சிறு கூட்டங்களை நடத்தி, ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு சென்று பிரச்சாரம் செய்தேன். எமது கட்சியின் தேர்தல் வெற்றிக்காக இந்த ஒத்துழைப்புகள் நிச்சயமாக உதவியது. அத்தோடு நான் பல்வேறு சமூகப், பொருளாதார மத செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டேன். எங்கள் கட்சியின் சில அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை பிரதிநிதிகள் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் படி தொடர்ந்தும் என்னை உற்சாகப்படுத்தினர்…. நான் செய்த வேலைகள் தொடர்பில் பதினைந்து கடிதங்கள் தயாரித்து வேட்பு மனுவுக்கான நேர்முக பரீட்சைக்கு எடுத்துச் சென்றேன். இதன்போது தேர்வு குழுவின் உறுப்பினர்கள் சிலர் அதிக புள்ளிகள் எனக்கே கிடைத்திருக்கின்றது என்று சொன்னார்கள். சிலர் தேர்தல் செயற்பாடுகளுக்கு நிதியினை திரட்டிக் கொள்ளும்படியும் எனக்கு எச்சரித்தனர். நான் முடியுமானவரை நிதியினை திரட்டிக் கொண்டேன். பதாகைகளையும் தயாரித்தேன். எனினும் வேட்பு மனு கையொப்பமிடும் தினத்திற்கு முதல் நாள் இரவு எனது பெயர் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்பதையறிய கிடைத்தது. இது தொடர்பில் தொகுதி அமைப்பாளரிடம் கேட்டபோது, பாரிய போட்டி காரணமாக இம்முறை முடியாது என அவர் கூறினார். அடுத்த முறை வழங்குகின்றேன். கட்சியிலிருந்து விலக வேண்டாம்” என்றார்.

வேட்பு மனுக்களை கொடுக்கும் போது உறவினர்கள் மற்றும் ஏனைய தொடர்புகளின் தாக்கங்கள் ஏனைய எல்லாவித தகமைகளையும் தாண்டி சென்று விடுகிறது என பெரும்பாலானோர்

பிரதிபலிப்பாளர்களின் (82.6%) கருத்தாகும். பாத்ததும்புர பிரதேச சபையின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டதாவது,

“தொகுதி அமைப்பாளர் முதலில் வேட்புமனுவை வழங்குவது, இருந்த பிரதிநிதிகளுக்கும், பின்னர் தமது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், இதன் பின்னர் கட்சிக்கு கைநீட்டி உதவி செய்தவர்களுக்கும், வலுவானவர்களுக்கும் அதன் பின்னர் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும், இளைஞர்களுக்கும் ......... இவ்வாறு சென்றால் பெண்களுக்கு அங்கே இடமொன்று மிஞ்சியிருப்பது இல்லை” என்றாகும்.

மஸ்கெலியா – விதுலி புர கட்சி பெண் செயற்பாட்டாளர்கள் ஒருவரின் கருத்தின் மூலம் இந்த விடயம் மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

“எமது தொகுதி அமைப்பாளர் மற்றொருவரின் கருத்தை கேட்பவர் அல்ல. பெரிய சர்வதிகாரி அவர் முதலிடம் அளிப்பது தமது மகனுக்கேயாகும். அரசியலில் புதியவராக இருந்தாலும், மகனுக்கு பிரதேச சபையில் தலைமையாசனத்தை பெற்றுக் கொடுக்கவே அவர் முயற்சி செய்வார்...... இதனால் மகனுக்கும் இன்னும் சிலருக்கும் வேட்பு மனுக்களை கொடுத்து எஞ்சியவற்றை அவர் “டம்மி” யாக நிரப்பினார்..... அல்லது வாக்குகள் சிதறி செல்லும் என்பதால் .... நாங்கள் இப்பிரதேசத்தில் வேலை செய்வதால் அவர் பெண்களான எங்களுக்கு வேட்பு மனுக்களை கொடுக்கப் பயந்தார்”.

அம்பகமுவ பிரதேச சபையின் தலைவர் குறிப்பிட்டதாவது, பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கு இருக்கின்ற முறையின் கீழ் வேட்பு மனுக்களை பெற்றுக் கொள்வது கடினமானதாகும். தான் 11 முறை வேட்பு மனு கேட்டு கிடைக்கவில்லை என்றும், அதிகமான பொறுமை மற்றும் நம்பிக்கையுடன் செயற்பட்டதால் 2011 வேட்பு மனுவை பெற்றுக் கொண்டு இவ்வதிகார பிரதேசத்தில் அதிக வாக்குகளையும் பெற்றுக் கொண்டேன் என்றார்.

பாத்ததும்புர பிரதேச சபையின் எதிர் கட்சி தலைவர் இவ்விடயம் தொடர்பில் மாறுபட்ட கருத்தினைக் கொண்டுள்ளமை இந்த கூற்றினூடாக தெளிவாகிறது. “இந்த நாட்டின் ஆண்கள் அனைத்து வித

உரிமைகளையும் அனுபவிக்கின்றனர். எனினும் சில உரிமைகளைப் பெண்கள் அனுபவிப்பதை பார்ப்பதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை. இதனால் கட்சி தலைவர்கள் பெண்களுக்கு வேட்பு மனுக்களை கொடுப்பதில்லை...... இன்று கிராமங்களில் பெண்கள் மரண சங்கம், பெண்கள் நலன்புரி, சமூர்த்தி மற்றும் கிராம அபிவிருத்தி போன்ற பல்வேறு சங்கங்களில் தலைமைத்துவத்தை எடுத்து செயற்படுகின்றனர். இவர்களில் ஒத்துழைப்பு இல்லாமல் கட்சிகளால் வெற்றி பெறமுடியாது. எனினும் இவர்களுக்கு வேட்பு மனுவினை பெற்றுக் கொடுத்தால் ஆண்களைத் தாண்டிச் சென்று வெற்றியடைந்து விடுவார்கள் என்று இந்த ஆண்கள் பயப்படுகின்றார்கள், மற்றது பொறாமை''.

- **பெண்களுக்கு அரசியல் தொடர்பிலுள்ள குறைவான அனுபவம், குறைவான ஏற்புடைமை, குறைந்த பிரசித்தி மற்றும் குறைந்த வாய்ப்புகள்**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பதிலளிப்போரில் 86.3% ஆனவர்களின் கருத்தாக அமைந்தது. ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்களுக்கு அரசியல் அனுபவம், ஏற்புடைமை, தலைமைத்துவம் மற்றும் பிரசித்தி குறைவாக உள்ளமை இவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான தடைகளில் ஒன்றாகும். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட உள்ளூராட்சி பிரதிநிதிகளில் 82 % ஆனவர்கள் 15-20 வருட நீண்ட கால அரசியலில் ஈடுபட்டவர்களாவர். இவர்களில் பெரும்பாலானவர்கள் குறிப்பிட்டதாவது ''பெண்கள் அவசரமாக உள்ளூராட்சி நிறுவனங்களில் வேட்பு மனுக்களை கேட்கிறார்கள். கட்சிகளில் அவ்வாறு வேட்பு மனுக்கள் கொடுப்பதில்லை. இதற்கு நீண்ட காலம் அனைத்து வேலைகளையும் இழுக்க வேண்டும். மேலும் காளான் முளைப்பது போல வெளியில் வரும் நபர்களுக்கு வேட்புமனு கிடைத்தாலும் வெற்றி பெற முடியாது'' என்றாகும்.

இதில் கருத்து தெரிவித்த அம்பகமுவ பிரதேச சபையின் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டதாவது, ''இன்று பெண்கள் அதிகமாக சமூக நலன்புரி வேலைகளில் தலைமைத்துவம் வகிக்கின்றனர். இது அரசியலில் ஈடுபடுவதற்கு சிறந்ததொரு பிரவேசமாகும். எனினும் அது மட்டும் போதாது சமூக சேவை செய்வதும் இலங்கையில் அரசியல் மைதானத்தில் போட்டியிடுவதும் ஒன்றல்ல...... சமூக சேவையோடு

கிராம மட்டங்களில் கட்சியோடு இணைந்து ஈடுபாட்டுடன் வேலை செய்ய வேண்டும்'' என்றாகும்.

இக் கருத்தினை உறுதிபடுத்தும் கூற்று ஒன்று 2011 வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட பெண் வேட்பாளர்கள் பலரால் முன்வைக்கப்பட்டது. இதில் ஒருவர் குறிப்பிட்டதாவது, ''நான் 12 வருடகாலமாக எமது பிரதேசத்தில் சமூக நலன்புரி செயற்பாடுகளைச் செய்கின்றேன். வேட்புமனுவுக்கான நேர்முகத்தேர்விலும் எனக்கு அதிக புள்ளிகள் கிடைத்தன. எனினும் வேட்புமனு கிடைக்கவில்லை.... நான் செய்யும் சேவைகள் பற்றி எமது தொகுதியின் கட்சி அமைப்பாளருக்கு தெரியாது. உண்மையில் கட்சி மட்டத்தில் எங்களுக்கு தொடர்பு இல்லை.... இதனால் அவர், இவரை எங்களுக்கு தெரியாது என்று சொல்லியிருந்தார்.... இது பெண்களாகிய நாங்கள் செய்யும் தவறாகும்'' என்றார்.

இதற்கு சமமான கருத்தொன்றை குறிப்பிட்ட பிரதேச சபை பெண் உறுப்பினர் ஒருவர் (ஹட்டன்) குறிப்பிட்டதாவது,

''பொதுவாக அரசியலில் ஈடுபாடு காட்டுகின்ற ஆண்கள் தேர்தல் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அரசியல்வாதிகளின் அண்மையில் செயற்படுகின்றனர். விழாக்கள், தேர்தல் வேலைகள், கிராமத்தின் சிரமதானம் போன்றவற்றில் அரசியல்வாதிகளுடன் ஒன்றிணைந்து வேலைசெய்து அரசியல் தலைவர்களையும், மக்களையும் அறிந்துக்கொள்கின்றனர். அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு தலைமைத்துவத்தினைக் கட்டியெழுப்பிக் கொள்கின்றனர். பிரசித்திப்பெற்ற நபர்களாகின்றனர். அதுமட்டுமின்றி தலைவரிகளிடம் வளங்களைப் பெற்றுக்கொண்டு கிராமங்களில் பல்வேறு நலன்புரி வேலைகளைச் செய்கின்றனர்.... உள்ளூராட்சித் தேர்தல்களில் வேட்புமனுக்களைப் பெற்றுக்கொள்ள இது சிறந்ததொரு தகைமையாகும்.... பாருங்கள் இங்கு இருக்கின்ற பெரும்பாலான வேட்பாளர்கள் அரசியல்வாதிகளின் இணைப்பு உத்தியோகத்தர்கள், ஊடாக பேச்சாளர்கள், பாதுகாப்பு, சாரதி அல்லது அண்மையானவர்கள் தானே? பெண்களுக்கு இந்த சாதகம் குறைவாகும்.... இவர்கள் நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்துகொண்டாலும் எமது கலாசாரத்திற்கு ஏற்ப, இவ்வளவு தூரம் அரசியல்வாதிகளிடம் நெருங்க முடியாது.

அரசியல் அனுபவம் குறைவானதால் பெண்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு அல்லது அதில் வெற்றிபெற காட்டும் தைரியம், தியாகம் மற்றும் ஈடுபாடு போதமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்படுகிறது. பதிலளிப்பாளர்களில் ஆண்கள் 75.4% இவ்வாறானதொரு கருத்தினையே முன்வைத்தனர்.

“ஆண்மைய கலாசாரத்தை மாற்றி பெண்களை அரசியலுக்கு இழுத்துச் செல்ல யாராலும் முடியாது. அவர்களே தைரியத்துடனும் தியாகத்துடனும் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு சவால் விடுத்து முன்நோக்கிச் செல்ல வேண்டும்”

பெரும்பாலானவர்கள் குறிப்பிட்டதன் படி, அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளை கட்டியெழுப்ப உள்ள வாய்ப்புகள் ஆண்களுடன் ஒப்பிடும் போது குறைவாகும். விழாக்கள் மற்றும் விசேட நிகழ்வுகளில் பொதுவில் பெரும்பாலான ஆண்கள் முன்வரிசை ஆசனங்களில் அமர்தல், அழைப்பிதழ் கிடைக்காமல் கூட விளக்கேற்றலில் பங்குபற்றல் மற்றும் அரசியல்வாதிகளுடன் தேநீர் அருந்துதல் என்பனவற்றில் ஈடுபடுவர். எனினும் பெண்கள் இன்னுமே இலங்கையின் கலாசாரத்தினுள் இவ்வாறான விடயங்களைச் செய்வதற்கு தூண்டப்படுதல் மிகவும் குறைவானதாகும். எனினும் இவ்வாறான சவால்களை வெற்றிக் கொண்டு அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளை கட்டியெழுப்பிய பெண்களுக்கு கூட வேட்பு மனுக்களை வழங்கும் போது சாதகமான நிலை ஏற்படவில்லை என்பது இவ்வாய்வின் மூலம் வெளியிடப்படுகின்றது. வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட எட்டு பெண்கள் குறிப்பிட்டதாவது, அவர்கள் குறித்த அதிகார பிரதேசத்தில் தேசிய மட்ட அரசியல் தலைவர்களுடன் ஒன்றிணைந்து நீண்ட காலம் சேவை செய்தாலும் தொகுதி அமைப்பாளர் வேறு ஒருவராக இருந்தமையால் அவர் இப்பெண்களின் வேட்பு மனுக்களை நிராகரித்தார். இத்தலைவர்கள் இருவருக்குமிடையில் காணப்படும் தனிப்பட்ட குரோதத்தின் காரணமாக இந்த வேட்பாளர்களே பலி வாங்கப்பட்டார்கள் என்பதாகும்.

அரசியல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள அல்லது சிரேஸ்ட நபர்களிடம் இவ்வாறான கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கு பெண்களுக்கு உள்ள வாய்ப்பு குறைவாகும் என பெரும்பாலான பெண்கள் குறிப்பிட்டனர். பதிலளிப்போரில் 81.2% மானோர்

குறிப்பிட்டதாவது “ஆண்கள் தமது கனிஷ்ட பிரிவினருக்கு அரசியலில் முன்னோக்கி செல்ல உந்துதல் அளிக்கின்றனர். சிரேஸ்ட பெண்களால் அது அரிதாகவே நடைபெறுகிறது”. 2011 தேர்தலில் போட்டியிட்ட (ஆய்வுக்குட்படுத்தப்பட்ட) பெண் வேட்பாளர்கள் 5 பேரை தவிர ஏனைய அனைவரும் இக்கருத்தை உறுதிபடுத்தினர். ஒரு கட்சியின் பெண் செயற்பாட்டாளர் (ரத்தொட்டை) குறிப்பிட்டதாவது “பாராளுமன்றத்திலுள்ள பெண்களுக்கு உண்மையில் இப்பிரச்சினைத் தொடர்பில் தெளிவான அறிவிருப்பதும் அது தொடர்பில் கதைப்பதும் ஓரிருவர் மட்டுமேயாகும். ஏனையவர்கள் பெண்களுக்கு பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொடுக்க ஈடுபாடொன்றை காட்டுவதில்லை. அவர்களின் உயர்குழாமினரின் சலுகைகளை பாதுகாத்துக்கொள்ள எமது பெண்களின் வாக்குகளை மட்டும் பெற்றுக்கொள்வதற்கு இந்த தலைவிகள் வருகின்றனர்…. எனினும் இந்நாட்டில் அதிகமான அரசியல்வாதிகள் இத்துறைக்கு வந்தது சிரேஸ்டவர்களாலேயே. எமது சிரேஸ்ட்ட தலைவிகள் இவ்வாறு உந்துதல் அளித்து முன்னுக்கு கொண்டுவந்த பெண்ணொருவர் இருக்கிறாரா?.... குறைந்தபட்சம் மதிப்புக்குரிய, சந்திரிகா, பெண்கள் விவகார அமைச்சர்கள், ஏனைய பெண் அமைச்சர்கள்…. இல்லை ஒரு பெண்ணையாவது தேர்தலுக்கு கொண்டு வருவதற்கு உதவி செய்துள்ளார்களா? எனினும் இந்த தலைவிகள் அவர்களின் குடும்பங்களின் ஆண்களுக்கு அரசியல் பதவிகளையும் மற்றும் வேட்புமனுக்களையும் பெற்றுக்கொடுக்க அதிக கஸ்டப்படுகின்றனர். கட்சித் தலைவர்களுடன் சண்டையிட்டேனும், உடன்படிக்கைகளைச் செய்தேனும் சரி குடும்ப அங்கத்தவர்களுக்கு இவர்கள், நீதியினை நிறைவேற்றுகின்றனர். பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு சக்தி இல்லை…. இந்த அற்ப சலுகைகளை அந்த வகுப்புக்கு மாத்திரம் வைத்துக்கொள்ள அரசியல்வாதிகளை விடவும் அதிக முயற்சி செய்வது சில பெண் பிரதிநிதிகளே… இதுவும் பாரியதொரு பிரச்சினையாகும்”.

சிரேஸ்ட அரசியல் தலைவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் முறையற்ற தொடர்புகள் அவர்களிடம் பெற்றுக்கொள்ளும் ஆலோசனைகள் மற்றும் பல்வேறு வகைகளில் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளல் என்பன பெரும்பாலான ஆண்களுக்கு வாக்குகளை வெற்றிக்கொள்வதற்கு சாதகமான அழுத்தத்தை கொடுக்கின்றது என இலக்கு குழுவில் பங்குபற்றிய பெரும்பாலானவர்களால் அவதானம்

செலுத்தப்பட்டது. பழைய இடதுசாரி கட்சியின் தலைவர் ஒருவர் இந்த கலந்துரையாடலில் குறிப்பிட்ட கருத்து இந்த விடயத்தை மேலும் உறுதிப்படுத்தியது.

“இலங்கை அரசியலின் பெண் தலைவர்களில், சிறந்த நபருக்குரிய அடையாளத்தினை கட்டியெழுப்பிக் கொண்டு இருப்பது ஓரிருவர் மட்டுமே. இதற்கு காரணம் குடும்ப உறுப்பினர் ஒருவரின் இறப்பின் காரணமாக, அவசரமாக இவர்கள் அரசியல் துறைக்கு வந்து, அரசியல் வரலாற்றில் விசேட சாதனைகளை உருவாக்க முடியாமையே.

உண்மையில் இவர்கள் இலங்கை அரசியல் பெண்களின் நிலையினை கட்டியெழுப்புவதற்கு நேர்கணிய முறையில் ஆதரவு வழங்கவில்லை. அரசியலுக்கு வருவதற்கு வேறு பெண்களை தூ ண்டுதல் செய்யவும் இல்லை”. இந்த விடயங்கள் ஒட்டுமொத்த அரசியல் தலைவர்களுக்கும் பொதுவில்லாததும், தேசிய மட்டத்தில் செயற்பட்ட/ செயற்படாத பெண் தலைவர்களில் பெரும்பாலானவர்கள், பெண்களின் பிரதிநிதித்துவ அபிவிருத்திக்காக போதுமான ஒத்துழைப்புகளை வழங்கவில்லை என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெருபாலானவர்களால் அவதானம் செலுத்தப்பட்டது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பெண் வேட்பாளர்களில் மூவரை தவிர, ஏனைய அனைத்து பெண்வேட்பாளர்களும் முகங்கொடுத்த மற்றுமொரு தடையாகவிருந்தது, தேர்தலுக்கான வளங்களின் தட்டுப்பாடாகும். இலங்கையின் அரசியல் முறைமையினுள் ஆண்கள் பல ஆண்டுகளாக தேர்தலுக்காக பணத்தினை சேர்க்கின்றனர். நெருக்கமானவர்கள். வர்த்தகர்கள் மற்றும் பழைய பாடசாலை அல்லது பல்கலைக்கழக சகாக்களிடம் அதற்கான ஆதரவுகளை பெற்றுக்கொள்கின்றனர். அத்தோடு சில அரசியல்வாதிகள் தமது சொத்துக்களை விற்று அந்த பணத்தினை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது இன்றும் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றது. எனினும் இதன் பின்னால் உள்ள பெரும்பாலான ஆண்களின் எதிர்பார்ப்பாக இருப்பது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் செலவு செய்த பணத்தின் இரண்டு மூன்று மடங்கு இலாபத்தை இதனூடாக பெருக்கிக் கொள்வதாகும். அத்தோடு ஆதரவு வழங்குபவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பது குறித்த

பிரதிநிதி மூலம் டென்டர் (கேள்வி) பெற்றுக்கொள்ளல், மணல், கல் மற்றும் **மரங்களை** விற்பனை செய்வதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ளல் மற்றும் சாராயத் தவரணைகளுக்கான அனுமதி பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் தமது பொருளாதாரத்தை வலுப்படுத்திக்கொள்வதாகும். இந்நிலையினுள் தொடர்ந்தும் பெண்கள் சாதகமற்ற நிலைமைக்கு உள்ளாவர். சம்பிரதாயமாக பெண்கள் “சிறந்த வருமானத்தை ஈட்டுபவர்களாகக்” கருதப்படுவதில்லை. பெரும்பாலான பெண்கள், ஆதரவாளர்களுக்கு இவ்வாறான உறுதிமொழிகளை வழங்கி நிதியினைத் திரட்ட தூண்டப்படுவது அரிதாகும். இதனால் தேர்தல் போட்டிக்காக அதிகமாக வளங்கள் செலவிடப்படுவது ஆண்களுக்கிடையே என்பதால், வளங்கள் குறைந்த பெண்கள் பின்தள்ளப்படுதல் தொடர்ந்தும் நடைபெறும். இப்பிரச்சினைத் தொடர்பில் மிகவும் உணர்வு பூர்வமான நிகழ்வுகள் பல பெண் வேட்பாளர்களால் ஆய்வின்போது முன்வைக்கப்பட்டது. இதில் பெண் வேட்பாளர் (உடபலாத்த) குறிப்பிட்டதாவது,

“உள்ளூராட்சி தேர்தலுக்கு என்னிடமிருந்த ரூபா 5000.00 செலவழித்து துண்டுப்பிரசுரங்கள் கொஞ்சம் தயாரித்துக்கொண்டேன். அதனை நானும் எனது அண்ணனும் கால்கள் வலிக்கும் வரை வீடுவீடாக நடந்து சென்று பகிர்ந்தோம். அண்ணனின் முச்சக்கர வண்டியில் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அதனை ஓரிடத்தில் நிறுத்திவிட்டே நாங்கள் நடந்தோம். சிறு கூட்டங்களை நடத்தவும், போஸ்டர்கள் கொஞ்சம் அடிப்பதற்கும் எமக்கு பயிற்சி வழங்கியவர்கள் உதவினார்கள்.... எனினும் பணமின்றி இவ்வேலையை செய்ய முடியாது. இதனால் எனது தங்க ஆபரணங்களை வங்கியல் அடகுவைத்து ரூபா 65,000.00 பெற்றேன்.... எனினும் இப்பிரதேசத்தின் மிகவும் பலம் வாய்ந்த அமைச்சரின் “கையாட்கள்” வேட்பாளர்கள் ரூபா 25 – 30 லட்சத்தை தேர்தலுக்காக செலவு செய்தார்கள். அப்படியாயின் பெண்களாகிய எங்களுக்கு அவர்களுடன் போட்டியிட முடியுமா....” என்றாகும்.

- **பெண்கள் அரசியல் ரீதியாக “உபாயமுறை” அற்றமை**

வாக்காளர்களுக்கிடையில் பல்வேறு வகையில் வளங்களை பகிர்ந்தளித்தல், இலங்கையின் அரசியல் முறையினுள் தேசிய மட்டத்தைப் போலவே உள்ளூராட்சித் தேர்தல்களை வெற்றிகொள்ளவும்

பெரும்பாலான வேட்பாளர்கள் பயன்படுத்துகின்ற கவர்ச்சிகரமான உபாயமுறையாக மாறியுள்ளது. விசேடமாக, உணவு வழங்கல், விழாக்களை அல்லது களிப்பு நிகழ்வுகளை நடத்தல், வீட்டுப்பொருட்கள், விவசாய பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், மூக்குக் கண்ணாடி, உடைகள் (டீசேர்ட்) மற்றும் பணம் போன்றவற்றை பகிர்ந்தளித்தல் போன்றன தேர்தல் சட்டத்திற்கு ஒவ்வாததாயினும், இது பிரசித்தி பெற்றதொரு உபாயமுறையாக மாறியுள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சில வேட்பாளர்கள் ரூபா 15 – 20 லட்சம் வரை இதற்காக செலவிட்ட சந்தர்ப்பங்கள் பற்றியும் கருத்து வெளியிடப்பட்டது. எனினும் பெண் வேட்பாளர்கள் ஐவரை தவிர ஏனைய வேட்பாளர்கள் குறிப்பிட்டதாவது இவ்வாறு வாக்காளர்களுக்கிடையில் வளங்களைப் பகிர்ந்தளிக்கும் வகையில் தமக்கு திறன் இருக்கவில்லை என்றாகும். ஆய்வில் பங்குபற்றியவர்களில் 81% ஆனவர்கள் குறிப்பிட்டதாவது ‘‘ஆண்கள் பல்வேறு வளங்களை பகிர்ந்தளித்தல், பொது செயற்பாடுகளில் பங்குபற்றல் (அமங்கள, மங்கள விழாக்கள், தானம், பிரித் பாராயணம்), உறுதிமொழிகளை வழங்கல், வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று உணவு, தண்ணீர், மதுசார பாவனை மற்றும் வாக்காளர்களை ஏமாற்றுதல் போன்றவற்றை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றனர். எனினும் தேர்தலில் பெண் வேட்பாளர்கள் இவ்வாறான உபாய முறைகளைப் பயன்படுத்துவது குறைவாகும். பெண்கள் இருக்கின்ற வளங்களையும் மிகவும் நிதானமாகவே பயன்படுத்துகின்றனர். இதனால் இன்று உலகில் இருக்கின்ற அரசியல் கலாசாரத்தினுள் இவர்கள் வாக்காளர்களுக்கு இடையில் பிரசித்தி அடைவதில்லை... தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் குறைந்தபட்சம் பிளாஸ்டிக் கதிரைகள் சிலவற்றையேனும் பகிர்ந்தளிக்க வேண்டும்....’’. தேர்தல் வாக்குறுதி வழங்கல் உபாயமுறை இலங்கையின் அரசியலில் சிறந்ததொரு உபாய முறையாக மாறியுள்ளது. பெண்களோடு ஒப்பிடும்போது ஆண்கள் இந்த உபாய முறைகளை சிறப்பாக பயன்படுத்துகின்றனர் என்பது பெரும்பாலான பதிலளிப்போரின் கருத்தாக அமைந்தது. கட்சி ஒன்றின் பெண் செயற்பாட்டாளர் குறிப்பிட்டதாவது... ‘‘எமது நகர சபை பிரதிநிதி தேர்தல் நெருங்கும் போது எந்நாளும் சமூக நிலையங்களுக்கு அடிக்கல் நாட்டுகின்றார்.... இந்த உறுதிமொழி இன்னும் 4 – 5 வருடங்கள் வரை இழுத்துக்கொண்டு போகும். அடுத்த தேர்தலில் சமூக நிலையத்திற்கு அருகில் கற்கள் சிலவற்றை கொண்டுவந்து போட்டுவிட்டு உறுதியளிப்பார். ‘‘சமூக நிலைய உறுதியை’’ தேர்தல்கள் சிலவற்றுக்கு பயன்படுத்தி

எங்கள் வாக்குகளை உடைத்துவிடுவார். எனினும் பெண்களுக்கு இந்த சதியை செய்வது கொஞ்சம் கடினமாகும்''.

2011 உள்ளூராட்சி தேர்தல்களில் பெரும்பாலான வேட்பாளர்கள் தமது உடலியல் சக்தி மற்றும் மனித பலத்தைக் காட்டுதல், தேர்தலில் வெற்றிகொள்வதற்கான சிறந்த உபாய முறையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. பெண்களை விட ஆண்கள் உடலியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகவும் பலமானவர்கள் என்ற சம்பிரதாய சிந்தனை இன்னுமே இலங்கையினுள் வேரூன்றியுள்ளது. பெரும்பாலான ஆண்கள் தேர்தல் நேரங்களில் இக் கருத்தினை தமக்கு சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ள கூடிய உபாயமுறையாக இருந்தது என்பது 2011 இல் தெளிவாகியது. இவர்களில் அதிகமானவர்கள் வேட்புமனுக்களை கையளிக்கும் தினத்திலும், வீட்டுக்கு வீடு செல்லும் போதும், மனித வளம் மற்றும் வாகன பலத்தை காட்டியதாகவும் அது பெண்களுக்கு சாதகமற்று இருந்ததாகவும் பிரதிபலிப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் சுட்டிக்காட்டினர். பிரதேசசபை உறுப்பினர்கள் பலரின் கருத்தில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டது. ஒரு பிரதிநிதி குறிப்பிட்டதாவது ''எனது வேட்புமனு தினத்தில் 75 வாகனங்களுடன் கூடிய ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்து, பலத்தை காண்பித்தேன்… அப்போதுதான் எங்களை சுற்றி இருக்கின்றவர்களை பார்த்து மக்கள் வாக்குகளை வழங்குவர்''. மற்றுமொரு பிரதிநிதி குறிப்பிட்டதாவது:

''நான் வீடு வீடாக செல்லும் போது குறைந்தபட்சம் ஆதரவாளர்கள் 20 – 25 என்னைச் சுற்றி சேர்த்துக்கொண்டு சென்றேன். அவ்வாறில்லாமல் எங்களின் பலத்தினை காட்ட முடியாது'' என்றாகும். எனினும் இந்த உபாய முறையினைப் பயன்படுத்த பெண்வேட்பாளர்கள் பெரும்பாலானவர்களுக்குத் திறமை இருக்கவில்லை என்பது இவர்களின் கருத்துகளில் இருந்து தெளிவாகியது. எனினும் வெற்றிபெற்ற பெண் வேட்பாளர்கள் அனைவருமே ஆண்களைப் போல் அல்லாவிட்டாலும், ஓரளவுக்கேனும் இந்த மனித பலத்தினை காட்டும் உபாய முறையினை பயன்படுத்தியிருந்தனர்.

- **வன்முறை மற்றும் நடத்தை ரீதியான தாக்குதல்**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 76% மானோர் குறிப்பிட்டதாவது வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் நடத்தைகளைத்

தாக்குதல் என்பன பெண்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கானப் பாரிய தடையாகும் என்பதாகும். இலக்கு குழு கலந்துரையாடலில் பங்குபற்றிய பெண்கள் விவகார அமைச்சில் பணிபுரிந்த நிரந்தர பெண் செயலாளர் ஒருவர் இக் கருத்தை உறுதிப்படுத்தி கீழ் கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

‘‘இலங்கையில் வன்முறைசார் அரசியல் கலாசாரம் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் உள்ள பாரிய தடையாகும். வன்முறை, அச்சுறுத்தல், நடத்தை தாக்குதல் மற்றும் வேட்புமனுக்களை கொடுப்பதற்கு தொகுதி அமைப்பாளர்கள் காட்டுகின்ற விருப்பமின்மை என்பன இதில் தாக்கம் செலுத்தும் எதிர்மறை சாதனமாகும்’’.

ஆய்வுக்கு உட்பட்ட பெரும்பாலான பெண் வேட்பாளர்களும் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளதோடு ஒரு பெண்வேட்பாளர் குறிப்பிட்டதாவது

‘‘எங்கள் பிரதேசத்தின் மிகவும் பலமான அமைச்சர், என்மீதும் எமது சுயாதீன குழுவில் வாக்கு கேட்ட பெண்ணொருவருக்கும், வேட்பாளரிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என தகவல் சொன்னார். நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. எனினும் எங்கள் பாதாகைகள் எல்லாவற்றையும் (போஸ்டர்கள்) கிழித்து எரிந்தனர். நான் தாயாரித்துக் கொண்ட கட்டவுட்டை (பதாகையை) கிராமத்திற்கு திரும்பும் வழியில் இரவு 12 மணிக்கு அடித்தார்கள். அதிகாலை 4 மணியாகும்போது அதற்கு தீ வைத்தார்கள். திட்டமிடப்பட்டிருந்த கூட்டங்களை நடத்த வேண்டாம் என அச்சுறுத்தினர். இதனால் ஒரே ஒரு சிறு கூட்டத்தையே என்னால் ஏற்பாடு செய்ய முடிந்தது. எங்களுக்கு பயிற்சிகளை வழங்கிய அம்மணிகளுக்கும் இதற்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டமையால் பொலிசுக்கு சொல்லி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலரை அழைத்துகொண்டு வந்தே அந்த கூட்டத்தையும் நடத்தினேன்.... நாங்கள் வீட்டுக்கு வெளியே செல்லும்போது மோட்டார் சைக்கிள்களில் ஆண் இளைஞர்கள் பின்புறம் தொடர்ந்து வருவார்கள்... எங்கே செல்கின்றோம், என்ன செய்கின்றோம் என்பதை பார்ப்பதற்கு... இதனால் தேர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் நாம் வாழவும் அந்நாட்களில் எமக்கு சுதந்திரம் இருக்கவில்லை’’ என்றாகும்.

நடத்தை தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் என்பன பெண்களை பின்னிலைக்கு தள்ள பயன்படுத்தப்படும் சிறந்ததொரு ஆயுதம் என்பதை பிரதேசசபை உறுப்பினர் ஒருவரும் அவரின் சபையின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் பெரும்பாலானோராலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டது. ‘‘பெண்கள் தேர்தலில் போட்டியிட வேண்டியதில்லை. அவர்கள் வருவதை தடுப்பதற்கான சிறந்த உபாயமுறையாக, அவர் என்னோடு படுத்தார் என்ற கதையினை பரப்புவதாகும். அவர்கள் இவ்வாறு செய்யவில்லையாயின் பெண்ணை படுக்கவைத்து சரி இந்த கதையினை கிராமம் முழுவதும் பரப்புவதற்கு எமக்கு முடியும்’’.

- **சமூக மற்றும் கலாசார தடைகள்**

இலங்கையின் கலாசாரத்தினுள், பெண்கள் சமூகமயப்படுத்தல் விதத்திற்கு ஏற்ப ஆண் - பெண் இருசாராரிலும் பெரும்பாலானவர்கள் பெண்களை பார்ப்பது மென்மையான, பொது செயற்பாடுகளில் தலைமைத்துவம் ஏற்க விருப்பமற்ற, இதற்கான காலம் மற்றும் பலம் இல்லாத, பாரிய தீர்மானங்களுக்கு வருவதற்கு முடியாதவர்களேயாகும். இலக்கு குழு கலந்துரையாடலில் ஒரு ஊடகவியலாளர் குறிப்பிட்டதாவது ‘‘இலங்கையின் குடும்பம், பாடசாலை, ஊடகம், மத நிறுவனங்கள் மற்றும் வேறு பெரும்பாலான சமூக நிறுவனங்களிலும் பெண்களின் நிலையினை உருவாக்கியிருப்பது வெட்கப்படும், சிறுபிள்ளைத்தனமான, ஆண்களின் ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட வகையில் செயற்படுபவர்களேயாகும். இதனால் சமூகத்திலும், இவர்களை தலைவர்களாக கருதுவதில்லை. இது பெண்களின் அரசியல் தலைமைத்துவத்தில் பெரிதும் தாக்கம் செலுத்தும் விடயமாகும்... இதனால் ஒருபுறம் சமூகம் இவருக்கு வாக்களித்து தலைமைத்துவத்தை வழங்க விரும்பவில்லை. மறுபுறம் பெண்களுக்கும் சமூகத்திலிருந்து வரும் தடைகளுக்கு சவால் விடுத்து முன் வருதற்கான தன்னம்பிக்கை குறைவாகும்’’.

இதனால் பெண்களை ஏமாற்றுதல் அரசியல் துறையில் பெரிதும் நிலவுகின்றது. வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பெரும்பாலான பெண்களை கட்சி அமைப்பாளர்கள் ஏமாற்றியிருந்தனர். ‘‘35 வயதுக்கு குறைந்த பெண்கள் மட்டுமே வேட்புமனு வழங்கப்பட முடியும். அதிக வயதானவர்களுக்கு வேட்புமனு கேட்க முடியாது’’ என பெரும்பாலான தொகுதி அமைப்பாளர்கள் இவர்களுக்கு கூறியிருந்தனர். இக்கருத்து

விமர்சனத்திற்கு உள்ளான பெரும்பாலான வேட்பாளர்கள் எங்களிடம் கேட்டிருந்ததாவது இவ்வாறானதொரு சட்டம் இருக்கின்றது என சில தொகுதி அமைப்பாளர்கள் குறிப்பிட்டதாகவும், அது உண்மையா என்றாகும்.

இன்னும் சில வேட்பாளர்கள் போலவே செயற்பாட்டாளர்களும் குறிப்பிட்டிருந்ததாவது ‘‘சில தொகுதி அமைப்பாளர்கள் மிகவும் ஊழல் நிறைந்தவர்கள், பெண்களை எல்லாவற்றுக்கும் வலைத்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். இவ்வாறு விரும்புபவர்களுக்கு வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ளல் இலகுவாகும். இதற்கு எதிரானவர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் என்றாகும்’’. ஒரு வேட்பாளரால் முன்வைக்கப்பட்ட கருத்து இதனுடன் மிகவும் பொருந்தியமைகின்றது.

‘‘எமது தொகுதி அமைப்பாளர் ஊழல் நிறைந்த, பெண்களின் பின்னால் செல்லுபவர். நாங்கள் வேறு பிரதிநிதிகளுடன் வேலை செய்தோம். அவருடன் வேலை செய்ய பயம்தானே. அவரின் வேலைகள் தொடர்பில் கட்சித் தலைவர்களுக்கும் நாங்கள் எழுதினோம், சொன்னோம்… எனக்கு வேட்புமனுவை பெற்றுக்கொடுக்க கட்சித்தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் சிரேஸ்ட உறுப்பினர்கள் இருவரும் இவருக்கு அழுத்தம் கொடுத்தனர். எனினும் இவர் இதற்கு மசியவில்லை. ஏனெனில் இவரின் தேவையை நான் பூர்த்தி செய்யவில்லை என்பதனாலாகும்’’.

இந்த விடயத்தோடு தொடர்புடைய வேறொரு நிகழ்வும், நுவரெலியா மாவட்டத்தின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பெண்வேட்பாளர் ஒருவராலும் முன்வைக்கப்பட்டது. இவர் குறிப்பிட்டதாவது
‘‘எனது வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. எனினும் எமது அமைப்பாளர் பல ஆண்டுகளாக பக்கத்தில் வைத்திருக்கும்…. (பெண்ணொருவர்) ஒருவருக்கு வேட்புமனு கொடுத்தார். அங்கும் அவளை முட்டாள் ஆக்கி. அவரூடாக கூட்டங்களை ஏற்பாடு செய்து, அவற்றுக்கு சென்று தனது மகனுக்கு விருப்புவாக்குகளை கேட்டார்….. இறுதியில் மகன் வெற்றிப்பெற்றார். ஐயோ பாவம் அந்தப் பெண் தோல்வியடைந்தாள்’’.

இந்தவகையில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சமூகத்திலுள்ள நிலைமைகளால் மட்டுமல்ல, பெண்களின் பால்நிலை தொடர்பினாலும்

அவர்கள் அரசியல் செயற்பாடுகளில் சாதகமற்ற நிலைக்கு உள்ளான முறை பற்றி பதிலளிப்பாளர்கள் பலர் சுட்டிக்காட்டினர்.

இலங்கை கலாசாரத்தினுள் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற மனைசார் பொறுப்புகள், இவர்களுக்குள்ள குறைவான சுதந்திரம் மற்றும் பாதுகாப்பற்ற நிலைமை, இவர்களின் தேர்தல் நடவடிக்கைகளில் சாதகமற்ற வகையில் தாக்கம் செலுத்துகின்றது என பதிலளிப்பாளர்கள் பலர் சுட்டிக்காட்டினர். ஒரு இளம் பெண் பிரதிநிதி குறிப்பிட்டதாவது "நான் வேலை செய்து மாலை வீடுவந்து, நண்பர்கள் 20 – 25 பேருடன் வீடு வீடாக சென்றேன். கூட்டங்களை ஏற்பாடு செய்தல், போஸ்டர் மற்றும் கட்டவுட்களை போடுதல், துண்டுபிரசுரங்களை பகிர்ந்தளித்தல் என்பவற்றை பெரும்பாலும் இரவுகளிலேயே செய்தோம். இரவு 2 - 3 மணிவரை நாங்கள் வேலைசெய்தோம். எனினும் பெண்களுக்கு இவ்வாறான நேரம் இல்லை. இரவில் அங்கும் இங்கும் செல்லவும் வாய்ப்பு இல்லை. பாதுகாப்பும் குறைவு...."

இதற்கு சமமான முறையில் மற்றுமொரு கலாசார சாதனம், அதாவது குடும்பங்களில் கிடைக்கும் குறைவான ஒத்துழைப்பு தொடர்பில் ஆய்வில் பங்குபற்றிய வேட்பாளர்கள் சிலர் கருத்து வெளியிட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் குறிப்பிட்டதாவது தேர்தலில் வெற்றிபெற்ற ஆண் - பெண் இருசாராரிலும் பெரும்பாலானோருக்கு கணவன் / மனைவி மற்றும் குடும்பத்தின் ஏனைய அங்கத்தினர்களின் ஆதரவு பெருமளவில் உதவியுள்ளது என்றாகும். எனினும் தோல்வியடைந்த பெண்வேட்பாளர்கள் குறிப்பிட்டதாவது இவ்வாறானதொரு ஒத்துழைப்பு கிடைக்காமை தோல்வியடைந்தமைக்கு காரணமாகும் என்றாகும். ஒரு பெண் வேட்பாளரின் கணவர் குறிப்பிட்ட இந்த கூற்றின் மூலம் இந்நிலைமை தெளிவாக விளங்குகின்றது. "நாங்கள் காதலித்து திருமணம் செய்து கொண்டோம். பிள்ளைகள் மூவர் உள்ளனர். மிகவும் சந்தோசமாக இருந்தோம். எனினும்.... அரசியலில் இறங்கிய பின்னர் இரவாகியே வீட்டுக்கு வருவார். சாப்பாட்டு வேலைகளையும் நானே செய்ய வேண்டியதாயிற்று...... முன்னர் எனக்கு சாப்பாடு பகிர்ந்து கொடுப்பார். அவர் வரும் போது பிள்ளைகள் கழுவப்பட்டிருக்கமாட்டார்கள். சாப்பிட்டிருக்க மாட்டார்கள். பாடசாலை வேலைகளை செய்திருக்க மாட்டார்கள்...... பல நாட்களாக நகம் வெட்டப்படவில்லை..... நானும் பிள்ளைகளும் சொல்வோம் அம்மா தேர்தலில் வெற்றிப்பெற்றால் நாங்கள் தோல்வியென்று".

இந்த பெண் வேட்பாளர் 2006 இல் முதலாவது முறையாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றவராவார். இந்த சந்தர்ப்பத்தில் அப்போது அவரின் குடும்பத்தின் ஆதரவு இவருக்கு கிடைத்தது. எனினும் 2011 இல் (இரண்டாம் முறை) குடும்பத்தின் சம்பிரதாய பொறுப்புகள் மற்றும் எதிர்பார்ப்புகள் முன்னரைபோல இவரால் செய்யப்படாமையால் ஏனைய அங்கத்தவர்களின் விசேடமாக கணவரின் பக்கமிருந்து பாரிய எதிர்ப்பு வந்தது. இதனால் குடும்பத்தின் உள்ளார்ந்த பிரச்சினைகளுக்கும் சமூகத்தின் எச்சரிக்கைகளுக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த சமூக மற்றும் மன உளைச்சல் 2011 இல் இவரின் தோல்வியில் பாரிய பங்களிப்பு செய்தது என்பது இவரின் கருத்து. சமூக தலைவிகளுக்கு அரசியல் பயிற்சி பெற்றுக்கொடுத்த வளவாளர்களுக்கும் குறித்த ஆண் அழுத்தம் கொடுத்து, இந்த பெண் வேட்பாளர் வெற்றிபெற ஆதரவு வழங்க வேண்டாம் என கேட்டிருந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்வாறு 2011 உள்ளூராட்சி தேர்தல்களில், மத்திய மாகாணத்தில் பெண்களின் தோல்விக்கு அரசியல், பொருளாதார விடயம் மட்டுமன்றி பல்வேறு கலாசார விடயங்களும் தாக்கம் செலுத்தியுள்ளது என்பது இந்த ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## III. தேர்தல் வெற்றிக்கு ஆண் பெண் இருசாராரும் பயன்படுத்திய உபாயங்கள்

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2011 தேர்தலில் வெற்றியீட்டிய பிரதிநிதிகள் போலவே பெண் பிரதிநிதிகளிலும் பெரும்பாலானோர் குறிப்பிட்டதாவது, நீண்டகாலமாக தமது தொகுதியில் மக்களுடன் அன்புடன் பல்வேறு நலன்புரி செயற்பாடுகளை செய்த, பல்வேறு வகையில் நிதியினை தேடிக் கொண்டு பிரதேச வளர்ச்சிக்காக குளங்கள், வீதிகள், சமூக நிலையங்கள், வாசிகசாலைகள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் போன்றவற்றை நிர்மாணித்தல் மற்றும் வறுமையான குடும்பங்களுக்கு நிதி அல்லது வேறு பொருட்களை நன்கொடை வழங்கல் அவர்களின் தேர்தல் வெற்றிகளுக்கு நேரடியாக அழுத்தம் கொடுத்தது என்றதாகும். இந்த பொது செயற்பாடுகளால் இந்த வேட்பாளர்கள், பெண்வேட்பாளர்கள் தலைவர்கள் என்ற உணர்வுடன் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு இரு சாராருக்குமிடையில்

அந்நியோன்னிய விசுவாசம் கட்டியெழுப்பப்பட்டதாகவும் வெற்றி பெற்ற அதிகமான ஆண் - பெண் இருசாராரும் சுட்டிக் காட்டினார்கள்.

ஆண் பிரிவினர் இதில் விசேடமாக அவதானம் செலுத்தியதாவது, இளைஞர்கள், வறுமையான குடும்பங்கள், சமுர்த்தி குடும்பங்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் வீதியோர வியாபாரிகள் போன்ற குழுக்களின் கவர்ச்சியினை பெற்றுக் கொள்வதற்காக இந்த உபாயத்தினை தாம் அதிகளவில் பயன்படுத்தியதோடு இது பெரிதும் வெற்றியடைந்தது என்றனர்.

இதனை உறுதிப்படுத்தும் வத்தேகம பிரதேச பிரதிநிதியொருவர் குறிப்பிட்டதாவது ‘‘ஏழு முறை எனது வேட்புமனு நிராகரிக்கப்பட்டது எனினும் நான் பல்வேறு செயற்பாடுகளால் நிதியினைத் தேடிக்கொண்டு இப்பிரதேசத்தில் குளங்கள், பாடசாலைகள், வாசிகசாலைகள் மற்றும் சமூக நிலையங்களைக் கட்டினேன். பாடசாலை புத்தகங்கள், தையல் இயந்திரங்கள், வீட்டு பாவனை பொருட்கள் போன்றனவற்றை பகிர்ந்தளித்தேன். அண்மையில் அரச சார்பற்ற நிறுவனமொன்றிலிருந்து ரூபா 3 இலட்சத்தினை பெற்றுக் கொண்டு கிராமத்திற்கு வீதியொன்றினை அமைத்தேன். இச்செயற்பாடுகளால் மக்கள் மத்தியில் நம்பிக்கையொன்று வளர்ந்தது. தொகுதியமைப்பாளரும் நான் வேலை செய்யக் கூடியவர் என்பதை அறிந்துக் கொண்டார். 2011 இல் எனக்கு வேட்புமனு கிடைத்தது. விருப்பு வாக்குகளில் எங்கள் கட்சியில் இரண்டாம் இடத்திற்கு வந்தேன்’’.

இந்த உபாய முறையை வேறு ஒரு வகையில் பயன்படுத்திய பிரதேச சபையின் தலைவர் ஒருவர் (கண்டி மாவட்டம்) குறிப்பிட்டதாவது, ‘‘நான் பல்வேறு பொது வேலைகளை செய்துள்ளேன். கட்சி பேதமின்றி அனைத்து பொது நிகழ்வுகளுக்கும், மங்கள, அமங்கல செயற்பாடுகளில் பங்குபற்றுவேன். நான் சிறிய உதவியொன்றை செய்தாலும் அவரின் பெயர் மற்றும் முகவரியை எழுதிக் கொண்டு ஒவ்வொரு வருடமும் வாழ்த்து செய்தியனுப்புவேன். நாங்கள் ஏற்பாடு செய்கின்ற அனைத்து செயற்பாடுகளுக்கும் அவர்களை அழைப்போம். அவர்களின் குடும்பங்களிலிருந்து எனக்கு அதிகமான வாக்குகள் கிடைக்கும்’’ என்றார்.

உடபலாத்த பிரதிநிதியொருவர் இதற்கு சமமான கூற்று ஒன்றினை முன்வைத்துள்ளார். ‘‘பிரதேச செயலாளர் காரியாலயங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள துறைசார் உத்தியோகத்தர்கள் 50 பேர் வரை இருக்கிறார்கள். இவர்கள் சுயதொழில், சிறு மற்றும் கைவினை கைத்தொழில், விவசாய செயற்பாடு, பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி உதவிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவார்கள். நான் இவர்களை தொடர்பு கொண்டு கிராமத்திற்குப் பாரியதொரு வேலை திட்டத்தைச் செய்வேன். அண்மையில் காளான் வளர்ப்பு பயிற்சி மற்றும் சிற்றுண்டி தயாரித்தல் பயிற்சி ஒன்றினை பெண்களுக்கு வழங்கினேன். தலையணை தைக்கும் இயந்திரத்திற்கு பஞ்சியினைப் பெற்றுக் கொடுத்தல், மற்றும் தலையணைகளை வாங்குகின்றவர்களை அறிமுகப்படுத்தினேன். இதில் சுயத்தொழில் செய்கின்ற பெண்கள் வீட்டிலிருந்தவாறே நாளொன்றுக்கு ரூபா 500 உழைக்கிறார்கள். இவ்வாறான குடும்பங்களில் உள்ளவர்கள் எனக்கு வாக்களித்தார்கள் என்பது நம்பிக்கையாகும்’’.

கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரதிநிதிகளில் 6 பேர் இதற்குச் சமமான அனுபவங்களை விபரித்தார்கள். யட்டிநுவர பெண் பிரதிநிதியொருவர் குறிப்பிட்டதாவது,

‘‘நான் கிராமிய சக்தி அமைப்பினை உருவாக்கினேன். இதன் மூலம் கிராம பெண்களுக்கு பல்வேறு உணவுகளைத் தயாரிப்பதற்கும் பயிற்சிகளைக் கொடுத்தேன். இதற்கு மாகாண சபை பெண் உறுப்பினர் ஒருவர் அதிக உதவிகளைச் செய்தார். வளங்களைத் தேடிக் கொண்டு சமையலறைப் பொருட்கள், கன்றுகள், பசளைகள் போன்றவற்றை பகிர்ந்தளித்தேன். வறுமை, வயது முதிர்ந்த பெண்கள் 400 பேருக்கு ஒய்வூதிய கொடுப்பனவுகளை வழங்க ஆரம்பித்தேன்...... இவ்வாறே கிராமத்தில் பொது வேலை எல்லாவற்றிலும் பங்குபற்றினேன்..... வேட்புமனு பிரச்சினை காரணமாக இறுதி நேரத்தில் கட்சி மாறவேண்டி ஏற்பட்டாலும் தேர்தலில் வெற்றி பெற மக்களின் இதயங்களை நான் வென்றிருந்தமையே காரணமாகும்’’ என்றார்.

கண்டி மாவட்ட உதவி நகரசபை தலைவியாலும் அக்கருத்து உறுதிபடுத்தப்பட்டது. ‘‘நான் நீண்ட காலமாக செய்த சமூக நலன்புரி செயற்பாடுகளினாலேயே தலைமைத்துவத்தை கட்டியெழுப்பிக்

கொண்டேன். சிறிய தையல் தொழிற்சாலையொன்றை நடத்திவருகிறேன். இதில் பெண்பிள்ளைகள் 10 பேருக்கு தொழில்வாய்ப்பினை வழங்கி அக்குடும்ப உறுப்பினர்களுக்கும் நான் உதவி செய்கிறேன். விசேடமாக பிள்ளைகளுக்கிடையே பாடசாலை உபகரணங்களை பகிர்ந்தளிப்பேன். நான் தொடர்ந்தும் பொது பிரச்சினைகள் பற்றி தேடிப்பார்ப்பேன். உதாரணமாக எமது சிறிய நகரத்தின் குப்பை பிரச்சினை தொடர்பாக ஒருவரும் கவனத்தில் எடுக்கவில்லை. எனினும் நான் என்னோடு உள்ளவர்களுடன் ஒன்றிணைந்து சிரமதானத்தின் மூலம் குப்பை போடும் இடத்தை சுத்தம் செய்தேன்....... இன்று அவ்விடம் முச்சக்கர வண்டிகள் நிறுத்துமிடமாகும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மக்களின் விருப்பத்தினை பெற்றுக் கொண்டுள்ளேன்''.

**தேசிய மற்றும் பிரதேசமட்ட கட்சி தலைமைகளுடன் நெருங்கிய தொடர்புகளை பேணுதல்**

பதிலளிப்பாளர்கள் பெரும்பாலானோரின் கருத்துக்கு ஏற்ப வெற்றி பெற்ற வேட்பாளர்கள், பெண் வேட்பாளர்களில் 99% மானவர்களுக்கு அழுத்தம் கொடுத்த பிரதான காரணியாக அமைந்தது, கட்சி தலைமைகளுடனான நெருங்கிய தொடர்புகளை பேணுகின்றமையாகும். புதிய பிரதிநிதியொருவர் (கண்டி) குறிப்பிட்டதாவது, ''கட்சியின் தேசிய மட்ட தலைமைத்துவத்தை விட தொகுதியமைப்பாளர் முக்கியமான, மிகவும் அதிகாரமிக்கவர், இதனால் மனசாட்சிக்கு விரோதமாக அல்லது அவருக்கு பக்கசார்பாக இருத்தல் வேண்டும். இல்லையேல் அவரால் தலைமைத்துவத்திற்கு பல்வேறு தகவல்களை (பொய்கள்) வழங்கி எங்களை வெட்டி விட முடியும்....... எமது அமைப்பாளர் ஆரம்பத்தில் எனக்கு பிடிக்காதவர். செய்ய முடியாத வேலைகளை கொடுத்து என்னை அவர் முடியாதவராக காட்ட முயற்சித்தார். உதாரணமாக எங்கள் கட்சியின் தலைவர் ஒருவரின் ஞாபகார்த்த நிகழ்வொன்றுக்கு 100 பௌத்த குருமாருக்கு தானமொன்றினை செய்யும் வேலையை என்னிடம் ஒப்படைத்தார். எனினும் எந்த உதவியையும் வழங்கவில்லை. ஆனாலும் பிரதேச மக்களின் உதவியுடன் அச்செயற்பாட்டை நான் மிகச் சிறப்பாக செய்தேன். பல்வேறு உபாயங்களினூடாக அவரின் மனதை வென்றேன்..... தொகுதியமைப்பாளரின் மனதை வெல்லாமல் யாருடனும் வேலை செய்து அர்த்தமில்லை என்றார்.

இந்த உபாயமுறைகள் ஆண்களுக்கு மிகவும் சாதகமான வகையில் தாக்கம் செலுத்துவதாகவும், இவ்வாறான தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கு சில நபர்கள் ஒழுக்கத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கும் தூண்டப்படுகின்றனர் என்பதை கீழுள்ள கூற்று தெளிவுப்படுத்துகின்றது. பிரதான கட்சியொன்றின் ஆதரவாளர் ஒருவர் இலக்கு குழு கலந்துரையாடலில் குறிப்பிட்டதாவது ‘‘இங்கு பிரதேச சபைக்கு பிரதான கட்சியில் போட்டியிட்டு இரண்டாம் இடத்தைப் பெற்ற இளைஞருக்கு அரசியல் பின்புலம் இல்லை. எனினும் இவர் ஒரு காலத்தில் அமைச்சராகவிருந்த அரசியல்வாதியின் மகன்மார்களுடன் (பாராளுமன்றம் மற்றும் மகாணசபை உறுப்பினர்கள்) நெருக்கமான தொடர்புகளை பேணுகின்றார். கடந்தமுறை மாகாணசபைத் தேர்தலில் இவரின் மகன்மார்களுடன் எதிர்கட்சி குழுவொன்றுக்கு அடித்தமையால் பெரிய பிரச்சினை ஏற்பட்டது. அந்த நேரத்தில் மகன்மார்களுக்காக விசாரனைக்கு இந்த இளைஞர் மற்றும் அவரின் சகோதரர்களும் நீதிமன்றம் சென்றார்கள். இதனால் பொலிஸ் மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் இந்த மகன்மார்கள் தப்பித்தனர். இந்த இளைஞருக்கு உள்ளூராட்சி தேர்தலில் டிக்கட் ஒன்று கிடைத்தது. இவர்களின் ஆசிர்வாதத்துடனும் ஆதரவோடும் அதிக வாக்குகளை இவர் பெற்றுக்கொண்டார்’’ என்றார்.

பிரதேச சபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுனர் பிரதிநிதி ஒருவரும் இதற்கு சமமான நிலையினை விபரித்தார். ‘‘நான் எங்களின் தொகுதி அமைப்பாளருக்கு 11 வருடங்கள் தொடர்ந்து உதவி செய்கின்றேன். இவருக்கு மாகாண சபை மற்றும் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற பாரிய ஒத்துழைப்புகளை பல்வேறு வகையில் கொடுத்தேன். உண்மையில் அவரின் சாரதி, பாதுகாவலர், இணைப்பு உத்தியோகத்தர், அமைப்பாளர், ஊடக பரப்புரையாளர் என்றவகையில் மட்டுமின்றி நட்டஈட்டாளராகவும் நான் சேவை செய்தேன். அவரை வெற்றிக்கொள்வது கடினமானதும் பொறுமையுடனும் செய்யப்பட வேண்டிய வேலையாகும்’’. 2011 இல் மத்திய மாகாணத்திலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் தெரிவான பெண்வேட்பாளர் ஒருவர் தவிர ஏனைய ஒன்பது பேருக்கும் தொகுதி அமைப்பாளர் மற்றும் கட்சியின் மேல்மட்ட தலைவர்களின் ஆதரவு கிடைத்திருந்தது. வேட்பாளர் மூவரின் குடும்பங்களின் உறவினர்கள் அல்லது நெருங்கிய தொடர்புகள் காரணமாக கட்சி தலைமைத்துவத்தினால்

அதிகமான ஒத்துழைப்புகள் கிடைத்தன. இன்னும் ஐவர் அவர்களின் சமூக செயற்பாடுகள் ஊடாக கட்சித் தலைமையுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். மற்றைய வேட்பாளர் அவரின் குழுவின் சில ஆண்களின் அசாதாரணத்திற்கு உட்பட்டபோது கட்சியின் உயர் மட்டத் தலைமைத்துவம் உதவி வழங்கியது. தொகுதி அமைப்பாளரின் எதிர்ப்பினால் வேட்புமனு கிடைக்காத பெண்வேட்பாளர், வேறு கட்சியினூடாக வேட்புமனுவினை பெற்றுக்கொண்டாலும், இவர் முன்பு தொடர்பு வைத்திருந்த சில தலைவர்களின் உதவி இவருக்கு கிடைத்தது. அத்தோடு இவரை சூழ சிறந்த வாக்குவங்கியொன்று உண்டு என்பதை விளங்கிக் கொண்டு வேட்புமனு வழங்கிய கட்சியின் தேசிய மட்ட தலைமைத்துவமும் இவரின் பிரச்சார கூட்டங்களுக்கு பங்குபற்றி இவருக்கு ஆதரவை வழங்கினார்.

இவ்வகையில் வெற்றிபெற்ற பிரதிநிதிகளுக்கு ஆண் - பெண் வேறுபாடின்றி, தொகுதி அமைப்பாளர் மற்றும் கட்சியின் மேல்மட்ட தலைமைத்துவத்தின் ஒத்துழைப்பு, விருப்பம் மற்றும் ஆசிர்வாதம் கிடைத்தமை தேர்தலை வெற்றிகொள்வதற்கு உண்மையில் பங்காற்றியுள்ளது. வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பெரும்பாலான பெண்கள் மற்றும் ஆண்கள் போலவே தோல்வியடைந்தவர்களுக்கும் தொகுதி அமைப்பாளரின் அழுத்தம் அல்லது விருப்பமின்மை நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது.

- **தேர்தல் பிரச்சாரங்களை முறையாக திட்டமிடல் மற்றும் உபாய ரீதியாக நடைமுறைப்படுத்தல்**

தேர்தலில் வெற்றிபெற்ற அனைத்து (ஆண் - பெண்) பதிலளிப்பாளர்களும் குறிப்பிட்டதாவது பிரச்சார செயற்பாடுகள் மற்றும் உபாய முறையில் திட்டமிடல் என்பன தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அத்தியவசியமாகும். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட அனைவருமே நீண்டகாலமாக நிதியினை சேர்த்தல், போஸ்டர் மற்றும் துண்டுபிரசுர தயாரிப்பு, மக்கள் தொடர்புகளை வலுவாக்குதல் போன்றவற்றின் ஊடாக தேர்தலுக்கு முன்னரான தயார்படுத்தலில் ஈடுபட்டனர் என குறிப்பிட்டனர். சிலர் தேர்தலுக்கு முன்னர் முறையற்ற ஆய்வுகளின் மூலம் பிரதேசத்தின் பிரச்சினையை அறிந்துகொண்டு, அதனை தீர்த்துக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கி துண்டுபிரசுரம் அல்லது கொள்கை கூற்றுக்களைத் தயாரித்து வைத்திருந்தனர். சில பிரதிநிதிகள் அவர்களின் தொகுதியில்,

அவர்களுக்கு சார்பான பிரதேசம் என நினைக்கும் பிரதேசங்களை அறிந்துகொண்டு பிரச்சார செயற்பாடுகளுக்காக, நெருங்கிய நண்பர்களுக்கிடையில் அவற்றைப் பகிர்ந்தளிப்பதற்குத் திட்டங்களை உருவாக்கி வைத்திருந்தனர். வெற்றிபெற்ற பிரதேசசபை உறுப்பினர்கள் போலவே பெண் உறுப்பினர்களும் பல்வேறு வகையில் முறையான திட்டமிடலுக்குகேற்ப பிரச்சார செயற்பாடுகளைச் செய்திருந்தனர்.

ஒரு எதிர்கட்சி தலைவர் குறிப்பிட்டதாவது "நான் சில மாதங்களுக்கு முன்னர் எனது தொகுதியின் வரைபடம் ஒன்றை வரைந்து, எனக்கு சார்பான / எதிரான குடும்பங்களை அறிந்து கொண்டேன். கூட்டங்களை நடத்த வேண்டிய இடங்கள் மற்றும் அதற்கான பொறுப்புகளை வழங்கவேண்டிய நபர்களையும் அறிந்து கொண்டேன். அப்பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகளை மக்களிடமே கேட்டு தெரிந்துகொண்டு அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் துண்டுபிரசுரம் ஒன்றைத் தயாரித்தேன். வீடு வீடாகச் சென்று, இது தொடர்பில் வாக்காளர்களை மிகவும் இலகுவாகவும், நன்றாகவும் விளங்கப்படுத்தினேன். இதனால் எனக்கு அவர்களின் நம்பிக்கையை அதிகமாக பெற்றுக்கொள்ள முடிந்தது" என்றார்.

இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட, தேர்தலில் (2011) வெற்றிப் பெற்ற அனைத்து பெண்களும் முறையான பிரச்சாரத்தின் முக்கியத்துவம் குறித்து அவதானம் செலுத்தியிருந்தனர். உப நகரசபை தலைவி ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இன்று இலங்கையின் நிலைமைக்கு ஏற்ப, வாக்குகளை பெற்றுகொள்ள வேண்டுமாயின் கவர்ச்சிகரமான பிரச்சார செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதும், நான் மிகவும் கவர்ச்சிகரமான சொற்களைப் பயன்படுத்தி துண்டுபிரசுரம் ஒன்றை தயாரித்தேன். போஸ்டர் மற்றும் கட்டவுட்களிலும் கவர்ச்சிகரமான, அழகான படங்களைத் தேர்ந்தெடுத்தேன். தேர்தல் செயற்பாடுகளுக்கு நேர்மையான, சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நபர்களையே பயன்படுத்தினேன். வீடுகளுக்குச் சென்று ஒழுக்கமாக நடந்துக்கொள்ள அவர்களுக்கு ஆலோசனை வழங்கினேன். உதவி செய்தவர்களுக்கு சிறப்பாக உணவு வழங்கினேன். இதற்காக நான் பல ஆண்டுகளாக எனது வருமானத்தில் நிதியினை சேகரித்து வைத்துகொண்டேன்".

பிரச்சார நடவடிக்கைகளில் சில ஆண் பிரதிநிதிகள், பெண்கள் பயன்படுத்தாத உபாய முறைகளையும் பயன்படுத்தியிருந்தனர். முஸ்லிம் பிரதிநிதிகள் மூவர் குறிப்பிட்டதாவது அவர்கள் ஒரே தொகுதியில் வேட்பாளர்கள் மூவர் இணைந்து, பிரச்சாரம் செய்ததோடு மூவருக்கும் 3 விருப்பு வாக்குகளை வழங்கும்படியும் வாக்காளர்களை கேட்டுக் கொண்டோம் என்றாகும். இதனால் அவர்களுக்கு பிரச்சார செயற்பாடுகளை செய்ய இலகுவாக இருந்ததாகவும், இதனால் செலவுகளும் குறைவானது என்றும் குறிப்பிட்டனர். இன்னும் சில முஸ்லிம் பிரதிநிதிகள் தமது இன அடையாளத்தை அவதானம் செலுத்தி அந்த இனத்துக்கு உரித்தான வாக்காளர்களிடம் வாக்குகளை பெற்றுகொண்டதாகவும் குறிப்பிட்டனர். இதன்போது “எங்கள் இனத்தின் பிரச்சினைகளைத் தெரிந்தவர்கள் நாங்களே. அவற்றை பிரதிநிதித்துவப்படுத்த எங்களில் ஒருவரையே தெரிவுசெய்து அனுப்புங்கள்” என வாக்காளர்களைத் தெளிவுப்படுத்தியதாக இவர் குறிப்பிட்டார்.

பெரும்பாலான வேட்பாளர்கள் மற்றும் சில பெண் வேட்பாளர்களும் எந்தவொரு அழைப்புமே இல்லாமல் கேள்விப்பட்ட எந்தவொரு நிகழ்வுக்கும் பங்குபற்றலை தேர்தல் உபாயமாக பயன்படுத்தியதாகக் குறிப்பிட்டனர். வேட்பாளர்கள் சிலரால் வாக்காளரின் கருணையினை பெற்றுக்கொள்வதற்காக உபாயரீதியாக செயற்பட்ட விதம் குறித்து விபரித்தனர். இதன்போது ஒரு வேட்பாளர் குறிப்பிட்டதாவது “நானே எனது போஸ்டர்களில், ஆதரவாளர்களுடாக தார் பூசிக்கொண்டேன். பின்னர் நான் வாக்காளர்களிடம் சொன்னேன் நான் அமைதியானவன். கலக வேலைகளை செய்ய நான் போகமாட்டேன். யார் வேண்டுமானாலும் தார் அடித்துக் கொள்ளட்டும். இந்த உபாய முறையால் சில வாக்காளர்கள் என்பக்கம் வந்தனர்” என்றாகும்.

இதேபோன்றதொரு உபாய முறையொன்று பற்றி இன்னுமொரு பிரதிநிதி பின்வருமாறு குறிப்பிட்டார். “எனது ஆதரவாளர்களையேப் பயன்படுத்தி என்னைப்பற்றி பொய்யான (நல்ல) விடயங்களைப் பரப்பினேன். இதனோடு எதிர்தரப்பு வேட்பாளர்கள் பற்றி, அவர்கள் ஊழல் மிக்கவர்கள். பெண்களுடன் முறையற்ற தொடர்புகளை வைத்திருக்கின்றனர் போன்ற பொய்யான விடயங்களைப் பரப்பினேன்”. விசேடமாக இந்த ஒழுக்க கேடான உபாய முறையினை சில ஆண்கள் பெண்களைத் தோற்கடிப்பதற்கும் பயன்படுத்தியிருந்தனர்.

ஆய்வுக்கு உட்பட்ட தேர்தல் வேட்பாளர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக அமைப்புத் தலைவர்களில் பெரும்பாலானோர் போலவே சில வேட்பாளர்களும் குறிப்பிட்டதாவது பெரும்பாலான ஆண்கள், அச்சுறுத்தல் செய்தல், பயமுறுத்தல், வேறு வேட்பாளர்களின் போஸ்டர்கள் மற்றும் கட்டவுட்களை உடைத்தெறிதல், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், நிதி மற்றும் பொருள் உதவிகள் வழங்கல் மற்றும் மதுபானங்களை பெற்றுக்கொடுத்தல் என்பன கூடுதலான வாக்குகளைப் பெற்றுகொள்ள மிகவும் சிறந்த உபாய முறையாக பயன்படுத்தியதாகவும், மேலும், விழாக்கள் போன்றவற்றுக்கு வலுக்கட்டாயமாக நுழைந்து நேரடி உரையொன்றுக்கு வாய்ப்பொன்றினை பெற்றுக்கொண்டு இதன்மூலம் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளத் தூ ண்டப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். ஒரு சமூகத் தலைவர் குறிப்பிட்ட கருத்தில் இதனை உறுதிப்படுத்த முடிகிறது. ‘‘எங்கள் பெண்கள் சங்க கூட்டங்களுக்கு, பிரதேசசபை வேட்பாளர்களின் குழுவொன்றுடன் கட்சி தலைவரொருவரும் எவ்வித அழைப்பும் இல்லாமல் உட்புகுந்தார். அழைப்பாளர்களின் ஆசனங்களுக்கு அண்மையில் இவர்களும் அமர்ந்தனர். வலுக்காட்டயமான முறையில் விளக்கேற்றினர். கேட்டு உரையொன்றினைப் பெற்று வாக்குகளைக் கேட்டார்.... எமது வேலைத்திட்டம் முடியும் முன்னர், தேநீருக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உணவுகளில் பகுதியொன்றினை பையில் இட்டுக்கொண்டு.... இந்த நபர்கள் தலைவருடன் இன்னும் 12 கூட்டங்களுக்கு செல்ல வேண்டும் என கூறிச் சென்றனர்’’ இவ்வாறு ஒழுக்கத்திற்கு எதிரான உபாயமுறைகளையும் சில ஆண்கள் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தியிருந்தனர். எனினும் இவ்வாறான உபாயமுறைகளைப் வெற்றிபெற்ற எந்தவொரு பெண் வேட்பாளரும் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படவில்லை.

பதிலளிப்பாளர்கள் பெரும்பாலானவர்கள் குறிப்பிட்டதாவது வேட்பாளர்களுள் அதிகமானவர்கள் உள்ளூராட்சி மட்டங்களிலானாலும் பாரியளவிலான நிதியினை பிரச்சார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தியிருந்தனர். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சில வேட்பாளர்கள் 20 – 22 லட்சம், இன்னும் சிலர் ரூபா 10, 15, 5 லட்சம் வரையில் செலவு செய்திருந்தனர். எனினும் ஒரே ஒரு பெண் வேட்பாளர் மட்டுமே ரூபா 10 லட்சம் வரை செலவு செய்திருந்தார். ஏனைய அனைத்து

வேட்பாளர்களும் சிறிய நிதி உதவி, பொருட்கள் அன்பளிப்பு, உறவினர்கள் மற்றும் நெருக்கமானவர்களின் செலவிடல் மூலமாக தேர்தல் பிரச்சார செயற்பாடுகளைச் செய்ததாகக் குறிப்பிட்டனர்.

ஒரு வேட்பாளர் அவருடைய செலவுகளை இவ்வாறு குறிப்பிட்டார் "நான் ரூபா 20 – 22 லட்சம் வரை தேர்தலுக்குச் செலவழித்தேன். முச்சக்கரவண்டி இரண்டு மற்றும் வேறு வாகனங்கள் 2 இல் போஸ்டர்கள் ஒட்டி அழகுபடுத்த ரூபா 4 லட்சம் சென்றது. இப்பிரதேச வாக்காளர்களுக்கிடையில் மூக்கு கண்ணாடி, பாடசாலை உபகரணங்கள், வீட்டுப்பாவனை பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளித்தேன். தினந்தோறும் 50 – 60 இரவு சாப்பாடு, குடி (மதுபானம்) வழங்க வேண்டியேற்பட்டது…. நான் வெளிநாட்டில் 4 வருடங்கள் வேலைசெய்து தேடிக்கொண்ட பணத்தில்தான் செலவு செய்தேன். சகோதரர்களும் உதவி செய்தார்கள்….. அவ்வாறில்லையேல் வாக்குகளை வெற்றிக்கொள்ள முடியாது" எனினும் ஒருவரைத் தவிர வேறெந்த வெற்றிபெற்ற பெண் வேட்பாளருக்கும் இவ்வாறாக செலவு செய்ய முடியவில்லை. இவர்கள் உறவினர்கள் அல்லது நெருக்கமானவர்களின் வாகனத்தில், சோறு பார்சல் சில, தேநீர், குடிபானம், சிற்றுண்டிகள் மற்றும் சிறிய பண உதவி போன்றவற்றை மட்டுமே பெற்றுக் கொண்டிருந்தனர். பெண் வேட்பாளர்கள் பிரதேச அரசியல் தலைவர்களின் சிறிய உதவிகளைப் பெற்று கொண்டு துண்டுப்பிரசுங்களை அச்சிடல் மற்றும் போக்குவரத்து செலவு போன்றவற்றைச் செய்திருந்தனர். இதனைத் தவிர சில ஆண்கள் போல ரூபா 20 – 22 லட்சம் வரை எந்த பெண் வேட்பாளரும் செலவு செய்ததாகக் குறிப்பிடப்படவில்லை.

வாக்குகளை வெற்றிகொண்ட வேட்பாளர்களில் அறுவர் கட்சி மாறுதலை உபாய முறையாக பயன்படுத்தியிருந்தனர். எனினும் வெற்றிபெற்ற பெண்களுக்கிடையில் வேட்புமனு கிடைக்காமையால் கட்சி மாறியது ஒரு பெண் வேட்பாளர் மட்டுமே. கட்சிமாறி தேர்தலில் வெற்றிபெற்ற பிரதேசசபை தலைவர் இருவர் குறிப்பிட்டதாவது "அரசியல்வாதிகள் கட்சி மாறினால் மக்கள் ஏசுகிறார்கள். எனினும் எங்களை காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாயின் சில சந்தர்ப்பங்களில் பயமின்றி எங்களால் அவ்வாறு செய்யவேண்டியுள்ளது. எங்களுக்கு சாதகமற்ற, பிரச்சித்தியற்ற, அதிகாரத்தைப் பயன்படுத்தி கிராமத்திற்கு

எதுவும் செய்ய முடியாத கட்சியில் இருந்து வேலையில்லை. இதற்காக மாற்று வழியொன்றினை தேடிக்கொள்ள வேண்டும்…. தேசியமட்ட தலைவர்களும் செய்வது இதனைத்தான்…. நாங்களும் நெகிழ்ச்சியானவர்களாக இருக்க வேண்டும். அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள திறமையாகுதல் / தந்திரமாகுதல் வேண்டும். இவ்வாறில்லாமல் அரசியல் செய்ய முடியாது'' என்றாகும்.

ஆண்கள் மட்டும் பயன்படுத்திய மற்றுமொரு உபாயமுறையாக அமைந்தது புதிய தொழில்நுட்ப முறையினை (கையடக்க தொலைப்பேசி, மின்னஞ்சல்) பயன்படுத்தி விசேடமாக இளம் வாக்காளர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளலாகும். மேலும், வேட்பாளர்களில் பெரும்பாலானவர்கள் தமது போஸ்டர் மற்றும் கட்டவுட்களை பாதுகாத்துக்கொள்வதற்கும் மற்றும் தேர்தல் மத்திய நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களின் செயற்பாடுகளைப் பரிசோதனைச் செய்ய மிகவும் நம்பிக்கைக்குரியவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தனர். எனினும் பெரும்பாலான பெண்வேட்பாளர்கள் வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களுக்குத் தமது பிரதிநிதியொருவரை நியமித்திருக்கவில்லை. இது தொடர்பான குறைவான தெளிவு மற்றும் குறைவான அனுபவங்களே இதற்கு காரணம் என இவர்களே குறிப்பிட்டிருந்தனர். சில வேட்பாளர்கள் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களில், பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்வோருடன் உடன்பாட்டிற்கு வந்து, பொலிஸ் உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்தயாருடனும், தமக்கு கிடைத்த வாக்குகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முறையான வேலைத்திட்டங்களையும் பயன்படுத்தியிருந்தனர். எனினும் தேர்தலில் போட்டியிட்ட பெரும்பாலான பெண்வேட்பாளர்கள் இது தொடர்பில் சரியான அவதானத்தினை செலுத்தியிருக்கவில்லை. எனினும் வெற்றிபெற்ற பெண்வேட்பாளர்களின் பெரும்பாலான குடும்பங்களின் ஆண் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இச்செயற்பாடுகளில் இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். தேர்தல்களில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிபெற்ற ஒரு பெண்வேட்பாளர் அவரது இவ்வாறானதொரு உபாயமுறையினை குறிப்பிட்டார். ''எனது கணவருடன் இணைந்து பாடசாலை சென்ற, தற்போது பொலிசில் தொழில்புரியும் உத்தியோகத்தர் ஒருவருக்கு நான் இந்நிலை தொடர்பாக தெரிவித்து வாக்குகளைப் பாதுகாத்து தரும்படி கேட்டிருந்தேன்…. எனக்கு அதிக வாக்குகள் கிடைக்கும் என

எதிர்பார்த்த மத்திய நிலையங்களுக்கு எனது சகோதரிகள் மற்றும் ஆதரவாளர்களை நிறுத்தி வைத்தேன்''.

அவ்வகையில் 2011 தேர்தலில் வெற்றிபெற்ற ஆண் - பெண் இருசாராரும் சமமான உபாயமுறைகள் பலவற்றை பயன்படுத்தியிருந்தனர். இவர்களின் உபாயமுறைகளில் உள்ள மாற்றங்களுக்கு கலாசார சாதனங்களும் ஓரளவுக்கு தாக்கம் செலுத்தியுள்ளன. இலங்கையின் கலாசாரத்தினுள் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்கள் வன்முறை மற்றும் மதுபான பாவனை என்பவற்றுக்குத் தூண்டப்படுதல் குறைவாகும். இந்த குணாம்சம் அரசியல் உபாயமுறையின் மாற்றங்களில் கண்டுகொள்ள முடிகிறது. தேர்தலில் வெற்றிபெற்ற பெண்களில் ஒரு இளம் பெண்வேட்பாளர் தவிர ஏனைய அனைவரும் நீண்டகாலம் சமூக சேவையில் ஈடுபட்டு இதன்மூலம் கட்சி அரசியலுக்கு நுழைந்துள்ளனர். இவர்கள் நலன்புரி மற்றும் ஏனைய பொது செயற்பாடுகளுடாக மக்களின் நம்பிக்கையினை பெற்றிருந்தனர். இளம் வேட்பாளர்களுக்கு (பெண் பட்டதாரி) இந்த சாதகத்தை குடும்பத்தின் தந்தை (பிரதான கட்சியின் ஆதரவாளர்), சகோதரர் மற்றும் சகோதரிகள் (சமூர்த்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்) சமூக செயற்பாடுகளில் அவ்வகையிலேயே கிடைக்கப் பெற்றிருந்தனர். வெற்றிபெற்ற அனைத்து பெண்களுக்கும் ஒத்துழைப்பும் குறைவின்றி கிடைத்தது. பயிற்சி பெண்வேட்பாளர் ஒருவர் இது தொடர்பில் மிகவும் ஆழமாக குறிப்பிட்ட கருத்தின் மூலம் இது மிகவும் தெளிவாகின்றது. ''எனது சமூக செயற்பாடுகளுக்கும் தேர்தல் செயற்பாடுகளுக்கும், சகோதரன், அவரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் அதிவிசேடமான ஒத்துழைப்பினை வழங்கினர். அது அளவிடப்பட முடியாததாகும். எல்லா கூட்டங்களுக்கும் அவரின் வீட்டையே நான் பயன்படுத்தினேன். அதனை ஏற்பாடு செய்ததும், உணவு. தண்ணீர் வழங்கியதும் அவர்களே. நான் கட்சி மாறியதால் எனக்கு அச்சுறுத்தல் வந்தது. இவர்கள் எனக்கும், எனது போஸ்டர் போன்றவற்றுக்கும் பாதுகாப்பினை வழங்கினர். இளம் விவகாரத்தை பெற்றவராக.... எங்கள் அரசியல் எதிராலிகளின் அச்சுறுத்தலால் எனக்கு பல்வேறு பிரச்சினைகள் இருந்தது. இந்த அனைத்து சவால்களுக்கும் நான் எனது சிறிய மகளுடன் முகங்கொடுத்த போதும், எனது குடும்ப உறுப்பினர்கள் எனக்கு பாரியளவில் சேவை செய்தனர். தைரியத்தையும் பெற்றுக்கொடுத்தனர்''.

இதற்கு இணையானதொரு கருத்தினை மற்றுமொரு இளம் பெண் பிரதிநிதியொருவரும் எங்கள் முன்னிலையில் முன்வைத்தார். இவர் குறிப்பிட்டதாவது "நான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்தவுடன்…. இதற்கு முன்னர் அரசியலில் ஈடுபட்டிருக்கவில்லை. எனினும் எனது தந்தை பிரதான கட்சியொன்றின் செயற்பாட்டு ஆதரவாளர். அண்ணன் மற்றும் அக்காவும் கட்சியின் செயற்பாட்டாளர்கள்…. இதனால் இளைஞர் கோட்டாவின் கீழ் எனக்கு வேட்புமனு கிடைத்தது இதனாலேயே ஆகும். எனது அனைத்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளையும் இம்மூவருமே செய்தனர்…. இவர்களின் அரசியல் தொடர்புகள், தலைமைத்துவம், ஈடுபாடு மற்றும் தியாகம் இல்லையேல் நான் பிரதேசசபைக்கு தெரிவாகியிருக்க மாட்டேன்" என்றாகும்.

இதனடிப்படையில் 2011ம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலிள் மத்திய மாகாணத்தில் வெற்றிப்பெற்ற ஆண்-பெண் இரு சாராரும் தமது வெற்றிக்காக பயன்படுத்திய உபாயங்களுக்கிடையில் பெரியளவிலான வேறுபாடுகள் இல்லையென்பது இவ்வாய்வின் மூலம் தெளிவாகிறது.

## IV. 2015ம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலை வெற்றிக்கொள்வதற்காக பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய உபாயங்கள்

ஆய்வில் பங்குப்பற்றி பதிலளித்தோரில் 91%மானவர்களின் கருத்துப்படி 2015ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாக, பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாக **கோட்டாவினைப் பெற்றுக்கொள்ளும் பிரசாரங்களை சக்திமயப்படுத்தி அதற்கென முறையான அமைப்புகளை ஏற்படுத்துவது அவசியமாகும்** என்பதாகும். உள்ளூராட்சி கட்டளைச்சட்ட சீர்திருத்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் மீண்டும் முன்வைக்கக்கூடிய ஆற்றலைக்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி, பிரதமர், எதிர்கட்சி தலைவர், ஏனைய அரசியல் கட்சி தலைவர்கள், அதனுடன் தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை அமைச்சர்களை சந்தித்து கோட்டா முறை தொடர்பாக அவர்களுக்கு தெளிவுப்படுத்தி அந்த சட்டத்தில் பங்கு முறையினை உள்ளடக்குமாறு அழுத்தம் கொடுத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை ஆண்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், இளைஞர் அமைப்புகள், ஏனைய சமூக அமைப்புக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு மேற்கொள்ள வேண்டும் என்பது பதிலளிப்போரின் ஆலோசனையாகும். WPPG அமைப்பு மற்றும் மத்திய மாகாணத்தின் பெண்கள் அமைப்பு ஆகியன இந்நடவடிக்கையின் போது பிரதான வகிபங்கினை ஏற்க வேண்டும் என பங்குபற்றுனர்கள் அநேகமானவர்கள் கேட்டுக்கொண்டனர். ஒரு பிரதேச சபை தலைவர் (பாததும்பர) இவ்வாறு குறிப்பிட்டார் “ இலங்கைப் பெண்கள் இந்த பிரதிநிதித்துவப் பிரச்சினை தொடர்பாக சரியான அவதானத்தை செழுத்தாமை பெறும் தவறாகும், அவர்கள் இது தொடர்பாக இதனைவிடவும் உணர்வுடன் செயற்பட வேண்டும். ஆண்களை ஒன்றிணைத்து பங்குமுறையினை கேட்டு போராட வேண்டும்….. அது அவர்களின் உரிமையாகும். அது தொடர்பாக அழுத்தம் கொடுத்தல், ஆரம்பித்தல் நீங்களே’’.

பதிலளிப்பாளர்களில் பெரும்பாலானோர் முன்வைத்த மற்றுமொரு ஆலோசனையாக அமைந்தது **பெண் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம் மற்றும் பங்கு முறைமை தொடர்பில் பெரும்பாலான அரசியல்வாதிகளைப் போலவே பொது மக்களுக்கும் போதுமானளவு தெளிவு காணப்படாமையால் அவர்களை தெளிவுப்படுத்த வேண்டும் என்பதாகும்.** ஒரு ஊடகவியலாளர் குறிப்பிட்டதாவது “பெண் பிரதிநிதித்துவ பிரச்சினை தொடர்பாக காணப்படும் கருத்தியலில் இன்னும் ஆய்வு செய்கின்றவர்கள் மற்றும் பெண் செயற்பாட்டாளர்களுக்கிடையில் மட்டுப்படுத்தப்பட்டதாகும். எனினும் சமூகத்தில் மேல் இருந்து கீழ்நிலை வரையில் எல்லாப்பிரிவினருக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்தல் அத்தியவசியமானதாகும்…. இதன் பின்னர் பங்கொன்றை கேட்பதற்கு இவர்களை தூண்டுவது இலகுவாகும்’’ என்றாகும்.

மற்றுமொரு சமூக செயற்பாட்டாளர் குறிப்பிட்டதாவது ‘‘எங்கள் நாட்டு தேர்தல்களுக்கு பொரும்பாலும் வேட்புமனு கிடைப்பது, கசிப்பு முதலாளிகளுக்கு, குடு காரர்களுக்கு, இல்லையேல் காடையர்களுக்கு….. சமூகத்தின் அக்கறையோடு வேலை செய்யும் பெண்கள் இந்நாட்டில் எவ்வளவு இருக்கின்றார்கள்? உதாரணமாக எடுத்துக்கொண்டால் யுத்தகாலத்தில் பெண்கள் எந்தளவுக்கு தியாகம் செய்தார்கள்? எமது நாட்டின் ஜனாதிபதிகூட இதனை விளங்கிக் கொள்ளவில்லை.

பெண்கள், சமூக பிரச்சினைகள், பிள்ளைகளினதும் பெண்களின் பிரச்சினைகளுக்கு மிகவும் அக்கறையானவர்கள். விசேடமாக உள்ளூ ராட்சி நிறுவனங்களில் அதிகமாக பிரதிநிதித்துவம் செய்ய வேண்டியது அவர்களே….. இவ்விடயத்தை கட்சிகளுக்கு முன்வைத்து இதன்மூலம் பெண்களுக்கு அதிகரித்த வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ள நாங்கள் பல்வேறு தரப்பினரையும் ஒன்றிணைத்துக்கொண்டு ஒழுங்கமைய வேண்டும்'' என்றாகும்.

இவ்வாறு ஒழுங்கமைந்து அரசியல் கட்சி அங்கத்தவர்களுடன் இணைந்து கட்சிகளுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் சிறந்ததொரு பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள முடியும் என்பது பெரும்பாலானோரின் கருத்தாக அமைந்தது. கட்சிகளின் பெண் செயற்பாட்டாளர்கள், பெண் அங்கத்தவர்களுடன் ஒன்றிணைந்து கட்சியின் உத்தியோக பதவிகளில் போலவே வேட்புமனுக்களிலும் ஏதாவது விகிதாசாரத்தை பெண்களுக்காக ஒதுக்குவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இவர்கள் யோசனை தெரிவித்தனர். கட்சிகளின் பெண் அங்கத்தவர்களுக்கு, இதன் உள்ளக அமைப்பில் சிற்சில மாற்றங்களைச் செய்துகொள்வதற்கான அச்சுறுத்தல், பந்தம் பிடித்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அதிக அழுத்தத்தை கொடுக்க முடியும் என்றும், இதனை பெண்கள் இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை என்றும், இதனூடாக தெளிவான பெண் செயற்பாட்டாளர்களாக இருக்கவேண்டும் என்றும் பதிலளிப்பாளர்களில் பெரும்பாலானோர் குறிப்பிட்டனர்.

2011 உள்;ராட்சி தேர்தலில் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பெண்களை ஒன்றிணைத்து, அவர்கள் ஊடாக இந்த சமூகப் பிரச்சினையை, முதலில் அரசியல் கட்சிகளுக்கும், பின்னர் அரசுக்கும் அனுப்பவேண்டும் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டது. பிரத்திபலிப்பாளர்களில் அதிகமானோர் குறிப்பிட்டதாவது இது பெண்கள் தொடர்பான பிரச்சினை மட்டுமல்ல சமூக மற்றும் அரசியல் பிரச்சினை என்பதை நாட்டிற்கு தெரிவிக்க வேண்டும் என்றாகும். பெண்களின் பிரதிநிதித்துவத்தின் ஊடாக உள்ளூராட்சி செயற்பாடுகளை மேலும் சமூகநேய நிலைக்குப் பரிமாற்றம் செய்ய முடியும் என்றும் நவீன சமூகத்தின் பாரிய பிரச்சினையாக உள்ள பெரும்பாலான அரசியல்வாதிகளின் ஊழல், பொது சொத்துக்களை நாசம் செய்தல், வன்முறைகள் மற்றும் அதிகாரத்தை முறையற்ற

விதத்தில் பயன்படுத்தல் என்பவற்றை ஓரளவுக்கேனும் மாற்றியமைக்க பெண்களில் அதிகமானோரை பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு தேர்ந்தனுப்புதல் வேண்டும் என்ற செய்தியை இவ்வாறான நிறுவனங்கள் மூலம் பரப்புரை செய்ய வேண்டும் எனவும் பரிந்துரை செய்தனர்.

எந்தவொரு அரசியல் கட்சியினதும் அங்கத்துவம் ஆண் - பெண் இருசாராரினராலும் ஆனது. இதனால் இதன் உத்தியோகப் பதவிகள் மற்றும் தேர்தல் வேட்புமனுக்கள் ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படுவது ஜனநாயகமானது அல்ல. இதனால் கட்சிகளின் ஜனநாயக சித்திரத்திற்காக கட்சியினாலேயே தமது கொள்கைளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை அவதானம் செலுத்துவது அத்தியாவசியமானது எனவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட பெண்களின் ஒன்றியம் ஒன்றினை கட்டியெழுப்பி குறிப்பிட்ட கட்சிகளுக்கு பொதுவில் சவால் விடுத்து அல்லது எதிர்காலத்தில் இவ்வாறான சமமற்ற மற்றும் அசாதாரண கொள்கைகளுக்கு எதிராக செயற்பட போவதாக அச்சுறுத்தல் கொடுப்பதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பது இங்கு கருத்து தெரிவித்தவர்களின் கருத்தாக அமைந்தது. பிரதான கட்சியொன்றின் ஆதரவாளர் ஒருவர் இது தொடர்பில் இவ்வாறானதொரு கருத்தினை வெளியிட்டார்.

“தொகுதி அமைப்பாளர் பெரும்பாலானோர், சமூகத்தில் முன்னிலைக்கு வந்து சுறுசுறுப்பாக செயற்படும் பெண்களுக்குப் பயம். சுனேத்ரா, மல்லிகா போன்ற பெண்களை இவ்வாறான தொகுதிகளில் போட்டியில் ஈடுபடுத்தினால் கட்டாயமாக வெற்றிபெறுவர். எனினும் இதனால் அமைப்பாளரின் கையாட்கள் தோற்றுவிடுவர் என்ற பயம்….. அந்த அசாதாரணம் பற்றி நீங்கள் கேள்வியெழுப்ப வேண்டும், ஏனெனில் கட்சி இவர்களின் தனிப்பட்ட சொத்து இல்லைதானே. கட்சி எங்கள் அனைவரினதும் தானே”.

- **சமூக, கலாசார செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்து தலைமைத்துவத்தை வளர்த்துக்கொள்ளல்.**

பதிலளிப்பாளர்களில் 73% ஆனோர் குறிப்பிட்டதாவது அரசியல் தலைமைத்துவத்திற்கு கால் பதிப்பதற்கு எதிர்பார்க்கும் பெண்கள் சமூக

செயற்பாடுகள் ஊடாக போசனைப்பெறல் கட்டாயமானதாகும். இதனால் சமூகத்தில் நம்பிக்கை மற்றும் சிறந்த வாக்கு வங்கியொன்றினை கட்டியெழுப்பவும், பொது செயற்பாடுகள் தொடர்பிலான அனுபவத்தைப் பெறவும் முடியும் என்பது பதிலளிப்பாளர்களின் கருத்தாக அமைந்தது. விசேடமாக பிரதேசசபை பிரதிநிதிகள் குறிப்பிட்டதாவது இவர்கள் நீண்டகாலம் சமூகசேவை செய்து தற்போதைய தலைமைத்துவத்தை கட்டியெழுப்பிக் கொண்டமையால் பெண்களும் திடசங்கட்பத்துடன் செயற்பட வேண்டும். ஒருமுறை வேட்புமனு நிராகரிக்கப்படும் போது கேலிக்கூத்தான நிலைக்கு ஆளாகி பொது செயற்பாடுகளில் இருந்து விலகிக் கொள்ளாமல், முன்னோக்கி அவற்றை செய்துகொண்டு செல்வதன் மூலம் பல்வேறு சாதகங்களை பெற்றுக்கொள்ள முடியும் என இவர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் பிரதேசசபை தலைவர் ஒருவர் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

“சில பெண்கள் எடுத்தவுடனே தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவ்வாறு வெற்றிபெற முடியாது. சமூகத்தினுள் தமது அடையாளம், ஏற்புடைமை மற்றும் தலைமைத்துவத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனை ஓர் இரவில் செய்ய முடியாது. நீண்ட காலம் சமூகத்துடன் ஒன்றாக இருக்கும்போது நீங்கள் சமூகத்திற்கு தேவையான நபராவீர்கள்.... அப்போது கட்சி தலைமை வேட்புமனு கொடுக்க உங்களை தேடி வரும். நீங்கள் அவர்களின் பின்னால் செல்ல வேண்டியதில்லை....”

- **கட்சி அரசியல் தலைமைகளுடன் பெண்கள் தற்போது நெருங்கிய தொடர்புகளை விருத்தி செய்துகொள்ளல்.**

ஆய்வுக்கு உட்பட்ட 74% ஆனவர்கள் குறிப்பிட்டதாவது, பெண்கள் பல்வேறு மட்டங்களிலுள்ள அரசியல் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதினூடாக அவர்களின் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அது அவர்களின் தேர்தல் வெற்றிக்கு நேரடியாக பங்களிக்கும் என்றாகும். அரசியல் தலைவர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளல், பெண்கள் அமைப்புகளால் ஏற்பாடு செய்கின்ற செயற்பாடுகளுக்கு அரசியல் தலைவர்களை அழைத்தல், கடிதம் மற்றும் தொலைபேசி ஊடாக தொடர்ந்து அவர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல் மற்றும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பின்பற்றல்

போன்றனவற்றினூடாகப் பெண்களுக்கு சாதாகமான நிலைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என இப்பிரதிபலிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். அரசியல்வாதிகளைத் தெரிந்துகொள்ளல், தமது தலைமைத்துவம் மற்றும் திறமைகளை தலைமைகளுக்கு பறைசாட்டுவது போலவே தலைமைகளுடன் காணப்படுகின்ற தொடர்புகளை மக்களுக்கு காட்டி அவர்களின் கவர்ச்சியினை வெற்றிகொள்ள முடியும் என தேர்தல்களில் வெற்றிபெற்ற பெரும்பாலான வேட்பாளர்கள், பெண் வேட்பாளர்களின் கருத்தாக அமைந்தது. விசேடமாக கட்சியின் சிரேஸ்ட தலைவர்களுடன் தொடர்புகளை உறுதிப்படுத்திக் கொள்ளல், அவர்களின் போதனைகளைப் பெற்றுக் கொள்ளவும், அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்குமென இப்பங்குபற்றாளர்கள் சுட்டிக் காட்டினர்.

கட்சி அரசியல் என்பது பெண்களுக்கு பொருத்தமற்ற ''மோசமான இயல்புடைய'' செயற்பாடு என பெரும்பாலும் பெண்களாலேயே கருதப்படுகிறது. எனினும் இந்த மனோநிலையிலிருந்து மீண்டு சிறந்த அரசியலுக்காக ஆண் - பெண் இருசாராரும் பங்குபற்ற வேண்டுமென்ற மனோநிலை பெண்கள் மத்தியிலேயே உருவாக்கபடவேண்டுமென இவர்கள் வலுவாக குறிப்பிட்டனர். விசேடமாக தேர்தலில் வெற்றிபெற்ற ஆண்கள், பிரதேச சபைகளின் விசேட கூட்டங்களில் பங்குபற்றுவதன் மூலம் அவர்கள் பெறுகின்ற அறிவு, பெண்களின் அரசியலை சாத்தியமாக்கிக் கொள்ள அழுத்தம் கொடுக்கின்றது என சுட்டிக்காட்டினர்.

பதிலளிப்பாளர்கள் இது தொடர்பில் குறிப்பிட்ட மற்றுமொரு கருத்தாவது, கட்சி தலைமைகளுடன் பெண்கள் தற்போதைய நிலையிலும் பார்க்க திடசங்கட்பம் மற்றும் வலுவாகத் தொடர்பு கொள்ள வேண்டும் என்றாகும். பெண்களுக்கு வேட்புமனுக்களை பெற்றுக் கொடுக்காவிட்டால் கட்சியிலிருந்து விலகுவேன் எனவும் மற்றும் வேறு கட்சிக்கு ஆதரவு அளிப்பேன் எனவும், குறிப்பிட்டு வலுவான குரலெழுப்புவதன் மூலம் அவர்களின் உரிமைகளை வெற்றிகொள்ள முடியுமென இவர்கள் அவதானம் செலுத்தினர். இக்கருத்தினை உறுதிப்படுத்தும் வகையில் நுவரெலியா பிரதேச பெண் செயற்பாட்டாளர் ஒருவர் குறிப்பிட்டதாவது,

“எங்கள் அமைப்பாளர் எல்லா தேர்தல்களிலும் பிரதான கட்சிக்கு ஆதரவளித்தார். எங்கள் தலைவியை பிரதேச சபைக்குப் போட்டியிடச் செய்தார். அவர் வெற்றிப் பெற்றார். அவரால் சமூகத்திற்கு சிறந்த வேலைகளைச் செய்து அவரால் முன்னேறிச் செல்ல முடியுமென்பது எங்களுக்கு விளங்கியது. கடந்த மாகாணசபைத் தேர்தலில் அவரை போட்டியிடச் செய்வதற்கு நாங்கள் தீர்மானித்தாலும் வேட்பு மனு கிடைக்காது என்று கேள்விப்பட்டோம்...... WPGG அமைப்பு தலைமைத்துவ பயிற்சி செயலமர்வுகளில் தீர்மானம் எடுப்பதில் தாக்கம் செலுத்தும் முறை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள் அதன் மூலம் கோரிக்கைகளை வெற்றிக் கொள்ளும் முறை பற்றி நாங்கள் தெளிவடைந்திருந்தோம்..... இதனால் நாங்கள் நுவரெலியா நகர மத்தியில் பெரியளவில் ஊர்வலம் சென்றோம். எங்கள் தலைவிக்கு வேட்புமனு பெற்று கொடுக்கவில்லையாயின் மண்ணெண்ணையை உடம்பில் ஊற்றிக் கொண்டு தீவைத்துக் கொள்வோம் என அச்சுறுத்தியதோடு எண்ணெய் கலன் ஒன்றையும் எடுத்துச் சென்றோம்...... இந்த செய்தி கொழும்புக்குச் சென்றதும்........ தலைவர்களின் தீர்மானங்களும் மாற்றமடைந்தன. எங்கள் தலைவிக்கு வாய்பொன்று கிடைத்தது. தேர்தலிலும் வெற்றி பெற்றார்” என்றாகும். பல்வேறு வகையில் கட்சி தலைமைகளுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் பெண்களுக்கு வேட்பு மனுக்களை போலவே பங்கு முறைமையையும் வெற்றிக் கொள்ள முடியும் என பதிலளிப்பாளர்களில் பெரும்பாலானோர் கருத்துரைத்தனர்.

- **முன்னாயத்தம் மற்றும் முறையான தேர்தல் பிரச்சார செயற்பாடுகளைத் தியாகத்துடன் நடைமுறைபடுத்தல்**

பதிலளிப்பாளர்களில் 74%மானவர்கள் பெண்களின் வெற்றிக்கு யோசனை செய்த பரிந்துரையானது திட்டமிடலுடன் கூடிய முறையானதும் கவர்ச்சிகரமான முறையில் அமைந்த தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். பெரும்பாலான ஆண்களை போலவே பெண்களும் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டனர். தற்போதைய இலங்கை அரசியல் முறையினுள் தேர்தல் வேட்பாளர்களின் தலைமைத்துவம், வாக்காளர்களை ஈர்த்துக் கொள்ளுவதற்கு இருக்கின்ற வாய்ப்புகள் குறித்து இவர்கள் கருத்து தெரிவித்தனர். இதன் மூலம் மிகச்சிறந்த பிரதிநிதி தெரிவு செய்யப்படாவிட்டாலும், அது இலங்கையில் காணப்படும் அரசியல் போக்காக உள்ளது என

இவர்கள் கருத்துரைத்தனர். இதன் போது வெளியிடப்பட்ட கருத்துகளின் தொகுப்பாக அமைந்தது "ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் பிரச்சார செயற்பாடுகள் கவர்ச்சி குறைந்தவை. பல மாதங்களுக்கு முன்னிருந்தே தொகுதியின் கிராம சேவையாளர் பிரிவுகளை வகுத்துக் கொண்டு, அவற்றை நம்பிக்கைக்குரிய ஆதரவாளர்களுக்கிடையே பகிர்ந்துக்கொண்டு, மக்கள் சந்திப்புகளை மேற்கொள்ள வேண்டும்.... சிறு கூட்டங்களை நடத்தல் மற்றும் வீடுவீடாகச் செல்லல் சிறந்த உபாய முறையாகும். போஸ்டர்களில் கூட அழகிய படங்களை பயன்படுத்தல், கவர்ச்சிகரமான வாக்கியங்களை பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். மக்களின் தேவைகளை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப துண்டு பிரசுரங்களை தயாரிக்க வேண்டும். இளைஞர்களின் வாக்கு மற்றும் சிதறும் வாக்குகளை அதிகமாக பெற்றுக் கொள்ள பிரச்சார செயற்பாடுகள் மூலமே முடியும்". பெண்கள் குழுவாக வீடுவீடாக செல்லும் போது ஆண்களை விடவும் நல்லமுறையில் வாக்காளர்களோடு பேசுவதற்கு வாய்ப்பு உள்ளதாலும், இன்றைய அரசியலில் காணப்படும் தீய நிலைமைகளை பெண்களுக்கு வாக்களிப்பதனூடாக ஓரளவேனும் மாற்றிக் கொள்ள வழி வகுக்குமென கருத்துரைத்தமை மிகச் சிறந்த உபாயமுறையாகும் என பதிலளிப்பாளர்கள் பெரும்பாலானோர் சுட்டிக்காட்டினர்.

- **தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக நிதியினை திரட்டிக் கொள்ளல்**

ஆய்வுகளில் பங்குபற்றிய சொற்பளவானவர்களைத் தவிர ஏனைய அனைவரும் நிதியினை திரட்டுவதன் அவசியம் மற்றும் தற்போதைய தேர்தல் முறையின் கீழ் நிதிவளம் இல்லாமல் தேர்தலில் போட்டியிடுவதற்கு உள்ள கஸ்டங்கள் தொடர்பில் கருத்துரைத்தனர். ஆண்களுக்கு சமனாக பெண்களும் பல்வேறு சமூகத் தொடர்புகளை பயன்படுத்தி குறைந்தபட்சம் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நிதியினை சேகரித்தல் என்பது அத்தியாவசியமாகுமென இதில் பரிந்துரை செய்யப்பட்டது. நிதி மட்டுமல்ல பொருள் உதவி மற்றும் சேவைகள் போன்றனவற்றையும் பெற்றுக் கொள்ளல் தேர்தல் பிரசாரங்களுக்கு சாதகமாக அமையும் என இவர்கள் சுட்டிக்காட்டினர்.

நிதியினை சேகரிக்கும் போது ஆதரவாளர்களின் தொடர்புகளினூடாக ஆண்களுக்கு அதிகமான சாதகத்தன்மை

காணப்படுவதால் பெண்களுக்கு நிதியினை வழங்குவதற்காக அரச சார்பற்ற விசேடத்துவ நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் அரசியல் கட்சிகளினூடாக பயிலுனர் வேட்பாளர்களுக்கு ஓரளவு ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்றன சாதகமான உபாய முறையாக சிலர் குறிப்பிட்டனர்.

- **பெண்ணொருவருக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக வாக்காளர்களை தெளிவுப்படுத்தல்.**

இலங்கையின் அரசியல் சூழலில் பெரும்பாலான அரசியல்வாதிகள் அல்லது மக்கள், பெண்களின் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம் குறித்து இன்னுமே போதுமானளவு தெளிவு பெற்றிருக்கவில்லை. பெரும்பாலான பிரதிபலிப்பாளர்கள் கருத்துரைத்தமையானது, மக்கள் தலைவிகள் அனைவருக்கும், இவர்கள் கிராம மட்டங்களில் செய்கின்ற பொது வேலைத்திட்டங்களில், இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த முடியும் என்பதாகும். அரசியல் என்பது பாராளுமன்றத்தினுள் அல்லது உள்ளூராட்சி நிருவாகத்தினுள் மட்டும் காணப்படுவது மட்டுமல்ல, எமது வாழ்க்கையுடன் நேரடியாக தொடர்புபடும் செயற்பாடு என்பதால் பெண்களும் இதற்கு செயற்திறனுடன் பங்குபற்ற வேண்டும் என்பதோடு பெண்களின் பிரதிநிதித்துவத்தினூடாக அனைத்து பெண்களினதும் வாழ்க்கை நிலையினை உயர்த்துவதற்காக சிற்சில சட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்க முடியுமென்றும், இதற்காக தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் மக்களுக்கு பறைசாற்ற வேண்டுமென்றும் யோசனைக் கூறப்பட்டது. இந்த தெளிவுபடுத்தல்கள் சிவில் அமைப்புகள், கட்சிகள், ஊடகங்கள், கல்வி மற்றும் மத ஸ்தாபனங்கள் போலவே அரச நிறுவனங்களினூடாக செய்யக்கூடிய மற்றும் செய்யவேண்டியவை என கருத்துரைக்கப்பட்டது.

- **பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக செயற்படக் கூடிய விசேடத்துவ நிறுவனங்களை உருவாக்கல்**

ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட பிரதிபலிப்பாளர்களில் 83% மானோர் பெண்கள் மற்றும் ஆண்கள் மாறுப்பட்ட வகையில் சமூகமயப்படுத்தப்படுவதால் இருசாராரினதும் திறமைகள், ஈடுபாடுகள், விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றன மாற்றமடைதல் பெண்களின் அரசியல் செயற்பாடுகள் சாத்தியமற்று போகின்றமைக்கு

அழுத்தம் கொடுக்கின்றது எனக் குறிப்பிட்டனர். சமமான மனித உயிர்கள் ஆனாலும், பிறப்பிலிருந்தே சமமற்ற முறையில் சமூகமயப்படுத்தப்படுவதால் பெண்களாலேயே மனைசார் செயற்பாடுகள் தமக்குரியது என முன்னிலைப்படுத்திக் கொண்டு செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆண்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகமும் இப்பிரவேசத்தில் பெண்களைப் பார்ப்பதினால் பெரும்பாலும் கட்சி தலைவர்கள் பெண்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்க விருப்பமற்ற நிலையில் உள்ளனர் என்பது இலக்கு குழு கலந்துரையாடல் மற்றும் நேரடி கலந்துரையாடல்களில் வெளியானது. இந்நிலையினை மாற்ற வேண்டுமாயின் சட்ட முறையான மாற்றத்தின் மூலமாக பெண்களுக்கான பங்கொன்றினை ஒதுக்குதல் மட்டும் போதுமானதாக அமையாது என்பதும் பெரும்பாலானோரின் கருத்தாக அமைந்தது. பெண்களிடம் தலைமைத்துவத்திற்கு தேவையான திறமைகள் மற்றும் குணாம்சங்களை அபிவிருத்தி செய்வதற்காக உதவி செய்யக்கூடிய விசேடத்துவ நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் குறுகிய காலத்தில் நல்ல பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியுமென்ற கருத்தும் இங்கு முன்வைக்கப்பட்டது.

ஆண் - பெண் இருசாராருக்கும் சிறுபராயத்திலிருந்து தலைமைத்துவம் மற்றும் புத்தாக்க தன்மையினை விருத்தி செய்வதற்காக ஒட்டுமொத்த ஆண் - பெண் சமூக பிரதிநிதித்துவத்தின் செயல்லொழுங்கில் மாற்றமொன்று ஏற்பட வேண்டுமென்று இச்செயற்பாட்டின் பிரதான செயற்பாட்டாளர்களாக உள்ள குடும்பம், கல்வி நிலையங்கள், மதத்தாபனங்கள், ஊடகங்கள், அரசு, ஏனைய அரசியல் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றன இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென பெரும்பாலானோர் சுட்டிக்காட்டினர். எனினும் இதன் பெறுபேற்றை வெற்றி கொள்ளுவதற்கு நீண்ட காலமெடுக்கும் என்பதால் விசேடமாக அரசியலில் ஈடுபாடு காட்டுகின்ற இளைஞர்கள் மற்றும் சமூக தலைவிகளுக்கு அரசியல் அறிவு மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் இவ்வாறான முறையான விசேடத்துவ நிறுவனங்களினூடாக செய்ய முடியுமென பெரும்பாலானோர் சுட்டிக்காட்டினர்.

மேலும் கட்சி அரசியலில் ஈடுபாடு காட்டுகின்ற பெண்களின் பெயர் பட்டியல் ஒன்றை தயாரித்து அவற்றை குறித்த கட்சிகளுக்கு அனுப்புதல், குறைந்தபட்சம் பயிலுனர் பெண்களுக்கேனும் தேர்தல் செயற்பாடுகளில்

உதவி செய்து தேர்தலில் வெற்றிபெற்றப் பின்னர் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் செயற்பாடுகளைச் சாத்தியமாக்கிக்கொள்ள இவர்களுக்கு ஆலோசனை வழங்கல், திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் பெண்களின் தரத்தினை உயர்த்துவதற்கு தேவையான செயற்பாடுகளை இப்பெண் பிரதிநிதிகளினூடாக நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு வழிநடத்தல் போன்ற காரியங்களை இவ்வாறான நிறுவனங்களினூடாக மேற்கொண்டால் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை பண்பு ரீதியில் அபிவிருத்தி செய்துகொள்ள முடியுமென்பது இக்கருத்தினைத் தெரிவித்த நபர்களின் நிலைப்பாடாக அமைந்தது. மேலும் பங்கு முறையை வெற்றிகொள்ளல் மற்றும் தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள இளைஞர் கோட்டாவில் அரைவாசியை யுவதிகளுக்கு ஒதுக்கிக் கொள்ளல் போன்றவற்றுக்கு அரசாங்கம் மற்றும் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் இவ்வாறான நிறுவனங்கள் முன்னிலை வகிக்கலாம் என இவர்கள் சுட்டிக்காட்டினர். பல்கலைக்கழகங்கள், சமூக அமைப்புகள் மற்றும் கட்சியினுள் சுறுசுறுப்பாக செயற்படும் இளைஞர்களை அடையாளம் கண்டு அவர்களை அரசியலுக்குத் தூண்டும் இலக்கோடு முறையான அரசியல் தலைமைத்துவ பயிற்சி பாடநெறி (கோட்பாடு மற்றும் பிரயோக பயிற்சி) ஆரம்பித்தல் என்பன குறுகிய கால தேவைகளாக அவதானம் செலுத்தப்பட்டது. 35 வயதிற்கு கீழ்பட்ட பெண்களுக்கு இப்பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதோடு இளைஞர் கோட்டாவில் பெண்களுக்கு ஓரளவுக்கு பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ள முடியுமென சிலர் சுட்டிக்காட்டினர். கீழ்நிலைபடுத்தப்படுகின்ற இலங்கையின் அரசியல் கலாசாரத்தினை ஓரளவேனும் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு இது கைகொடுக்குமென்பது சிலரின் நிலைப்பாடாகும்.

இவ்வாறான விசேடத்துவ நிறுவனங்கள் மூலம் பெண்களின் பிரதிநிதித்துவத்துடன் கூடிய உள்ளூராட்சி நிறுவனங்கள் சிலவற்றை முன்னோடி கட்டமைப்புகளாக தேர்ந்தெடுத்து பல்வேறு உதவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்து ஏனைய நிறுவனங்களை விட நல்லதோர் நிலைக்கு கொண்டு வருவது, பெண்களின் பிரதிநிதித்துவ அபிவிருத்திக்கு மறைமுகமான அழுத்தமொன்றை ஏற்படுத்தும் என சிலர் சுட்டிக்காட்டினர்.

**முடிவுரை**

இவ்வாய்வின் மூலம் தெளிவாவது, இலங்கையின் பெண்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் போது விசேடமாக வேட்பு மனுக்களை பெற்றுக் கொடுக்கும் போது ஆண்களுக்கு சமமான அல்லது சமமான பிரஜையாக கருதப்படவில்லையென்பதாகும். மத்திய மாகாணத்தின் அனுபவங்களை பார்க்கும் போது அறியக்கூடியதாகவிருப்பது உள்ளூராட்சி தேர்தலை வெற்றிக் கொள்ளுவதற்கு ஆண்களை விட பெண்கள் கூடுதலான சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது என்பதாகும். 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் வெற்றிபெற்ற பெரும்பாலான ஆண்கள் பயன்படுத்திய சில உபாய முறைகளைப் பெண்களில் பெரும்பாலானோர்களுக்கு பயன்படுத்த முடியவில்லை. எனினும் சில உபாயங்களைப் பயன்படுத்திய பெண்கள் சிறியளவில் வெற்றிகளைப் பெற்றுள்ளனர். பெரும்பாலான பெண்கள் தோல்வியடைய ஆண்களைப் போல் உபாய ரீதியாக மாற முடியாமையும், போதுமான வாய்ப்புகள் கிடைக்காமையும் தனிப்பட்ட, சமூக, கலாசார மற்றும் கட்டமைப்பு / நிறுவனமய சாதனங்களின் எதிர்மறையான அழுத்தங்களும் காரணங்களாகும். WPGG செயற்றிட்டத்தின் கீழ் தலைமைத்துவப் பயிற்சிகளை பெற்ற சமூக தலைவிகள் ஓரளவுக்கு அரசியல் ரீதியாக வலுவூட்டப்பட்டுள்ளதோடு இதன் பெறுபேறாக பெண்கள் பெரும்பாலானோர் சம்பிரதாயபூர்வமான கட்சி தலைமைகளுக்கு சவால் விடுத்தனர். இதற்கு சிறந்த உதாரணம் வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட அதிகமான பெண்கள் கட்சிக்கு சவால்விடுத்து சிறிய கட்சிகள் அல்லது சுயாதீன குழுக்களோடு இணைந்து வேட்பு மனுக்களைப் பெற்றுக் கொண்டமையாகும். எனினும் இப்பெண் வேட்பாளர்களில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் தேர்தலில் தோல்வியடைந்தமையானது நிலையான கட்சிகளுக்கு சவால்விடுத்து குறுகிய காலத்தினுள் வாக்காளர்களின் எண்ணங்களை மாற்றுவதற்கு போதுமான சக்தி மற்றும் காலம் இவர்களுக்கு கிடைக்கவில்லை என்பதையே காட்டுகிறது. எனினும் இந்த தோல்வியடைந்த பெண்கள் 2011 ஆம் ஆண்டுக்கு முன்னரான தேர்தல்களில் பெண் வேட்பாளர்கள் பொதுவில் பெற்றுக் கொண்ட வாக்குகளுக்கு அதிகமான எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்றிருந்தமை வாக்காளர்களின் மனோநிலையில் ஓரளவு மாற்றத்தைக் காட்டுகிறது.

இவ்வாய்வின் மூலம் தெளிவாவது 2011 உள்ளூராட்சி தேர்தல்களில் வெற்றிபெற்ற 10 பெண்களில் ஒன்பது பேர் நீண்ட காலமாக கிராம மட்டங்களில் சமூக, பொருளாதார மற்றும் கலாசார செயற்பாடுகளில் தலைமைத்துவம் ஏற்று, அதனூடாக மக்களின் நன்மதிப்பு மற்றும் நம்பிக்கையை வெற்றிக் கொண்டு, கட்சி தலைமைத்துவத்துடன் தொடர்புகளை கட்டியெழுப்பிய, தேர்தலில் போட்டியிடும் எதிர்பார்ப்பில் நீண்ட காலமாக முன் ஆயத்தங்களுடன் திட்டமிட்ட, இதற்காக குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்களின் ஒத்துழைப்பை பெற்றவர்களாவர். இவர்கள், ஆண்களுக்கு சமனான வகையில் பெரும்பாலான உபாயங்களைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றிக் கொண்டார்கள் என்பது ஆய்வின் மூலம் தெளிவாகியது. வெற்றிபெற்ற பெண்களுக்கு சமமான தலைமைத்துவம், அனுபவங்கள் மற்றும் குணாம்சங்கள் கொண்ட பெண்கள் பலர் தோல்வியடைந்தமை அல்லது சிலர் 2 - 4 வரையான சிறியளவிலான வாக்குகளின் பின்னடைவுக்கு பிரதான காரணமாக தாக்கம் செலுத்தியிருப்பது இவர்கள் கட்சியுடன் குறைவான தொடர்புகளைப் பேணியமை மற்றும் கட்சிகள் இறுதி நேரத்தில் வேட்பு மனுக்களை நிராகரித்தமையுமாகும். இதற்கு சமமான நிலையொன்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்த ஆண் ஒருவருக்கு கிடைத்த பெறுபேறும் இதுவேயாகும். இதனால் இவ்வாய்வில் தெளிவாவது, 2011 உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு அல்லது தோல்வியடைவதற்கு ஆண் - பெண் இருசாரருக்கும் பெரும்பாலும் சமமான விடயங்கள் அழுத்தம் கொடுத்திருப்பினும், அதிக சாதகமற்ற நிலைமைக்கு உள்ளாகியமைக்கு தனிப்பட்ட சமூக, கலாசார மற்றும் நிறுவன சாதனங்களால் ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்களுக்கு குறைவான வாய்ப்பு கிடைத்தமையாகும். பயிற்சி பெற்ற சமூக தலைவிகளில் பெரும்பாலானோருக்கு கட்சியினால் வேட்பு மனுக்கள் பெற்று கொடுக்கப்பட்டிருந்தால் தேர்தல் பெறுபேறுகள் இதனை விட மாற்றமடைவதற்கு வாய்ப்பிருந்தது. இதனால் இவ்வாய்வின் முடிவாக சொல்லக் கூடியது, பெண்களுக்கு அரசியல் தலைமைத்துவ பயிற்சி மற்றும் வேறு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது, பெண் பிரதிநிதித்துவ வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் தடைகளை ஓரளவிற்கேனும் குறைத்துக் கொள்ள கூடியதாயிருப்பினும், எதிர்பார்த்த நோக்கங்களை அதே வகையில் நிறைவேற்றிக் கொள்வது கடினம் என்பதாகும். இதற்கு காரணம் வேட்புமனுக்களை பெற்றுக்கொள்வதிலுள்ள தடைகளை WPGG செயற்றிட்டத்தினூடாக நடைமுறைபடுத்திய உபாயமுறைகள் மூலம் வெற்றிகொள்ள முடியாததோடு மேலும்

அவர்கள் அதே நிலையில் இருப்பதுமாகும். அத்தோடு இவ்வாறான பயிற்சி வழங்குதல் மற்றும் மக்களைத் தெளிவுபடுத்தல் என்பனவற்றின் மூலம் குறுகிய காலத்தினுள் விரைவாக நேர்கணிய பெறுபேறினை பெற்றுக் கொள்வது கடினம் என்பதே ஆய்வின் மூலம் தெளிவாகிறது. இதனை நீண்ட காலமாக வேர்விட்டிருக்கின்ற சமூக பிரச்சினையாகக் கருதி, பெண்களுக்கான பங்கொன்றை வரையறை செய்வதன் மூலம் இதில் தாக்கம் செலுத்தும் பிரதான தடையினை இல்லாமல் செய்துகொள்வதற்கான ஓர் அத்தியாவசியமான பரிந்துரையாக இதனை முன்வைக்க முடியும். இதற்கு சமாந்திரமாக ஏனைய தெளிவுபடுத்தல்கள், தலைமைத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேர்தல் பெண் வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் என்பன கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும். இவ்விரு துறைகளினதும் பிரச்சினைகளை முன்னிருத்தல் சமாந்திரமாக நடைபெறல் வேண்டும். உலகின் பல்வேறு அனுபவங்களினூடு தெளிவாவது, வேட்பு மனுக்களில் பங்கொன்றை ஒதுக்குதல் அவ்வளவு சாத்தியமான முறையொன்று அல்ல என்பதாகும். இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதித்துவத்தில் காணப்படுகின்ற ஆண் - பெண் இடைவெளிகளை நிரப்ப வேண்டுமாயின், மிகவும் சிறந்த முறை பெண்களுக்கான யாப்பு ரீதியாக ஆசன ஒதுக்கு முறையாகும். தற்போதைய அரசாங்கம் பாராளுமன்றத்தில் முன்வைத்த உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்தின் திருத்த சட்ட மூலத்தில் இவ்வாறான பங்கு முறைமைக்கான விதிகளை உள்வாங்குவது காலத்தின் தேவையாகும். எனினும் இதற்காக அரசாங்கத்தினால் எந்தவொரு அவதானமும் செலுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் இப்பிரச்சினை தொடர்பில் ஈடுபாடு காட்டும் அனைத்து நபர்கள் மற்றும் அமைப்புகளின் ஒன்றிணைவு, தற்போதைய நிலையிலும் பார்க்க அதிக அழுத்தத்தை அரசியல் கட்சிகள் மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்துதல் அத்தியாவசியமாகும்.

அட்டவணை: 1

இலங்கை பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் 1947-2010

| வருடம் | மொத்த உறுப்பினர்கள் | மொத்த பெண் உறுப்பினர்கள் | பெண் உறுப்பினர்களின் வீதம் |
|---|---|---|---|
| 1947 | 101 | 3 | 3.0% |
| 1952 | 101 | 2 | 2.0% |
| 1956 | 101 | 4 | 4.0% |
| 1960(மார்ச்) | 157 | 3 | 1.9% |
| 1960(ஜீலை) | 157 | 3 | 1.9% |
| 1965 | 157 | 6 | 3.8% |
| 1970 | 157 | 6 | 3.8% |
| 1977 | 168 | 11 | 6.5% |
| 1989 | 225 | 13 | 5.8% |
| 1994 | 225 | 12 | 5.3% |
| 2000 | 225 | 9 | 4.0% |
| 2001 | 225 | 10 | 4.4% |
| 2004 | 225 | 13 | 5.8% |
| 2010 | 225 | 13 | 5.8% |

மூலம்: இலங்கை தேர்தல் திணைக்களம், கொழும்பு

அட்டவணை: 2

இலங்கை மாகாண சபைகளில் பெண் பிரதிநிதித்துவம் 1993-**2008/09**

| மாகாணம் | 1993 | | | 1999 | | | 2004 | | | **2008/09** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண்கள் | % | மொத்தம் | பெண்கள் | % | மொத்தம் | பெண்கள் | % | மொத்தம் | பெண்கள் | % |
| மேல் | 104 | 7 | **6.7%** | 104 | 2 | **1.9%** | 104 | 6 | **5.7%** | 104 | 6 | **5.7%** |
| வட மத்திய | 33 | 4 | **12.1%** | 33 | 1 | **3.0%** | 34 | 1 | **2.9%** | 33 | 1 | **3.0%** |
| வட மேல் | 52 | 3 | **5.8%%** | 52 | 3 | **5.8%** | 52 | 4 | **7.7%** | 52 | 3 | **5.8%** |
| ஊவா | 34 | 0 | **0.0%** | 34 | 1 | **2.9%** | 34 | 1 | **2.9%** | 34 | 1 | **2.9%** |
| மத்திய | 58 | 1 | **1.7%** | 58 | 3 | **5.1%** | 58 | 3 | **5.2%** | 58 | 5 | **8.6%** |
| தென் | 55 | 2 | **3.6%** | 55 | 1 | **1.8%** | 55 | 1 | **1.8%** | 55 | 2 | **3.6%** |
| சப்ரகமுவ | 44 | 1 | **2.3%** | 44 | 1 | **2.3%** | 44 | 1 | **2.3%** | 44 | 1 | **2.3%** |
| வடக்கு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கிழக்கு | - | - | - | - | - | - | - | - | - | 37 | 1 | **2.7%** |
| மொத்தம் | 380 | 18 | 4.7 | 380 | 12 | **3.2%** | 380 | 17 | **4.5%** | 417 | 20 | **4.8%** |

மூலம்: இலங்கை தேர்தல் திணைக்களம், கொழும்பு

அட்டவணை: 3

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களில் பெண் பிரதிநிதித்துவம் 1999-2011

| உள்ளூராட்சி அமைப்புகள் | 1991 | | | 1997 | | | 2006 | | | 2011* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த உறுப்பிணர்கள் | பெண்கள் | % | மொத்த உறுப்பிணர்கள | பெண்கள் | % | மொத்த உறுப்பிணர்கள் | பெண்கள் | % | மொத்த உறுப்பிண ர்கள் | பெண்க ள் | % |
| மாநகர சபை | 201 | 6 | 2.9 | 252 | 9 | 3.4 | 330 | 10 | 3.0 | | | |
| நகர சபை | 235 | 6 | 2.4 | 331 | 9 | 2.6 | 379 | 13 | 3.4 | | | |
| பிரதேச சபை | 2632 | 42 | 1.6 | 3137 | 55 | 1.7 | 3243 | 51 | 1.6 | 4465 | 85 | 1.9 |
| **மொத்தம்** | **3068** | **54** | **1.8** | **3720** | **73** | **1.9** | **3952** | **74** | **1.8** | | | |

மூலம்: 1991, 1997 மற்றும் 2006 தேர்தல் பெறுபேறு, தேர்தல் திணைக்களம், கொழும்பு

Kodikara, 22th June, 2012, "Changing Minds: Nominations and Votes for Women" paper presented at the Program on Changing Minds: Nominations and Votes for Women, organized by the Women and Media Collective, Colombo, Cinnamon Grand.

*2011 தேர்தல் பெறுபேறுகளுக்கிணங்க மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களினது தகவல்கள் கிடைப்பதில் சிரமங்கள் உள்ளன.

## அட்டவணை: 4

### 2011 உள்ளூராட்சி மன்றங்களில் பெண் பிரதிநிதித்துவம் (மாவட்ட அடிப்படையில்)

| மாவட்டம் | உள்ளூராட்சி அமைப்புகளின் மொத்த பிரதிநிதித்துவம் | மொத்த பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை | பெண்களின் வீதம் % |
|---|---|---|---|
| கொழும்பு | 295 | 14 | 4.74 |
| கம்பஹா | 354 | 11 | 3.10 |
| களுத்துரை | 235 | 4 | 1.70 |
| கண்டி | 338 | 7 | 2.10 |
| மாத்தளை | 155 | 1 | 0.64 |
| நுவரெலியா | 140 | 2 | 1.42 |
| காலி | 244 | 2 | 0.81 |
| மாத்தறை | 200 | 3 | 1.50 |
| அம்பாந்தோட்டை | 141 | 1 | 0.70 |
| குருநாகல் | 340 | 3 | 0.88 |
| புத்தளம் | 161 | 3 | 1.88 |
| அநுராதபுரம் | 203 | 3 | 1.47 |
| பொலந்நறுவை | 91 | 1 | 1.09 |
| இரத்திணபுரி | 229 | 4 | 1.74 |
| கேகாலை | 195 | 1 | 0.51 |
| பதுளை | 215 | 5 | 2.32 |

| | | | |
|---|---|---|---|
| மொணராகலை | 104 | 0 | 0.00 |
| மட்டக்களப்பு | 128 | 4 | 3.12 |
| அம்பாறை | 201 | 4 | 1.99 |
| திருகோணமலை | 118 | 4 | 3.38 |
| யாழ்ப்பாணம் | 224 | 8 | 3.57 |
| கிளிநொச்சி | 38 | 0 | 0.00 |
| மன்னார் | 46 | 0 | 0.00 |
| வவுனியா | 52 | 1 | 1.92 |
| முல்லைதீவு | 18 | 0 | 0.00 |
| **மொத்தம்** | **4465** | **86** | **1.93** |

மூலம்: உள்ளூராட்சி பயிற்சி நிலையம், நவயாலதென்ன, கட்டுகஸ்தொட்ட

**அட்டவணை: 5**

**கலந்துரையாடல்களில் பங்குபற்றி பதிலளித்தவர்கள்**

| **பதவி நிலை** | **பெண்** | **ஆண்** | **மொத்த** |
|---|---|---|---|
| மாகாண சபை அமைச்சர்கள் | 1 | 0 | 1 |
| மாகாண சபை உறுப்பினர்கள் | 3 | 0 | 3 |
| நகர முதல்வர் | 0 | 1 | 1 |
| உதவி மேயர் | 1 | 0 | 1 |
| பிரதேச சபை தலைவர் | 0 | 9 | 9 |
| பிரதேச சபை உறுப்பினர்கள் | 8 | 18 | 26 |
| தோல்வியடைந்த வேட்பாளர்கள் | 14 | 8 | 22 |
| வேட்புமனு நிராகரிக்கப்பட்டவர்கள் | 9 | 2 | 11 |
| நிர்வாக உத்தியோகத்தர்கள் | 2 | 4 | 6 |
| மக்கள் அமைப்பாளர்கள் | 6 | 5 | 11 |
| **மொத்த பதிலளிப்போர்** | 44 | 47 | 91 |

**அட்டவணை: 6**

**இலக்கு குழு கலந்துரையாடல் நடத்தப்பட்ட பிரதேச சபை ஆட்சி எல்லையும் பங்குபற்றி பதிலளித்தோரும்**

| | பிரதேச மற்றும் ஆட்சி எல்லை | பங்குபற்றிய பெண்கள் | பங்குபற்றிய ஆண்கள் | மொத்த பங்குபற்றுனர்கள் |
|---|---|---|---|---|
| கண்டி | உடு நுவர | 19 | 04 | 23 |
| | யடி நுவர | 04 | 22 | 26 |
| | கங்கவட்ட கோரலை | 17 | 02 | 19 |
| | உடபலாத்த | 11 | 07 | 18 |
| | புஜாபிட்டிய | 12 | 08 | 20 |
| | குண்டசாலை | 13 | 03 | 16 |
| | பாத்ததும்பர | 06 | 14 | 20 |
| மாத்தளை | மாத்தளை | 16 | 05 | 21 |
| | தம்புள்ள | 12 | 07 | 19 |
| | கலேவல | 13 | 05 | 18 |
| | பல்லேபொல | 12 | 06 | 18 |
| | உக்குவெல | 13 | 08 | 21 |
| | ரத்தொட்ட | 13 | 11 | 24 |
| நுவரெலியா | அம்பகமுவ | 11 | 12 | 23 |
| | நுவரெலிய-லிந்துலை | 11 | 09 | 20 |
| | கொத்மலை | 10 | 08 | 18 |
| | அங்குராங்கெத்த | 10 | 08 | 18 |
| | ஹட்டன் | 11 | 09 | 20 |
| | மொத்தம் | 214 | 148 | 362 |

## உசாத்துணை நூல்கள்

Benn, S. I. and Peters, R. S. 1965, Social Principles and the Democratic State, London: George Allen and Unwin.

Boutillier, L. 1970, The Making of Political Women, USA: Nelson Hall.

Burrell, B.C. 1994, A Women's Place in the House: Campaigning for Congress in the Feminist Era, Ann Arbour: University of Michigan Press.

Carrell, M.E. 1974, Political Women, Beckenham: Croom Helm.

Center for Women Research (CENWOR), 1994, Women's Political Empowerment and Decision Making, Study Series, No. 8, Colombo: CENWOR.

Cranston, Maurice, 1973, What are Human Rights? London: The Bodley Head.

Dahlerup, D. 1988, "From a Small to a Large Minority: Women in Scandinavia Politics", Scandinavian Political Studies, Vol. 11 (4), pp.275-298.

De Alwis, Malathi, 1995, Gender, Political and the "Respective Lady" in Pradeep Jeganathan and Qadri Ismail (eds) Unmaking the Nation: The Politics of Identity and History in Modern Sri Lanka, Colombo: Social Scientists' Association, pp. 137-57.

de Silva, Wimala, 1979, "Politcal Participation and Decision Making" in Status of Women: Sri Lanka, Colombo: University of Colombo.

de Silva, Wimala, 1985, "Women and Decision Making During the UN Decade for Women" in UN Decade for Women: progress and Achievements of Women in Sri Lanka, Colombo: CENWOR.

de Silva, Wimala, 1995, Political Participation of Women in Sri Lanka: 1985-1995, in Facts of change, Colombo: LENWOR.

Garner, J.W. 1964, Political Science and Governmnet, London; MacMillan.

Johari, J. C. 1999, Principles of Modern Political Science, New Delhi: Sterling Publications.

Kamalawathie, I.M. 1987, "Women in Parliamentary Politics", in Sirima Kiribamune and Vidyamali Samarasinghe, (eds.) Women at the Cross Roads, Sri Lanka, Kandy: International Center for Ethnic Studies, pp.

Kiribamune, Sirima, (ed.) 1998, Women and Politics in Sri Lanka: A Comparative Perspective, Sri Lanka, Kandy: International Center for Ethnic

Studies.

Kiribamune, Sirima, 1994, "Women in Local Government Politics in Sri Lanka", in Women Claim Their Rights in Local Politics, Bangkok: Freidrich Ebert Stiftung, pp. 81-115

Kohn, W. 1980; Women in National Legislatures, New York: Praeger.

Kodikara, Chulani, 2009, The Struggle for Equal Political Representation of Women in Sri Lanka, A Stock Taking Report for the Ministry of Child Development and Women's Empowerment and the United Nations Development Programme, Colombo: Ministry of Child Development and Women's Empowerment and UNDP.

Laski, Harold, 1951, A Grammer of Politics, London, George Allen & Unwin.

Leitan, Tressie 2000, "Women in Political Participation and Decision Making" in Post Beijing Reflections: Women in Sri Lanka - 1995-2000, Colombo: CENWOR: pp. 116-127.

Leitan, Tressie and Gunasekera, Swinitha, 1998, Women in Rural Politics: A Study on Women's Participation in Politics in Selected Rural Areas in Sri Lanka, unpublished research report, Colombo: Social Scientists' Association.

Leitan, Tressies, 1979, Local Governmnet and Decentralized Administration in Sri Lanka, Colombo: Lake House.

Liyanage, Kamala 2005, "Women in Local Self-government in Sri Lanka: Problems, Dilemmas and Challenges, in Excluding Women, (eds.) Morina Perera and Rasika Chandrasekera, Colombo: Social Scientists' Association, pp. 123-144.

Liyanage, Kamala, 1992, Women in National Politics: A Comparative Study between Japan and Sri Lanka, paper presented at the National Convention on Women's Studies, Colombo: CENWOR.

Liyanage, Kamala, 1998, *Sri Lanka Desapalanaya thula Kantha Sahabhagitwaya* (Sinhala), Colombo: Fedrich Ebert Stiftung.

Liyanage, Kamala, 1999, "Women in Political Parties: Sri Lankan Experience", in Sirima Kiribamune (eds.) Women and Politics in Sri Lanka, Sri Lanka, Kandy: International Center for Ethnic Studies, pp. 101-142.

Liyanage, Kamala, 2004, Capacity Building to Improve Participation of Women in Local Goveranance: A Comparative Study, paper presented at the

Ninth national Convention on Women's Studies, Colombo: CENWOR.

Mettananda, T. 1981, "Votes for Women 1923-1931", in Universal Franchise 1931-1981: The Sri Lankan Experince, Colombo: Department of Information.

Moser, Caroline, O.N. 1993, Gender Planning and Development: Theory Practice and Training, London: Routledge.

Norris, P. 1987, Politics of Sexual Equality: The Comparative Position of Women in Western Democracies, Colorado: Bouldor.

Panandiker, Pai, V. A. 2000, Problems of Governance in South Asia, New Delhi: Konrak Publishers.

Phillips, Anne, 1995, The Politics of Presence, Oxford, Clarendon Press.

Samarasinghe, Vidyamali, July 2000, Subverting Patriarchy? Leadership and Participation of Women in Politics in South Asia, Ethnic Studies Report, Vol xviii, No 2, pp. 19-36.

Sawer, Marian, 2000 (Aug 1-5), Representation of Women: Questions of Accountability, paper presented for IPSA Conference, Quebec.

Skjelsback, Inger and Smith, Don 2001, Gender, Peace and Conflict, London: Sage Publications.

Thambiah, Yesmin, (ed.) 2004, Women and Governance in South Asia: Re-imagining the State, Colombo: International Centre for Ethnic Studies.

Thiruchandran, S. 1997, The Politics of Gender and Women's Agency in Post Colonial Sri Lanka, Colombo: Women's Education and Research Center.

ශ්‍රී ලකාවේ පළාත් පාලන ආයතන හා නියෝජන ක්‍රමය පිළිබඳ වැඩි විස්තර සඳහා
Kanesalingam, V. 1971, A Hundred years of Local Governmnet in Ceylon 1865-1965, Colombo: Modern Plastic Woks.

Young, Kate 1993, Planning Development with Women: Making a World of Difference, London: Macmillan.

ළමා සංවර්ධන හා කාන්තා අභිවෘද්ධි අමාත්‍යංශය සහ එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩසටහන, (දිනය සඳහන් නොවේ), කාන්තාවන් පිළිබඳ ජාතික යාන්ත්‍රණය සඳහා බහුවාර්ෂික සැලැස්මක්, කොළඹ.